# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 109 பங்குனி 01ஆம் நாள் வியாழக்கிழமை 15 மார்ச் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## நாடு கடத்தலிருந்து கடைசி நேரத்தில் காப்பாற்றப்பட்ட தமிழ்க் குடும்பம்

கொழும்பு, மார்ச் 15
ஆஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்துவதற்காக வானூர்தியில் ஏற்றப்பட்ட நான்கு பேர் கொண்ட தமிழ்க் குடும்பம் கடைசிநேரத்தில் கீழே இறக்கப்பட்டதாக ஆஸ்திரேலிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
ஆஸ்திரேலியாவில் இணைப்பு நுழைவிசைவு காலாவதியான நிலையில் நடேசலிங்கம், அவரது மனைவி பிரியா மற்றும் இவர்களின் குழந்தைகளான கோபிகா மற்றும் தருணிகா ஆகியோர், நாடு கடத்தப்படுவதற்காக ஆஸ்திரேலிய அதிகாரிகளால் குடிவரவுத் >> 24

## ஆஸி., சுவிஸிலிருந்து
# ஒரே நாளில் 26பேர் நாடு கடத்தப்பட்டனர்
### தமிழர்களும் உள்ளடக்கம்

கொழும்பு, மார்ச் 15
இரண்டு நாடுகளில் புகலிடம் நிராகரிக்கப்பட்ட நிலையில் நாடு கடத்தப்பட்ட 26 இலங்கையர்களுடன், இரண்டு சிறப்பு வானூர்திகள் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தை நேற்றுக் காலை வந்தடைந்தது.
ஆஸ்திரேலியா மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்தே, இரண்டு சிறப்பு வானூர்திகள் மூலம், >> 24

## படிப்படியாக விலகும் தடை
# வட்ஸ்அப் இன்று முதல் இயங்கும்




கொழும்பு, மார்ச் 15
வட்ஸ்அப் சமூக வலைத் தளச் செயலி மீது விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடை இன்று அதிகாலை நீக்கப்பட்டது.
'வட்ஸ்அப் மீதான தடை இன்று (நேற்று) நள்ளிரவு நீங்கும்' என்று அரச தலைவரின் செயலரும். >> 23

## மாயமான மீனவர்களை தேடும் பணிகள் தீவிரம்

முல்லைத்தீவுக் கடலில் கடந்த திங்கட்கிழமை காணாமல் போன மூன்று மீனவர்களையும் தேடும் பணிகள் நேற்றும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன. தேடும் பணிகள் தொடர்கின்றன.
(விரிவு 2 ஆம் பக்கம்)

## தண்ணீரை நாசமாக்குபவர்களைத் தண்டிக்க
# வடக்கில் நீர்ப் பாவனைக்கு இறுக்கமான சட்டம்வேண்டும்
### இல்லையேல் ஒன்றும் செய்ய முடியாது என்கின்றனர் நீர்பாசனத் திணைக்களத்தினர்

யாழ்ப்பாணம், மார்ச் 15
வடக்கில் குடிதண்ணீரின் பெறுமதியை அறியாது பலர் பிழைவிடுகின்றனர். இவர்களின் நாசகாரச் செயல்களுக்கு எம்மால் எதுவும் செய்ய முடியாது கையறு நிலையிலேயே இருக்கின்றோம். தண்ணீர்ப் பாவனைக்கு உரிய சட்டங்கள் எதுவும் இல்லாமையே இதற்குக் காரணம். அழியும் வளத்தை காப்பதற்கு நீர்ப் பாவனைக்கு இறுக்கமான சட்டம் இயற்றப்பட வேண்டும். இவ்வாறு >> 24

# சமூக வலைத் தளங்களை கட்டுப்படுத்த சட்டம் வரும்
### *எதிர்காலத்தில் அவை இறுக்கமான பிடிக்குள் இருக்கும் என்கிறார் ரணில்*

கொழும்பு, மார்ச் 15
அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு மாத்திரமே சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. சமூக வலைத்தளங்கள் விடயத்தில் எந்தவொரு சட்ட ஏற்பாடுகளும் இல்லை. எதிர்காலத்தில் சமூகவலைத் தளங்களைக் கட்டுப்படுத்தும் சட்டம் கொண்டுவரப்படும். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.
கொழும்பு, இசிபதன கல்லூரியில் நீச்சல்தடாக >> 23

## முகநூல் நிறுவனத்தினர்
# ரணிலுடன் கொழும்பில் இன்று சந்திப்பு

கொழும்பு, மார்ச் 15
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவையும், அரச தலைவரின் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோவையும் முகநூல் நிறுவனத்தினர் கொழும்பில் இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். இந்தச் சந்திப்பின் பின்னரே, முகநூல் மீதான தடை நீக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. >> 24

# கல்-மண் அகழ்வால் நீருக்குப் பாதிப்பு
### துரிதமாற்றம் இன்றேல் ஆபத்து என்கிறது நீர்பாசனத் திணைக்களம்

யாழ்ப்பாணம், மார்ச் 15
மண், சுண்ணாம்புக் கல் அகழ்வுகள் காரணமாக நிலத்தடி நீர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றது. குழாய்க் கிணறு அமைப்பதும், இந்தப் பாதிப்பை ஆர் முடுக்கிச் செல்கின் கிறது. இவற்றைக் கட்டுப்படுத்தி துரித மாற்றங்களைச் செய்யாவிடின் அது ஆபத்தாகவே அமையும். >> 24

# விசர் நாய்க் கடியால் குடும்பப் பெண் சாவு
### குட்டி நாய்தானே என்ற கவனவீனத்தால் பரிதாபம்

யாழ்ப்பாணம், மார்ச் 15
விசர்நாய்க் கடிக்கு இலக்கான குடும்பத் தலைவி சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். கடித்தது குட்டி நாய்தானே என்று கருதி அவர் சிகிச்சை பெறாது கவனவீனமாக இருந்துவிட்டார். அதனாலேயே அவரது உயிரிழப்பைத் தடுக்க முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் கிளிநொச்சி கோணாவில் கிழக்கில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த ஆர்.புஸ்பம >> 23

# இலங்கையை வளைத்து போடுகிறது ஜப்பான்
### கடனல்லா உதவிகளுக்கு பச்சைக் கொடி

கொழும்பு, மார்ச் 15
இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு உதவி வழங்கும்போது முடிந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் கடன் அல்லாத நிதியுதவிகளை வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக ஜப்பானிய தலைமை அமைச்சர் சிங்சோ அபே தெரிவித்தார்.
ஜப்பானுக்கு அரச >> 23

## அவசரகால நிலமை
# சனியன்றே அகலும்

யாழ்ப்பாணம், மார்ச் 15
இனக் கலவரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பிறப்பிக்கப்பட்ட அவசரகால நிலமை நாளை மறுதினம் சனிக்கிழமையே நீக்கப்படும் என்று தெரியவருகின்றது.
கடந்த 6ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு அவசரகால நிலமை அரச தலைவரினால் பிறப்பிக்கப்பட்டது. கண்டிக் கலவரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற் >> 24

# இலங்கைக்கு நாளைமுதல் இராஜதந்திரத் தலையிடி!

கொழும்பு, மார்ச் 15
பொறுப்புக்கூறல் உள்பட மிக முக்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் இலங்கை தோல்விப்பாதையில் பயணிப்பதால் பன்னாட்டுச் சமூகம் கடும் அதிருப்திக்குள்ளாகியுள்ளது. இந்த நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 37ஆவது கூட்டத் தொடரில், இலங்கை விவகாரம் நாளை முதன்முதலாக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
பூகோள மீளாய்வுக் கூட்டத் தொடரில், இலங்கையை பன்னாட்டுச் சமூகம் நாளை பிய்த்து உதறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. >> 24



# முல்லைத்தீவில் எறிகணை மீட்பு

முல்லைத்தீவு, மார்ச் 15
முல்லைத்தீவு, சிலாவத்தை தியோ நகரில் வெடிக்காத நிலையில் எறிகணை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.
நேற்றுக் காலை சிலாவத்தை தியோநகர் பகுதியில் திருச்சபை ஒன்றுக்கு சொந்தமான தென்னந்தோட்டக் காணி ஒன்றை உழவியந்திரம் கொண்டு உழும் போதே எறிகணை கண்டுபிடிக்கப்பட்டது. >> 23

# புதுக்குடியிருப்பு பிரதேச சபை கூட்டமைப்பு ஆட்சி நடத்தலாம்
### *தவிசாளர் தலைமையிலேயே முதல் அமர்வு ஆரம்பம்*

யாழ்ப்பாணம், மார்ச் 15
புதுக்குடியிருப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபையில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும், 50 சதவீதமான ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளதால், அந்தச் சபைகளின் முதலாவது அமர்வு >> 24

## தமிழரசுக் கட்சியின்
# உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை சுதந்திரன் பத்திரிகையே கூறும்
### கட்சிப் பத்திரிகை வெளியீட்டு நிகழ்வில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு >> 24

## வாகன விபத்தில் ஒருவர் காயம்

திருகோணமலை, மார்ச் 15

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியிலுள்ள சீனக் குடா நூலகத்துக்கு முன்பாக நேற்று நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

இவர் வீதியை கடக்க முற்பட்டபோதே விபத்துக்குள்ளானார் எனத் தெரிவிக்கப்பட்டது. சீனக்குடாவைச் சேர்ந்த 40 வயதுடையவரே காயங்களுக்குள்ளானார். இவர் கிண்ணியா தள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சீனக் குடா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற-ரி5)

## மாணவருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கொழும்பு, மார்ச் 15

இலங்கை சர்வதேச பாடசாலைகள் ஒருங்கிணைந்த அமைப்பின் ஏற்பாட்டில் நிகழ்வொன்று கொழும்பு பிஸப் கல்லூரியின் கலையரங்கில் நேற்று நடைபெற்றது.

நிகழ்வில் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற பாடங்கள் மற்றும் இணைப்பாட செயற்பாடுகளில் சிறந்த அடைவுகளை பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன், கல்வி அமைச்சின் அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் எஸ். முரளிதரன், கல்வி அமைச்சினது முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-ரி5)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

ஹற்றன், மார்ச் 15

ஹற்றன் குடகமப் பகுதியில் வீடு ஒன்றில் விற்பனைக்காக வைத்திருந்த 63 கிராம் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து சோதனை மேற்கொண்ட பொலிஸார் இவரைக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர் குடாகம பகுதியை சேர்ந்தவர் என்றும், இவர் நீண்டகாலமாக மற்றுமொருவருடன் சேர்ந்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார் எனவும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இவரை விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# முல்லைக் கடலில் மாயமானோரை தேடும் பணிகள் நேற்றும் தீவிரம்



முல்லைத்தீவு, மார்ச் 15

முல்லைத்தீவு நாயாற்றுப்பகுதியில் காணாமற் போன மீனவர்களை மூன்றாவது நாளாக தேடும் நடவடிக்கையில் கடற்படையினரும் விமானப்படையினரும் மீனவர்களும் நேற்றும் ஈடுபட்டனர். எனினும் மாயமானவர்களைக் கண்டுபிடிக்கமுடியவில்லை.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை முல்லைத்தீவு நாயாற்று பகுதியில் இருந்து மூன்று மீனவர்கள் ஒரு படகில் தொழில் நடவடிக்கைக்கு சென்றனர்.

அவர்கள் கரைதிரும்பாத நிலையில் அவர்களை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விமானப்படையினரும் கடற்படையினரும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். விமானப்படையினரின் வானூர்தி ஒன்று நேற்றுக் காலை முல்லைத்தீவு கடலில் தாழப்பறந்து தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்தது. நேற்று மாலை வரை எந்தத் தடயமும் கிடைக்காததால் மீனவர்கள் தொழில் செய்த கடற்பகுதியை மையமாகக் கொண்டு மூன்று படகில் 15க்கு மேற்பட்ட சுழியோடிகள் கடலுக்கு அடியில் தேடுதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற.ரி5.T3)

# மாணவருக்கு கல்வியுடன் விளையாட்டும் அவசியம்

### அகிலவிராஜ் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 15

மாணவர்கள் கல்விக்கு அப்பாற்பட்ட மேலதிக விடயங் களையும் தேடி அறிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். இவ்வாறு கல்வி அமைச்சர் அகில விராஜ்காரியவசம் தெரிவித்தார். கொழும்பு இசிபத்தன கல்லூரியில் நேற்று நடைபெற்ற நீச்சல் தடாகத் திறப்பு விழாவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"விளையாட்டு மாணவர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கல்வி என்பது கற்றல் மட்டுமல்ல கற்பித்தலும் ஆகும்.

மாணவர்கள் கல்வியோடு மட்டும் நின்று விடாது ஏனைய இணைபாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபட வேண்டும்" என்றார். (ற-ரி5)

## ஆபாசப் படம் காட்டிய சாரதிக்கு விளக்கமறியல்

கொழும்பு, மார்ச் 15

பாடசாலை முடிந்துவரும் மாணவிகளுக்கு ஆபாசப் படம் காட்டினார் என்ற குற்றச்சாட்டில் சாரதி ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

அவரை மஹியங்கன நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போது நீதிவான் வீரசிங்க 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

21 வயதான லொறிச் சாரதியே கைதுசெய்யப்பட்டார். பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் இந்த மாணவிகள் பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இரு மாணவிகளுக்கு ஆபாசப் படம் காண்பித்தார் என்று கிடைத்த முறைப்பாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ற-ரி5)

## சொற்பொழிவாளர் வசந்தா காலமானார்



கொழும்பு, மார்ச் 15

ஈழத்தின் பிரபல சமய இலக்கியச்சொற்பொழிவாளரும் மூத்த சைவத் தமிழறிஞருமான வசந்தா வைத்தியநாதன் தனது 81ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

கொழும்பு விவேகானந்த சபை, அகில இலங்கைக் கம்பன் கழகம் போன்ற அமைப்புகளின் ஸ்தாபக உறுப்பினரான அம்மையார் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆலோசகராகவும் செயற்பட்டார்.

ஈழத்திலும் இந்தியாவிலும் பிற நாடுகளிலும் ஆயிரக்கணக்கான ஆலய மற்றும் மாநாட்டு சொற்பொழிவுகளை ஆற்றி இம்மண்ணிற்கு பெருமை சேர்த்தவராவார். ஆலயத் திருவிழாக்களை நேர்முக வர்ணனை செய்வதில் தனித்துவம் வாய்ந்தவராகச் செயற்பட்டார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று வைக்கப்பட்டு, இறுதிச் சடங்கு இடம்பெற்று கல்கிசை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இவரது மறைவுக்கு சைவத்தமிழ் பண்பாட்டுப் பேரவை, கொழும்பு தமிழ்ச் சங்கம் என்பன இவரது மறைவுக்கு இரங்கல் வெளியிட்டுள்ளன. (ற-ரி5)

## ஹரீஸுக்கு எதிரான நடவடிக்கை கண்டிக்கத்தக்க செயற்பாடாகும்

### பாலமுனை மத்திய குழுவின் பொருளாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 15

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியால் பிரதி அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருப்பது மிகவும் கண்டிக்கத்தக்க செயற்பாடாகும்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட இளைஞர் ஒன்றியத்தின் பிரதித் தலைவரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாலமுனை மத்திய குழுவின் பொருளாளருமான எஸ். ரீ.எம்.ஹுசைப் தெரிவித்தார். பாலமுனை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"எமது சமூகத்துக்கு எதிராக நடக்கின்ற மிலேச்சத்தனமான செயற்பாடுகளை மிகவும் தைரியமாக கண்டித்தும், அதற்குக் காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தியும் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையொன்றை எடுக்க கட்சியின் செயலாளர் நிஸாம் காரியப்பர் தீர்மானித்திருப்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும்.

சமூகத்துக்கு அநீதி இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களில் அதற்காக ஒருமித்து குரல் கொடுக்கின்றவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முனைவதா? கட்சியில் இருக்கின்றவர்கள் தனிப்பட்ட குரோதங்களை வெளிக்காட்டுவதை விட்டு ஆளுமை மிக்க அரசியல் பிரதிநிதிகளை உருவாக்குவதில் கட்சியின் தலைமை மிகவும் பொறுப்புடன் செயற்படவேண்டும் - என்றார். (ற-ரி5)

## பள்ளிவாசல் சம்மேளன கலந்துரையாடல் நேற்று

மட்டக்களப்பு, மார்ச் 15

கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்துசித பனக்வெல தலைமையிலான இராணுவ உயர் மட்ட அதிகாரிகளுக்கும், காத்தான்குடி பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் மற்றும் ஜம்இய்யதுல் உலமா சபை பிரதிநிதிகளுக்குமிடையிலான உயர்மட்ட பாதுகாப்புக் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் தற்போதைய பாதுகாப்புநிலமைகள், மற்றும் சமுகங்களுக்கடையிலான புரிந்துணர்வு, பிரதேசத்தில் இனங்களிடையே அமைதியையும் சமாதானத்தையும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

சம்மேளனத்தின் தலைவர் ஏ.எம்.தௌபீக் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் அரசியல் பிரமுகர்கள், சம்மேளன தலைவர்கள் மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபை தலைவர் மௌலவி ஏ.எம்.அலியார் பலாஹி, ஊர்முக்கியஸ்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ற-ரி5)

## குளவிக் கொட்டில் ஐவர் பாதிப்பு

நுவரெலியா, மார்ச்.15

பொகவந்தலாவ, கொட்டியாகலை தோட்டத் தொழிலாளர்கள் ஐவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றது என்று பாதிக்கபட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அதில் நான்கு பெண் தொழிலாளர்களும் ஒரு ஆண் தொழிலாளரும் பாதிக்கப்பட்டதாக மருத்துவமனைப் பேச்சாளர் ஏ.எஸ்.கே.ஜயசூரிய தெரிவித்தார்.

தேயிலை மரத்துக்கு அடிப் பகுதியில் இருந்த குளவிக் கூடு கலைந்து குளவிகள் தொழிலாளர்களைத் தாக்கின என்று பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் குறிப்பிட்டனர். (ற.ரி2)

# உரியமுறையில் பயன்படுத்தினால் மழை நீரே பிரச்சினையைத் தீர்க்கும்

## வடக்கு நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், மார்ச் 15**

**யாழ்ப்பாணத்தில் வருடாந்தம் கிடைக்கும் மழை நீரை உரிய முறையில் பயன்படுத்தினால் எமது தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வை இலகுவாகப் பெறமுடியும். இவ்வாறு வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் சுதாகரன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தின் நீர் வளம் தொடர்பாக யாழ்ப்பாணம் தொண்டமனாறு நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலகத்தில் அணைக்கட்டின் பாதுகாப்பு மற்றும் நீர் வடிகால்கள் உத்தேச திட்டமிடல் பிரிவின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் கடலில் இருந்து நிலமட்டம் 12 மீற்றரே உயரமானது. இலங்கையில் பல ஆறுகள் காணப்படுகின்ற போதிலும் யாழ்ப்பாணத்தில் ஆறுகள் எவையுமே இல்லை. யாழ்ப்பாணத்துக்கு வருடம் ஒன்றுக்கு அண்ணளவாக ஆயிரத்து 250 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. அதில் 30 வீதமான நீர் கடலுக்கு செல்கின்றது. 50 வீதமான நீர் ஆவியாகின்றது. மிகுதி 20 வீதமே நிலத்துக்குக் கீழே போகின்றது. எமக்குக் கிடைக்கின்ற மழை நீரை உரிய முறையில் சேமிக்கும் திறனைக் கொண்டுவந்தால் எமது மாவட்டத்தின் நீர் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

எமது நீர் வளத்தைத் தக்க வைக்க நீரேரிகள் ஊடாகவே சேமிக்க முடியும். அதனாலேயே யாழ்ப்பணத்தில் போரால் பாதிக்கப்பட்ட நீரேரிகளை மீளமைப்புச் செய்கின்ற பணிகளை நாம் துரித கதியில் மேற்கொண்டு வருகின்றோம். கனகராயன் குளத்திலிருந்து நீரைத் தேக்கி குடிநீர் தேவைக்கு மட்டும் குழாய்கள் ஊடாக வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

மழைநீரை பொதுமக்கள் உரிய முறையில் சேமிப்பார்கள் ஆயின் எமது நீர் வளத்தைப் பாதுகாக்க முடியும். எமக்குக் கிடைக்கும் மழைநீரை கடலுக்குள் கலக்க விடாது உரிய முறையில் சேமித்து வைப்பதற்கான முறைகள் ஊடாக நீர் பற்றாக்குறையில் இருந்து எம்மால் மீள முடியும் - என்றார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 1960 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட தொண்டமானாறு உவர் நீர் தடுப்பணை உள்நாட்டுப் போர் காரணமாக முறையான பராமரிப்பின்மையால் பழுதடைந்த நிலையில் நன்னீருடன் உவர் நீர் கலக்கும் அபாய நிலையில் காணப்பட்டது.

கொழும்பு மகாவலி அமைச்சின் கீழ் உலக வங்கியின் 400 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் தொண்டமனாறு தடுப்பணைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. தடுப்பணைகளை அமைக்க கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்ட இரும்புத்தூண்கள், மூங்கில் குற்றிகளுக்கு பதிலாக துருப்பிடிக்காத உலோகங்களைப் பயன்படுத்தி வேலைத்திட்டம் நடைபெறுவதால் இந்தத் தடுப்பணைகள் சுமார் ஐம்பது வருடங்களுக்கு மேல் பாதுகாப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

தொண்டமனாறு நீரேரி ஆறு பிரதேச செயலக பிரிவு வரை பரந்து காணப்படுவதால் பல பிரதேசங்களுக்குத் தேவையான நன்னீரைச் சேமிக்க முடியும். இந்தத் தடுப்பணை ஊடாக வடக்கு மாகாண நிலத்தடி நீர்வளம் பாதுகாக்கப்பட்டுவதுடன் நன்னீர் வளத்தைப் பெருக்க முடிவதுடன் விவசாயத்துக்குத் தேவையான பெருமளவிலான நீர் வளத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ற-8)

# இந்திய வியாபாரிகள் 23 பேர் கைது

கொழும்பு,மார்ச்.15

சுற்றுலா நுழைவிசைவில் நாட்டுக்கு வந்து கொழும்புப் பகுதிகளில் தொழிலில் ஈடுபட்ட இந்திய நாட்டவர்கள் 23 பேர் கைது செய்யப்பட்டனர்.

30 முதல் 35 வயதுக்கு இடைப்பட்டவர்களே குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளினால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் கிடைத்த தகவல்களை அடுத்து நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக திணைக்களத்தின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் 9 பேர் ஜோதிடம் பார்கும் தொழிலில் ஈடுபட்டு வந்ததாகத் தெரியவந்துள்ளது.

மேலும் 9 பேர் ஆடை விற்பனையில் ஈடுபட்டிருந்ததாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்தது.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி நாட்டில் இருந்து திருப்பியனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என திணைக்களத்தின் அதிகாரியொருவர் குறிப்பிட்டார். (ந.ரி2)

# கையூட்டுப் பெற்ற மூவர் கைது

மாத்தளை,மார்ச்.15

மாத்தளைப் பகுதியில், கையூட்டுப் பெற்று வந்த குற்றச்சாட்டில் மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். மாத்தளை விஹால வீதி மற்றும் களுதேவல பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டனர்.

சாரதிகள் மற்றும் பாடசாலை மாணவர்களிடமே சந்தேக நபர்கள் கையூட்டுக் கோரியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை முதல் கம்மடுவ பகுதிவரை சேவையில் ஈடுபடும் சாரதிகளிடமே கையூட்டுக்கோரி தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இதுதொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொங்காவெல மற்றும் அம்பகஹமுவ பிரதேசங்களில் பாடசாலை மாணவர்கள், மேலதிக வகுப்புக்கு செல்லும் மாணவர்களிடமும் கையூட்டுப் பெற்றுள்ளனர். இவர்களை அச்சுறுத்திப் பெற்றுக்கொள்ளும் பணத்தை மதுபானம் பருகப் பயன்படுத்துவதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந.ரி2)

# விஜயகாந்தின் பிணை மனு தள்ளுபடி

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான தேர்தலில் உறுப்பினராகத் தெரிவாகிய முற்போக்கு தமிழ் தேசியக் கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந் சார்பில் முன்வைக்கப்பட்ட பிணை விண்ணப்பம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிவான்மன்றால் சுதர்சிங் விஜயகாந்துக்கு வழங்கப்பட்ட 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனைக்கு எதிராக மேல் நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்படுவதற்கான அறிவித்தல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தண்டனைக் கைதியைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் வைத்திருக்க உத்தரவிடக் கோரிய மனு மீதான கட்டளையை எதிர்வரும் 20ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் நேற்று புதன்கிழமை ஒத்திவைத்தார்.

2013ஆம் ஆண்டு ஜூலை மாதம் வங்கியொன்றில் நகை அடகு வைப்பதற்கு சுதர்சிங் விஜயகாந் சென்றிருந்தார். அந்த வங்கியில் கடமையாற்றும் அலுவலரின் திருட்டுப் போன நகைகளில் 33 பவுண் பெறுமதியான நகைகள் சுதர்சிங் விஜயகாந்திடம் இருந்தன. அதுதொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸார், விஜயகாந் உள்ளிட்ட 4 பேரைக் கைது செய்தனர். தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேகநபர்கள் நான்கு பேரும் ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். விஜயகாந் உள்ளிட்ட நான்கு பேர் மீதும் 103 பவுண் நகைகளைத் திருடியமை உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கோப்பாய் பொலிஸாரால் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. குற்றச்சாட்டுக்களை நான்காவது எதிரி ஏற்றுக் கொண்டதையடுத்து அவருக்கு நீதிமன்றினால் ஏற்கனவே 15 மாத கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ஏனைய எதிரிகள் மூவர் மீதான 2 குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டன. 3 குற்றவாளிகளுக்கான தண்டனைத் தீர்ப்பை கடந்த 8ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் வழங்கினார். முற்போக்கு தமிழ் தேசியக்கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந் உள்ளிட்ட இருவருக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அதே குற்றத்துக்கு மேலும் ஒருவருக்கு 3ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. குற்றவாளிகள் மூவரும் தலா 7 லட்சம் ரூபா இழப்பீட்டை நகையின் உரிமையாளருக்கு வழங்க வேண்டும். செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்றும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று தீர்ப்பளித்தது.

முற்போக்கு தமிழ் தேசியக் கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந் சார்பில் அவரது சட்டத்தரணி சர்மினி அவர்களால், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மேன்முறையீடு செய்வதற்கான அறிவித்தல் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த திங்கட்கிழமை முன்வைக்கப்பட்டது.

தண்டனைக் கைதி சார்பில் மேன்முறையீடு செய்யப்படுவதால் அவரைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என்று விஜயகாந் சார்பில் அவரது சட்டத்தரணி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் விண்ணப்பம் செய்தார்.

அந்த விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் நிராகரித்தார். இந்தநிலையில் விஜயகாந் சார்பில் மீளவும் ஒரு விண்ணப்பம் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டது. அவரை யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து வேறு சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு தடை உத்தரவிட வேண்டும் என்று அவரது சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

விண்ணப்பம் மீதான கட்டளையை இந்த மன்றின் நிரந்தர நீதிவான் எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்குவார் என மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் உத்தரவிட்டார். (ற-103)

# கடந்த ஆண்டை விடவும் பொருளாதாரம் வளர்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 15

கைத்தொழில் சுட்டெண் அதிகரிப்பது பொருளாதார வளர்ச்சியையே காட்டுகிறது. கைத்தொழில் சுட்டெண் என்பது கைத்தொழில் உற்பத்திகளையே குறிக்கின்றன. இந்த ஆண்டு ஜனவரி மாத உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் அதிகரித்திருப்பது நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதையே காட்டுகின்றது.

இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் பா. சிவதீபன் தெரிவித்தார்.

வெளியிடப்பட்டுள்ள கைத்தொழில் உற்பத்தி சுட்டெண் பெறுமதிகளுக்கமைய 2016ஆம் ஆண்டின் டிசெம்பர் மாத உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் இந்த வருட ஜனவரி மாத உற்பத்தி கைத்தொழில் சுட்டெண் 4.3 வீதத்தினால் அதிகரித்துள்ளது என்று தொகை மதிப்பு புள்ளிவிவரத் திணைக்களம் அறிக்கையிட்டுள்ளது.

இது தொடர்பில் கேட்ட போதே வட பிராந்திய முகாமையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:

தரப்பட்ட காலப்பகுதிக்குள் பொருளாதாரத்தின் கைத்தொழில் துறையின் தன்மையைக் கைத்தொழில் சுட்டெண் மூலம் அறியலாம். கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் உள்ளடங்கலாக பொருளாதார குறிகாட்டிகளை தயாரித்து வெளியிடப்படுகிறது. உற்பத்தி துறைகளில் 20 தொழில் நிறுவனங்களில் 11 நேர்மறையான வளர்ச்சியை காட்டுகின்றன. கடந்த வருட இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இந்த வருட ஜனவரி மாதத்துக்கான கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், வடிவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், இயந்திர உபகரணங்கள் ஆகியவை 38.4, 24.4 மற்றும் 16.7 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த வருட ஜனவரி மாதத்துக்கான அடிப்படை உலோக உற்பத்திகள் மற்றும் உணவு உற்பத்தியானது 11.2,3.5 வீதத்தினால் அதிகரித்துள்ளது. அடிப்படை மருந்து பொருள் உற்பத்திகள்,வீட்டு தளபாடங்கள்,கடதாசி மற்றும் கடதாசி உற்பத்திகள் 22.2, 21.1,18.8 வீதத்தினால் வீழ்ச்சி அடைந்துள்ளது.என்றுள்ளது. (ற-111)

# சிறைக்குள் கஞ்சா கடத்திய பெண்ணுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளுக்கு பற்பசைக்குள் ஹெரோயின் போதைப் பொருளை கடத்திய பெண்ணை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் உத்தரவிட்டுள்ளார்.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவரை பார்வையிட கடந்த செவ்வாய்க்கிழமை வந்துள்ளார். அவர் கொண்டு சென்ற பொதியை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சோதனையிட்டுள்ளனர். பொதியில் இருந்த பற்பசையைச் சோதனையிட்டபோது அதற்குள் 4 பக்கற்றுக்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றுக்குள் ஹெரோயின் போதைப்பொருள் உள்ளமையை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கண்டறிந்தனர். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சிறைச்சாலைக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளின் பின்னர் இளம் பெண்ணையும் அவருக்கு உதவிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரையும் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார். (ற-37)

# நில அளவையாளர் சேவைப் புறக்கணிப்பு

கொழும்பு, மார்ச் 15

அரச நில அளவையாளர் சங்கம் நேற்று தொடக்கம் 3 நாள்களுக்கு சேவைப்புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளனர்.

நில அளவையாளர் திணைக் களத்தை தனியார் மயப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தப் புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு எமக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் எனவும்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளோர் தெரிவித்தனர். (ற-ரி5)

## மோட்டார் சைக்கிள் விபத்து இருவருக்கு காயம்

சாவகச்சேரி மார்ச் 15
இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் அவற்றில் பயணித்த இருவருக்கும் கால்களில் பாதிப்பு ஏற்பட்டதால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்றது.
காயமடைந்தவர்களில் ஒருவருக்கு வலது காலும் மற்றவருக்கு இடது காலும் பாதிப்பு உள்ளாகியுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது.
விபத்தில் புத்தளம், மறவன்புலவு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே காயப்பட்டனர். (எ-9)

## தடுக்கி வீழ்ந்து முதியவர் காயம்

சாவகச்சேரி, மார்ச் 15
குடிதண்ணீர் எடுப்பதற்காக தொடருந்து நிறுத்த முன்னர் இறங்கிய முதியவர் தடக்கி வீழ்ந்து காயமடைந்தார்.
இந்தச் சம்பவம் கடந்த 10ஆம் திகதி இரவு சாவகச்சேரியில் இடம்பெற்றது.
பொல்காவலவைச் சேர்ந்த பெரியசாமி சுப்பிரமணியம் (வயது 62) என்பவர் நாவற்குளியில் உள்ள தனது மகனின் வீட்டுக்கு வந்து விட்டு வீடு திரும்புவதற்காக தொடருந்தில் பயணித்துள்ளார். சாவகச்சேரி தொடருந்து நிலையத்தில் தண்ணீர் பிடிப்பதற்காக தொடருந்து நிறுத்த முன்னர் இறங்கியவேளை கால் தடக்கி வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.
முகத்திலும் கையிலும் தலையிலும் காயமடைந்த முதியவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச்.15
நவாலி ஸ்ரீ நாக ராஜராஜேஸ்வரி திருக்கோவில் திவ்ய பிரம்மோற்சவம் நாளைமறுதினம் சனிக்கிழமை பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 26ஆம் திகதி இரவு 7 மணிக்கு முத்துச் சப்பறமும், 29ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நிகழவுள்ளன.
ஏப்ரல் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பூங்காவனத்துடன் திருவிழா நிறைவுபெறவுள்ளது. (எ)

### அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில்

# 3 மாத காலமாக மண்ணெண்ணெய் விற்பனை இல்லை

### சிரமப்படுகின்றனர் பகுதி மக்கள்

அச்சுவேலி மார்ச்-15
**கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் விற்பனை இல்லாததால் பகுதி விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அனுசரணையுடன் அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அங்கு கடந்த டிசெம்பர் மாதம் முதல் மண்ணெண்ணெய் விற்பனை இடம்பெறாமல் உள்ளது. பெரும்போக விவசாயப் பயிர்செய்கை நடவடிக்கைகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை இயக்குவதற்கும், கடற்றொழிலாளர் பயன்படுத்தும் படகுகளின் வெளி இணைப்பு மற்றும் இயந்திரங்களை இயக்குவதற்கும், பொதுத்தேவைகளுக்கு மண்ணெண்ணெய் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
உரிபொருள் விற்பனை நிலையத்தில் 1 லீற்றர் எண்ணெய் 44 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்ற நிலையில் பொது வியாபார நிலையங்களில் 60 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. விவசாயச் செய்கைக்காக பல லீற்றர் கொள்வனவு செய்கின்ற விவசாயிகள் உட்பட கடற்றொழிலாளர்கள் பருத்தித்துறை எரிபொருள் நிலையத்துக்குச் சென்று கொள்வனவு செய்கின்றனர். அன்றி அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்கின்றனர்.
இது தொடர்பில் முகாமையாளருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, மண்ணெண்ணெய் சேமிக்கப்படும் தாங்கியில் துவாரம் ஏற்பட்டுள்ளது. அதனைச் சீரமைப்பது அல்லது புதிய தாங்கியை கொள்வனவு செய்தல் தொடர்பில் எந்த நடவடிக்கையையும் கொழும்பு பெற்றோலிய வளக் கூட்டுத்தாபனமே செய்ய முடியும். அவர்களுக்கு இது தொடர்பில் அறிவித்துள்ளோம். இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரிவித்தார். (எ-11)



க.பரணிதரனின் 'அல்வாய்ச் சண்டியன்' சிறுகதைத்தொகுப்பு வெளியீட்டு நிகழ்வில் எழுத்தாளர் ப.விஷ்ணுவர்த்தினியிடம் இருந்து ஆசிரியர் செல்மர் எமில் நூலின் முதற்பிரதியை பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

## தந்தை செல்வநாயகம் நினைவு தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச்.15
தந்தை செல்வநாயகத்தின் நினைவு தினத்தை முன்னிட்டு போட்டிகள் நடத்தப்படவுள்ளன. செல்வநாயகத்தின் பிறந்த தினம் எதிர்வரும் 31ஆம் திகதியும் மற்றும் அவரின் நினைவு தினம் சித்திரை மாதம் 26ஆம் திகதியும் கொண்டாடப்படவுள்ளன.
செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை நிறுவனத்தினர் தந்தை செல்வா தொடர்பான விழிப்புணர்வை இளைய தலைமுறையினருக்கு ஏற்படுத்தும் வகையில் போட்டிகள் நடத்தி பரிசில்கள் வழங்கவுள்ளனர்.
வடக்கு மாகாண பாடசாலைகள் மட்டத்திலான உயர்தரத்தில் கல்வி பயிலும் பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டி, நாடளவிய ரீதியில் திறந்த போட்டி என இரு பிரிவுகளாக போட்டி இடம்பெறும்.
திறந்த போட்டியில், தந்தை செல்வாவும் சமஷ்டி கோரிக்கையும், அஹிம்சை போராட்டமும் தந்தை செல்வாவும், தந்தை செல்வா விட்டுச் சென்ற தடங்கள், வன்முறைகள் பெருகிவரும் இன்றைய சூழ்நிலையில் தந்தை செல்வா வாழ்ந்திருந்தால்..., ஆகிய தலைப்புகளில் 400500 சொற்களுக்கு மேற்படாமல் கட்டுரை எழுதவேண்டும்.
கட்டுரையினை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாக 'செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை, தந்தை செல்வா இல்லம், தந்தை செல்வா வீதி, தெல்லிப்பளை' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம் மார்ச் 15
சாலையைக் கடக்க முயன்ற முதியவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் சாரதியும் முதியவரும் காயமடைந்தனர்.



இந்தச் சம்பவம் பருத்தித்தறை வீதி ஆவரங்கால் சிவன் கோயில் அருகில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றது.
மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:
பருத்தித்தறை முதன்மை வீதியில் யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் வண்டியில் வேகமாக வந்து கொண்டிருந்த நபர் வீதியை கடக்க முற்பட்ட வயோதிபர் ஒருவருடன் மோதியதால் விபத்து ஏற்பட்டது.
விபத்தில் இருவரும் படுகாயங்களுக்கு உள்ளாகி அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வருடாந்த மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்.15
மூளாய் இந்து இளைஞர் மன்ற மாதிரி முன்பள்ளியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும்.
இந்து இளைஞர் மன்றத் தலைவர் சி.ஜனார்த்தனன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா.குகதாஸ் முதன்மை விருந்தினராகவும் முன்பள்ளி இணைப்பாளர் இ.சத்தியரூபி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கிராமத்தவர்களுக்கு அஞ்சி ஓடி பொலிஸில் கொள்ளையன் சரண்

யாழ்ப்பாணம், மார்ச் 15
வீடு புகுந்து கொள்ளையடித்தவர்களை அயலவர்கள் தடிகளுடன் துரத்திச் சென்றபோது அச்சத்தில் ஓடியவர்களில் ஒருவர் மரங்களுக்குள் மறைந்திருந்திருந்தார். அயலவர்களின் தாக்குதலால் அவர் வெளியே தலைகாட்டவில்லை. பொலிஸார் அங்கு செல்ல அவர்களிடம் ஓடிச் சென்று சரணடைந்தார்.
இந்தச் சம்பவம் பூநகரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாமிப்புலம் பகுதியில் இடம்பெற்றது.
இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
குறித்த பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் கடந்த வியாழக்கிழமை அதிகாலை 4 மணியளவில் கொள்ளையர்கள் சென்றுள்ளனர். அங்கு வீட்டிலிருந்தவர்களைத் தாக்கி பொருள்களைக் கிளறி நகைகள், பொருள்களைத் தேடினர். அங்கிருந்தவர்கள் கூச்சலிட அயலவர்கள் விழித்து நிலைமையை உணர்ந்துகொண்டு மேலும் சிலரையும் சேர்த்து உடனடியாகவே தடிகளுடன் அந்த வீட்டுக்குள் அதிரடியாகப் புகுந்தனர். அவர்களது வருகையை எதிர்பார்க்காத கொள்ளையர் கையில் அகப்பட்டவற்றுடன் அங்கிருந்து தலைதெறிக்க ஓட்டம் பிடித்தனர். அயலவர்களும் விடுவதாக இல்லை. துரத்திச் சென்றபோது குளம் ஒன்றுக்கு அருகாக உள்ள பாதையால் கொள்ளையர் ஓடிச் சென்று காட்டுக்குள் மறைந்து கொண்டனர். அந்தக் கொள்ளையர்களில் இருவர் இருட்டைப் பயன்படுத்தி அங்கிருந்து தப்பியோடிவிட்டனர். அந்த இருவரும் அங்கு அடிக்கடி சென்று வருபவர்கள் என்று கூறப்பட்டது. ஆனால் மூன்றாவது நபர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். அங்கிருந்து தப்பியோட அவரால் இரவில் பாதையைக் கண்டறியமுடியவில்லை. மற்றொருபுறம் அயலர்கள் தாக்கும் நோக்குடன் தடிகளுடன் அங்கு தேடிக் கொண்டிருந்தனர். அதனால் கொள்ளையர் மரங்களுக்கு இடையே மறைந்துகொண்டார். பூநகரி பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் அந்த இடத்துக்கு வந்த பின்னர் அதுவரை மறைந்திருந்த கொள்ளையன் தடிகளுடன் நின்ற கிராமத்தவர்களிடம் அகப்படாது பொலிஸாரிடம் சென்று சரணடைந்தான். பொலிஸார் சந்தேக நபரை அழைத்துச்சென்றனர். கிராமத்தவர்களும் திரும்பிச் சென்றுவிட்டனர்.
கைது செய்யப்பட்டவரிடம் நடத்திய விசாரணைகளின் போது முதல்நாள் அவர்கள் ஓடிவந்த குளத்துக்கு அருகாக வீழ்ந்து கிடந்த 5 பவுண் நிறையுடைய சங்கிலி கண்டெடுக்கப்பட்டது. மற்றைய இருவரும் தலைமறைவாகியுள்ளனர். அவர்களைத் தேடிவருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் கொள்ளையடிக்கப்பயன்படுத்தியதாகக் கருதப்படும் உந்துருளியின் இலக்கம் உள்ளிட்ட விவரங்கள் பெறப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். விசாரணை தொடர்கிறது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-4)

# துன்னாலையில் கசிப்பு தாராளம் அறிக்கையிடுமாறு மன்று பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15

துன்னாலையில் உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய கசிப்புடன் பலர் கைது செய்யப்படுகின்றனர். அங்கு கசிப்பு அதிகளவில் பாவனையில் உள்ளதுபோன்று தெரியவருவதால் அவற்றை விற்பனை செய்பவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கையிடுமாறும் பருத்தித்துறை நீதிவான் நளினி சுபாகரன் நெல்லியடிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

முன்னரைவிட துன்னாலையின் பல இடங்களிலும் கசிப்பு விற்பனை அதிகளவில் உள்ளதாக மன்று கருதுகிறது. அந்த இடங்களிலிருந்தே பலர் கசிப்புடன் கைதாகின்றனர். அந்த இடங்களிலிருந்தே கசிப்பு வாங்கியதாகவும் கைது செய்யப்படுபவர்களது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸாரும் அறிக்கையிட்டுள்ளனர்.
எனவே கசிப்பை உற்பத்தி செய்பவர்கள் மட்டுமல்ல முக்கியாக அவற்றை விற்பனை செய்பவர்கள் தொடர்பில் மன்றுக்கு அறிக்கையிடுமாறு பருத்தித்துறை நீதிமன்று நெல்லிடியப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது. (எ-4)



கைதடி உதவும் கரங்கள் நிறுவனத்தினரால் கைதடி நவபுரம் முன்பள்ளிச் சிறார்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (எ-9)

## விற்பனை நிலையத் தாக்குதல் சட்டத்தரணியுடன் ஒருவர் சரண்

### ஐவருக்கும் விளக்கமறியல் உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 13
கொக்குவிலில் வர்ணப்பூச்சு விற்பனை நிலையத்தை அடித்துச் சேதமாக்கிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் சரணடைந்தார். அவர் உள்ளிட்ட ஐவரையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.
கொக்குவிலில் கடந்த வெள்ளிக்கிழமை தாக்குதல் இடம்பெற்றிருந்தது. அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். பின்னர் மூன்று பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் யாழ்ப்பாண நீதிவான்மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அதன்போது குறித்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மற்றொருவர் சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் சரணடைந்தார். அவர்களை எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நால்வரையும் அன்றையதினம் அடையாள அணிவகுப்புக்கு முற்படுத்துமாறும் நீதிவான் சி.சதீஸ்தரன் நேற்று உத்தரவிட்டார். (எ-4-03)

## விளையாட்டுகளுக்கு விண்ணப்பம் கோரல்

வவுனியா மார்ச் 15
வவுனியா மாவட்டத்தில் கலைமகள் சனசமூக நிலையமும் கலைமகள் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழாவுக்கான விளையாட்டுப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
வடக்கு மாகாண அணிகள் மட்டும் பங்குபற்றக்கூடிய அணிக்கு 4 பேர் கொண்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி, வவுனியா மாவட்ட வீரர்கள் மட்டும் பங்கு பற்றக்கூடிய 40 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி, வவுனியா மாவட்ட வீரர்கள் மட்டும் பங்குபற்றக்கூடிய 5 மைல் மரதன் ஓட்டப்போட்டி மற்றும் வவுனியா மாவட்ட வீரர்கள் மட்டும் பங்குபற்றக்கூடிய கயிறு இழுத்தல் போன்ற போட்டிகளும் தமிழரின் பாரம்பரிய விளையாட்டுக்களான சறுக்கு மரம் ஏறுதல், தலையணை சண்டை, முட்டி உடைத்தல், சங்கீத கதிரை, மூன்று சில்லு சைக்கிள் ஓட்டம் போன்ற விளையாட்டு போட்டிகளும் நடைபெறும்.
சகல போட்டிகளுக்குமான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு 'தலைவர், கலைமகள் சனசமூக நிலையம், மன்னார் வீதி, வவுனியா' என்ற முகவரிக்கோ அல்லது 'திருப்பதி கூல் பார், மன்னார் வீதி, வவுனியா' என்ற முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கவும். (எ-402)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்.மார்ச்.15
யாழ்ப்பாண நீரிழிவு கழகத்தின் நீரிழிவு நோயாளரை இனங்காணும் இலவச மருத்துவ முகாம் சுன்னாகம் பஸ் நிலையத்தின் முன்பாக இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## காணிப் பதிவேடுகள் பொதுமக்கள் பார்வைக்கு

உடுவில் கமநல சேவைகள் நிலையப்பிரிவில் அமைந்துள்ள கந்தரோடை, உடுவில் வடக்கு ஆகிய பிரிவுகளின் வயற்காணிப் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
கமநல சேவை நிலையத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 6ஆம் திகதிவரை பார்வைக்கு வைக்கப்படும். காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை பார்வையிடமுடியும். உரிமை மற்றும் எதிர்ப்புக்கள் ஏதுமிருப்பின் எதிர்வரும் 4ஆம் திகதி முதல் எதிர்வரும் 27ஆம் திகதிவரை அவற்றை பதிவிடலாம் என்று கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (எ-44)

## நூல் வெளியீட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 15
வடமாகாண பண்பாட்டுலுவல்கள் திணைக்களத்தின் 'ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு வீரசிங்கம் மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
சு.செல்லத்துரை தலைமையில் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## யாழ்ப்பாண நகரில் உள்ள கழிவுநீர் வாய்க்கால்கள் சுத்திகரிப்பு

யாழ்ப்பாணம்.மார்ச் 15
யாழ்ப்பாண நகரில் உள்ள கழிவு நீர் வழிந்தோடும் வடிகால் வாய்கள் ஆணையாளரின் நேரடி கண்காணிப்பின் கீழ் சுத்திகரிக்கப்படுகின்றன.
கடந்த இரண்டு நாள்களாக துப்புரவு செய்யும் பணிகள் இடம்பெற்றன.
வடிகால் வாய்களுக்குள் சிலர் சிமெந்து கற்கள் மற்றும் கழிவுகளை போட்டதால் வடிகால் ஊடான வழிந்தோடும் கழிவு நீர் தடைப்பட்டது.
கழிவு நீர் தேங்கியதால் அதனுள் சேறுகள், கழிவுகளும் அதிகமாகக் காணப்பட்டன. நகரில் கே.கே.எஸ் வீதி, கஸ்தூரியார் வீதி போன்ற இடங்களில் ஊடாகச் செல்லும் வடிகால்வாய்களிலேயே இப்படியான சம்பவங்கள் காணப்பட்டதாக மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.
கழிவு நீர் வழிந்தோடுவது தடைப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும். கழிவுகளை அகற்றுவதில் மாநகர சுத்திகரிப்பு பணியாளர்களும் சிரமப்படுகின்றனர். எனவே இவ்வாறான கழிவுகளை வடிகால் வாய்களுக்குள் கொட்ட வேண்டாம் என்றும் மாநகர ஆணையாளர் கேட்டுள்ளார்.
நகரில் உள்ள கழிவு நீர் வழிந்தோடும் வடிகால் வாய்களைப் பாதுகாப்பது அதனைப் பராமரிப்பது சகலரினதும் கடமையாகும். இவ்வாறான கழிவு நீர் தடைப்படுவதால் நகர் பாதிக்கப்படுவதோடு தொற்றுநோய்களும் ஏற்படும். (எ-17)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச்.15
யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம், உலக வர்த்தக நிறுவனத்துடன் இணைந்து 'வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கை' எனும் தலைப்பில் பயிற்சிப் பட்டறை நடத்தவுள்ளது.
யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் நாளை வியாழக்கிழமை மற்றும் மறுநாள் 16ஆம் திகதி ஆகிய இரு தினங்கள் காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 வரை இடம்பெறவுள்ளது.
பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம் தெரிவித்துள்ளது. (எ-112)

## வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு காசோலைகள் வழங்கி வைப்பு



சாவகச்சேரி, மார்ச் 15
மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் ஆண் பெண் மேலைத்தேய வாத்திய இசைக்குழுவுக்கான சீருடைகளும், அலங்காரப் பொருள்களும் கொள்வனவு செய்வதற்கான காசோலை கடந்த 11ஆம் திகதி கல்லூரி அதிபரிடம் கையளிக்கப்பட்டது.
சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் உ.சிசில் றெமிண்டஸின் வேண்டுகோளையேற்று ஜாஎல பமுனுகம லயன்ஸ் கழகத்தினரால், சீருடைகளும் அலங்காரப் பொருள்களும் கொள்வனவு செய்யவென ஒன்றரை இலட்சம் ரூபா காசோலையையும் கல்லூரியில் கற்கும் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கவென 25 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையையும் கல்லூரி அதிபர் த.அம்பலவாணரிடம் கையளிக்கப்பட்டது. சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் உ.சிசில் றெமிண்டஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பன்னாட்டு லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் கமிலஸ் பெர்ணாண்டோ முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் மருத்துவர் வை.தியாகராஜா, ஜாஎல பமுனுகம லயன்ஸ் கழகப் பிரதிநிதிகள் மற்றும் 06 பி1 மாவட்ட லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## மகளிர் சங்க கட்டடத்துக்கு கழிவு ஒயில் ஊத்தப்பட்டது

தென்மராட்சி, மார்ச் 15
மகளிர் தின நிகழ்வுகள் நடத்தவிருந்த வேளையில் மகளிர் அமைப்பின் கட்டடத்துக்கு இனந்தெரியாதோரால் கழிவு ஒயில் ஊத்தப்பட்டது.
இந்தச் சம்பவம் கடந்த வாரம் இரவு சரசாலை வடக்கில் இடம்பெற்றுள்ளது.
பகுதியில் உள்ள மகளிர் அமைப்பினரின் கோரிக்கையை ஏற்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் அமைப்புக்கான கட்டடம் அமைக்கப்பட்டது. கட்டட வேலைகள் முழுமை பெறாததால் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் நிதி ஒதுக்கீட்டில் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கட்டடத்தின் திறப்பு விழாவையும் மகளிர் தின நிகழ்வையும் கட்டடத்தில் கொண்டாட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதெனவும் கடந்த ஆறாந் திகதி இரவு இனந்தெரியாதோர் கட்டடத்தின் மீது கழிவு ஒயில் ஊற்றியுள்ளனர் எனவும் இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# ஆனமடுவ ஹோட்டல் தாக்குதல் முன்னரே நன்கு திட்டமிடப்பட்டது

## பொலிஸ் விசாரணையில் பகீர் தகவல்

கொழும்பு, மார்ச் 15

ஆனமடுவ முஸ்லிம் ஹோட்டல் மீதான பெற்றோல் குண்டுத் தாக்குதல், நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சம்பவத்துக்குப் பின்னரான பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளதாக புத்தளம் மாவட்ட உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெற்றோல் குண்டுத்தாக்குதலுக்கு முன்னையதினம் த.மு.தஸநாயக்க விளையாட்டு மைதானத்தில் இரவோடிரவாக இருபதுக்கும் அதிகமான இளைஞர்கள் ஒன்றுகூடி, இந்தத் தாக்குதலைத் திட்டமிட்டுள்ளனர் என்று விசாரணை அதிகாரிகளின் விசாரணையில் தெரிய வந்துள்ளது. சதித் திட்டம் தீட்டியோரையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பாடசாலை மாணவன் ஒருவன் உள்ளிட்ட 7 பேருக்கு எதிரான தண்டனை சட்டக் கோவையின் 131,140,419 ஆம் அத்தியாங்களின் கீழும் 2007 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பிலான பன்னாட்டு இணக்கப்பாட்டு சட்டத்தின் 3(1) ஆம் அத்தியாயத்தின் கீழும், 2018 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க அவசர கால சட்டத்தின் 24(பிரிவு 1), 12(பிரிவு 1) ஆம் அத்தியாயங்களின் கீழும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதன்படியே அவர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவித்தார்.

**பின்னணி**

கடந்த 11 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் மூன்று மோட்டார் சைக்கிள்களில் வருகை தந்துள்ள சந்தேகநபர்கள் இந்த ஹோட்டல் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றிருந்தனர். முதலில் ஹோட்டலின் முன் பகுதியில் பெற்றோலை ஊற்றிவிட்டு பின்னர்பெற்றோல்குண்டுத்தாக்குதலை நடத்தினர். தீக்கிரையான ஹோட்டலுக்கு அருகில் உள்ள வர்த்தக நிலைய (சி.சி.ரி.வி.) மறைகாணியில் இருந்த பதிவுகளை மையப்படுத்தி சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (7-71)

# அவசரகால நிலமையை நீடித்தால் பன்னாட்டு அழுத்தங்களுக்கு வழிவகுக்கும்

## அஸ்கிரிய பீடம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 15

அவசரகால நிலமையைத் தொடர்ந்தும் நீடித்தால் அது பன்னாட்டு அழுத்தங்களுக்கு வழிவகுக்கும். எனவே நாட்டில் வன்முறைகளற்ற சூழலை விரைவில் உறுதிப்படுத்திய பின்னர் நடைமுறையில் உள்ள அவசரகால நிலமையை நீக்க வேண்டும் என்று அஸ்கிரிய பீடம் தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் அஸ்கிரிய பீடத்தின் அநுநாயக்க தேரர் மெதகம ஸ்ரீ தம்மானந்த தேரர் தெரிவித்ததாவது:

கண்டி உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக வன்முறையான சூழல் காணப்பட்டது. தற்போது அமைதியான நிலை காணப்படுகின்றது. தேசிய பாதுகாப்பு விடயம் முக்கியம் என்றாலும் தொடர்ந்தும் அவசரகால நிலமையை நீடிப்பதானது பன்னாட்டு ரீதியிலான அழுத்தங்களுக்கு வழிவகுக்கும்.

வன்முறைகளினால் கடந்த காலத்தில் இலங்கை பெரிய பின்னடைவுகளை எதிர்கொண்டது. இதற்கு மூன்று தசாப்தகாலப் போர் சிறந்த உதாரணமாகும். எனவே மீண்டும் கடந்த காலத்தை நோக்கி நாம் செல்லக் கூடாது. அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடன் வாழவேண்டும். வன்முறை வருவதற்கான சூழலை ஏற்படுத்தக் கூடாது. சமூக வலைத்தளங்கள் ஊடாகப் பல போலியான பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனரல் இனங்களுக்கு இடையில் அநாவசியமான வெறுப்புணர்வுகள் அதிகரிக்கின்றன. குறிப்பிட்ட தினங்கள் வரையில் சமூக வலைத் தளங்கள் மீதான தடையை அரசு நீடித்துள் ளது. இதன் மூலம் போலியான தகவல்கள் பரவுவதை தடுக்க முடிந்துள்ளது. ஆனால் தொடர்ந்தும் சமூக வலைத்தளம் மீதான தடையை நீடிப்பது முறையல்ல. அரசு இந்த விடயம் குறித்தும் கவனஞ் செலுத்த வேண்டும்.

வெளிநாடுகள் இலங்கை விவகாரங்கள் குறித்து மிகவும் அவதானத்துடன் உள்ளன. சிறிய விடயம் என்றாலும் கூட அது குறித்த கேள்விகளை எழுப்புகின்றன. ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வுகள் இடம்பெறும் சூழலில் இலங்கை தொடர்பில் தவறான நிலைப் பாட்டை உருவாக்கக் கூடிய நிலமைகள் உள்ளன. எனவே நடைமுறையில் உள்ள அவசரகால நிலமையை குறித்து அரசு கவனத்திற் கொள்ள வேண்டும். பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்திய பின்னர் அவசரகால நிலமையை விலக்கிக்கொள்வது சிறப்பானதாக அமையும் - என்றார். (7- 61)

கலைக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான தேர்தல்

# அரசின் நிலைப்பாடு என்ன?

## மாத இறுதிக்குள் தெரியப்படுத்தவேண்டும் என்கிறது கூட்டு எதிரணி

கொழும்பு, மார்ச் 15

கலைக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவது தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை எதிர்வரும் 31ஆம் திகதி அரசு நாட்டுக்கு அறிவிக்கவேண்டும்.

மாகாண சபைகளை ஆளுநரின் அதிகாரத்தின் கீழ் தொடர்ந்து வைத்திருக்க அரசு தீர்மானித்தால் தேர்தலை நடத்தக்கோரி மீண்டும் போராடவேண்டிவரும். அதனால் உடனடியாகத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என கூட்டு எதிர்க்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கூட்டு எதி ரணியின் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஒக்ரோபர் மாதம் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட மாகாணசபை திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது. ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்துடன் காலம் முடிவடைந்திருந்த சப்ரக முவ, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குத் தேர்தலை நடத்தவிருந்த நிலையில் அரசு தேர்தலை பிற்போடுவதற்காக அவசரமாக மாகாண சபை திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகரித்துக்கொண்டது.

குறித்த திருத்தச்சட்டத்தில் விசேட சட்டம் ஒன்று அங்கீகரித்துக்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் மாகாணசபை எல்லை நிர்ணய குழுவொன்றை நியமித்து, குழுவின் பரிந்துரைகளுக்கமைய புதிய தேர்தல் முறையான ஐம்பதுக்கு ஐம்பது என்ற முறையில் தேர்தல் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது மாகாணசபை திருத்தச்சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டு 6 மாதங்கள் நிறைவடைகின்றன. தற்போது கலைக்கப்பட்டிருக்கும் 3 மாகாணசபைகளும் ஆளுநரின் கீழே செயற்படுகின்றன . இதனால் முறையான வரவு - செலவுத் திட்டம் ஒன்று அங்கீகரித்துக்கொள்ளப்படவில்லை. மக்கள் பணிகளை ஆளுநர் என்ற தனிநபர் ஒருவர் மேற்கொள்வதை நாங்கள் நிராகரித்துள் ளோம். அரசும் இதனை நிராகரிப்பதாகத் தெரிவித்திருக்கின்றது. ஆளுநரின் கீழ் அதிகாரம் கொண்டுவரப்படுவது முறையில்லை, தேர்தல் நடத்தப்படவேண்டும் என உயர் நீதிமன்றமும் தெரிவித்துள்ளது.

அதனால் கலைக்கப்பட்டிருக்கும் 3 மாகாணசபைகளுக்குமான தேர்தலை நடத்துவதற்கு எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. அரசின் பரிந்துரைக்கமைய தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் இந்தத் தேர்தலை நடத்துவதா? இல்லையா? என நாங்கள் அரசிடம் கேட்கவிருக்கின்றோம். 31ஆம் திகதிக்குப் பின்னர் கலைக்கப்பட்டிருக்கும் 3 மாகாண சபைகளையும் ஆளுநரின் அதி காரத்தில் இருந்து விலக்கி, மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சிக்கு உட்படுத்துவதற்கு தேர்தலை நடத்துவதா? என்ற செய்தியை அரசு தெரிவிக்கவேண்டும்.

ஏனெனில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணசபைகளின் காலம் முடிவடைகின்றது. இவற்றின் நிர்வாகத்தையும் ஆளுநரின் கீழ் கொண்டுவந்து அரசு தேர்தலை பிற்படுத்து மாக இருந்தால் மக்களின் ஜனநாயக உரிமையான தேர்தலை நடத்தக்கோரி மீண்டும் மக்கள் வீதிக்கிறங்கி போராடும்போது அதற்கு தலைமைத்துவத்தை வழங்க கூட்டு எதிரணி தயாராக இருக்கின்றது - என்றார். (7 -31)

# நீதியரசர் ஈவா வனசுந்தர பக்கச்சார்பாகச் செயற்படுகிறார்

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் நீதிமன்றில் ரிட் மனு தாக்கல்

கொழும்பு.மார்ச்,15

முன்னாள் தலைமை நீதியரசர் மொஹான் பீரிஸ், மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம். நவாஸ் ஆகியோருக்கு எதிராக , கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு தாக்கல் செய்துள்ள வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதை தடை செய்து உத்தரவு பிறப்பித்த, உயர் நீதிமன்றின் நீதியரசர்கள் குழுவில் அங்கம் வகித்த நீதியரசர் ஈவா வனசுந்தர பக்கச்சார்பாகச் செயற்பட்டுள்ளார் என்று தெரிவித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நீக்கம் செய்யக் கோரி இலஞ்ச ஊழல் ஆணைக் குழு நேற்று உயர் நீதிமன்றில் ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் தலைவர் டி.பி. வீரசூரிய உள்ளிட்ட அந்த ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் இணைந்து இந்த ரிட் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். பொறுப்புக் கூறத்தக்க தரப்பாக முன்னாள் தலைமை நீதியரசர் அரச தலைவர் சட்டத்தரணி மொஹான் பீரிஸ், மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம். நவாஸ் உள்ளிட்ட ஐவரை பெயரிட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலஞ்ச ஊழல் சட்டத்தின் பிரகாரம் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம். நவாஸ், முன்னாள் தலைமை நீதியரசர் மொஹான் பீரிஸ் ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினரால் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் உள்ள வழக்கை விசாரணைக்கு எடுப்பதைத் தடுக்கவேண்டும். இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பிப்பதோடு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அரச தலைவர் சட்டத்தரணி உதய ரொஹான் டி சில்வா உள்ளிட்ட நான்கு தரப்பினர் உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தனர்.


இந்த மனுக்கள் உயர் நீதிமன்றில் விசாரணைக்கு வந்த போது, வழக்கை விசாரிக்கும் நீதியரசர்கள் குழுவில் உறுப்பினராக இருந்த நீதியரசர் ஈவா வனசுந்தர, சட்ட மா அதிபராக இருந்த போது, சர்ச்சைக்குரிய குறித்த விவகாரம் தொடர்பில் குறிப்புகள் பலவற்றை இட்டுள்ளதாகவும், அவற்றை இரகசியமாக சீ.எப். கோவைகள் எனப் பெயரிட்டு மன்றில் சமர்ப்பிப்பதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் அரசத்தலைவர் சட்டத்தரணி சஞ்ஜய ராஜரத்னம் நீதிமன்றுக்கு அறிவித்திருந்தார். நீதியரசர் ஈவா வனசுந்தர அந்த கோவைகளின் விடயங்களை வெளிப்படுத்தாமல், இந்த வழக்கில் எல்லா தரப்பினரதும் சட்டத்தரணிகள் விசாரணைகளில் பங்கேற்பதையும் எதிர்க்கவில்லை. அதன்பின்னர் அந்த மனுக்களை ஆராய்ந்த உயர் நீதிமன்றம், சம்பவம் தொடர்பில் நீதிவான் நீதிமன்றில் முறைப்பாட்டை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதை தடுத்து இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தது. இந்த உத்தரவு குறித்த மனுக்களை விசாரணை செய்து முடிக்கும் வரை செல்லுபடியானதாகும் சட்ட மா அதிபர் தரப்பு நீதிமன்றுக்கு கொடுத்த தகவல்கள் ஊடாக, ஈவா வனசுந்தர சட்ட மா அதிபராக இருந்த போது, இந்த சம்பவத்துடன் தொடர்புடைய தீர்மானங்களை எடுத்துள்ளதாகவும் அந்த சம்பவத்தை அவர் பூரணமாக அறிந்திருந்ததாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

அதன்படி நீதியரசர் ஈவா வனசுந்தர பக்கச்சார்பாக நடந்துகொண்டுள்ளதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளை மீறியுள்ளார் என்றுள்ளது.

இந்த விவகாரம் பொது மக்கள் ஆவலாக எதிர்பார்க்கும் விடயம் என்பதால் ஐவர் கொண்ட நீதியரசர்கள் குழு முன் விசாரணைக்கு எடுக்குமாறும் பொறுப்புக் கூறத்தக்க தரப்புக்கு அறிவித்தல் விடுக்குமாறும், எஸ்.சீ. 22/2018 எனும் ரிட் மனுவுக்கு அமைவாக விடுக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவை நீக்கி உத்தரவிடுமாறும் இலஞ்ச ஊழல் ஆணைக் குழு தமது மனுவூடாக உயர் நீதிமன்றைக் கோரியுள்ளது. (7- 71)

## முஸ்லிம் எம்.பிக்கள் கலந்தாலோசனை

முஸ்லிம்களுக்கெதிரான இனவாத வன்செயல்கள் இனிமேலும் இடம்பெறாது தடுப்பதற்கான செயற்பாடுகள் அவசரமாக முன்னெடுக்கப்பட வேண்டியதை அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் வலியுறுத்திக் கூறுவதற்கும், வன்செயல்கள் பற்றிய உரிய சான்றுகளை முன்வைப்பதற் கும் அதிகபட்ச இழப்பீடுகளை பாதிக்கப்பட்டவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்துவதற்கும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்தாலோசித்துள்ளனர். (5)



நன்றி : டெய்லி மிரர்

# மைத்திரியின் யோசனைக்கு ஐ.தே.கவினர் போர்க்கொடி!

## அமைச்சரவைக் கூட்டத்தில் ஆட்சேபனை வெளியிட மூத்த உறுப்பினர்கள் முடிவு

கொழும்பு, மார்ச் 15

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இயங்கிய தேசிய பொருளாதார முகாமைத்துவ சபையைக் கலைப்பதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்கு கடும் எதிர்ப்பை வெளியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் சிலர் தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தின்போதே தமது ஆட்சேபனையை அவர்கள் முன்வைக்கவுள்ளனர் என்று சிறிகொத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசிய அரசுக்குள் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தும் வகையில் அரச தலைவர் செயற்படுகின்றார் என்றும், இரண்டாம்கட்ட அமைச்சரவை மாற்றத்தின்போது முக்கிய சில திணைக்களங்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வசமாகும் வகையில் மாற்றங்களை செய்வதற்கு உத்தேசித்துள்ளார் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

உயர்தர வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ரப் வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியால் முன்வைக்கப்பட்ட யோசனையும் அரச தலைவரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. பொருளாதார முகாமைத்துவ சபையையும் விட்டுக்கொடுத்தால் அது பலவீனமாக அமைந்துவிடும் என்பதே மூத்த அமைச்சர்களின் கருத்தாக இருக்கின்றது.

பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இறுதி முடிவை எடுப்பதற்காக ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தேசிய பொருளாதார முகாமைத்துவ சபையொன்று உருவாக்கப்பட்டது. பொருளாதார விவகாரங்களுக்கான ரணிலின் ஆலோசகரான ஆர். பாஸ்கரலிங்கம், சரித ரத்வத்த மற்றும் நிதி அமைச்சின் செயலர் ஆர்.எச்.எஸ் சமரதுங்க ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அமைச்சர் சரத் அமுனுகமவும் இந்தக் குழுவில் அங்கம் வகித்தனர்.

மேற்படிக் குழு கலைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது மைத்திரியால் முன்வைக்கப்பட்டது.

பொருளாதார முகாமைத்துவ சபையால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வெற்றியளிக்கவில்லை எனச் சுட்டிக்காட்டிய மைத்திரி, ஹொரணை ரயர் உற்பத்தில் நிலையம் உள்பட மேலும் சில திட்டங்களை உதாரணம்காட்டிப் பேசினார். அமைச்சரவையால் நியமிக்கப்படும் குழுவொன்றின் ஊடாக பொருளாதாரத் திட்டங்களைக் கையாண்டால் அது சிறப்பாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் மார்ச் 6 ஆம் திகதி நடைபெறவிருந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இறுதி முடிவெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும் கண்டியில் ஏற்பட்ட கலவரம் காரணமாக அன்றைய தினம் இது பற்றிப் பேசப்படவில்லை.

மைத்திரிபால சிறிசேன இந்தியா, ஜப்பான ஆகிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளதால் நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவில்லை. அரச தலைவர் மைத்திரி நாடு திரும்பியதும் எதிர்வரும் 20 ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும். இதன்போதே ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களால் எதிர்ப்பு வெளியிடப்படும் என்று அறிய முடிகின்றது. (5)

# சீன ஆதிக்கத்துக்கு உடன் முடிவு கட்டுக!

## மைத்திரியிடம் நேரில் மோடி வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 15

இலங்கையில் இனிமேலும் சீன ஆதிக்கத்துக்கு இடமளிக்கவேண்டாமென அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் நேரடியாகவே இந்தியத்தலைமை அமைச்சர் நரேந்திர மோடி எடுத்துரைத்துள்ளார் என்று இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

புதுடில்லியில் நடைபெற்ற பன்னாட்டுச் சூரியசக்தி கூட்டமைப்பின் மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியா சென்றிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திரமோடி சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தியாவின் நிதியுதவியுடன் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித்திட்டங்கள், எட்கா உடன்படிக்கை, மத்தள வானூர்தி நிலைய அபிவிருத்தி ஆகியன தொடர்பிலும், இரு நாடுகளுக்குமிடையிலான அரசியல், பொருளாதார உறவுகளை மேம்படுத்துவது சம்பந்தமாகவும் சந்திப்பில் பேசப்பட்டுள்ளது.

இதன்போதே இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ள இந்தியத் தலைமை அமைச்சர், கொழும்பில் சீனக் கடைகள் திடீரென முளைத்துள்ளதை கோடிகாட்டி மைத்திரிபால சிறிசேன அண்மையில் வெளியிட்டிருந்த கருத்தையும் நினைவுபடுத்தியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இனியும் சீன ஆதிக்கத்துக்கு இடமளிக்கவேண்டாமெனக் கோரியிருப்பதாகவும், அயலுறவுக்கொள்கை வகுப்பின்போது டில்லிக்கே கொழும்பு முதலிடம் வழங்கும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பதிலளித்தார் என்றும் இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. (5)

# ஜெனிவாவில் முஸ்லிம்கள் நீதி கோரி ஆர்ப்பாட்டம்!

## ஐரோப்பிய நாடுகளிலிருந்து அணிதிரள்வர் திங்கட்கிழமை பெருமெடுப்பில் நடத்த ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 15

இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிராக அண்மையில் நடைபெற்ற வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நீதிகோரியும் எதிர்வரும் திங்கட்கிழமை ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை முன்பாக மிகப் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுவிற்ஸர்லாந்தை தளமாகக் கொண்டுள்ள ஐரோப்பிய இஸ்லாமிய தகவல் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கான அனுமதியை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை வழங்கியுள்ளது.

பிரான்ஸ், ஜேர்மனி உட்பட்ட ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் லண்டனிலிருந்தும் பெருமளவில் முஸ்லிம்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் இலங்கையில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டது தொடர்பில் முழு விவரங்கள் அடங்கிய மனுவொன்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (5)





சட்டவிரோத குடியேற்றவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்காக, இலங்கைக் கடற்படைக்கு இரண்டு படகுகளை ஆஸ்திரேலிய அரசு நேற்று வழங்கியுள்ளது. காலி கடற்படைத் தளத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில், இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர், கடற்படைத் தளபதியிடம் இந்தப் படகுகளைக் கையளித்தார். கடற்படையின் கடலோரப் பொலிஸ் பிரிவுக்கு இந்தப் படகுகள் வழங்கப்பட்டுள்ளன. (5)

சிவனொளிபாதமலையில்

# 12 லட்சம் பிளாஸ்ரிக் போத்தல்கள் மீட்பு

கொழும்பு, மார்ச் 15

சிவனொளிபாதமலைக்கு உள்பட்ட பகுதிகளிலிருந்து 12 லட்சம் பிளாஸ்ரிக் போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன. அங்கு வந்த யாத்திரிகர்கள் பயன்படுத்தி வீசிய போத்தல்களே இவ்வாறு சேகரிக்கப்பட்டுள்ளதாக மீள்சுழற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி ஹேமந்த தெரிவித்தார்.

நல்லதண்ணி நகரத்திலிருந்து சிவனொளிபாத மலை உச்சி வரை இந்த பிளாஸ்டிக் குடிதண்ணீர் போத்தல்கள் மற்றும் மென்பான போத்தல்கள் வீசப்பட்டுள்ளன. இனிவரும் காலங்களில் சிவனொளிபாதமலை பருவ காலத்தில் புனித பூமி சூழலுக்கு உக்கலடையாத போத்தல்கள் உள்ளிட்ட பொருள்களை வீசுவதிலிருந்து தவிர்த்து சூழலுக்கு இணக்கமான பருவகால வழிபாடுகளில் ஈடுபடுமாறு அனைத்து யாத்திரிகர்களிடமும் கேட்டுகொள்வதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (5)

# ஜப்பானில் மைத்திரியின் நிகழ்வில் ஞானசார தேரர்

கொழும்பு, மார்ச் 15

ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அங்குள்ள இலங்கையர்களுடன் நடத்திய கலந்துரையாடலில் பொதுபலசேனா அமைப்பின் செயலர் ஞானசாரதேரருக்கு முன்வரிசையில் இடம்வழங்கப்பட்டுள்ளது.

மைத்திரியின் கூட்டத்தில் ஞானசாரதேரர் பங்கேற்றமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஜப்பானுக்கு அரச முறைப் பயணமாக, அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன சென்றுள்ளார். ஜப்பானிலுள்ள இலங்கையர்களை நேற்று முன்தினம் இரவு, இம்பீரியல் ஹோட்டலில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்த நிகழ்வில் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசார தேரரும் கலந்து கொண்டுள்ளார்.

கண்டிக் கலவரங்கள் இடம்பெற்றுள்ள சூழலில், அரச தலைவர் மைத்திரியின் நிகழ்வில் ஞானசாரதேரர் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

### தடைகளால் 200 மில்லியன் ரூபா அதிகரிப்பாம்

கூறுகிறார் மைத்திரி

சமூக வலைத்தளங்கள் மீதான தடை காரணமாக அரசின் வருமானம் அதிகரித்துள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். ஜப்பானில் உள்ள இலங்கையர்களைச் சந்தித்து, உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார். சமூக வலைத்தளங்கள் மீதான தடை காரணமாக சிறிலங்கா ரெலிக்கொம் மற்றும் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு என்பனவற்றுக்கு நாளொன்றுக்கு 200 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான நிதி கிடைத்துள்ளதாக மைத்திரி குறிப்பிட்டுள்ளார். (5)

# கண்டி வன்முறையை கூட்டு எதிரணி மீது சுமத்தி தப்பிக்கொள்வதற்கு முயற்சிக்கின்றது அரசு

## சாடுகிறார் வாசுதேவ நாணயக்கார



கண்டி வன்முறையை அரசு கூட்டு எதிரணி மீது சுமத்தி தப்பிக்கொள்ள முயற்சிக்கின்றது. தேவையான நேரத்தில் உரிய நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொண்டிருந்தால் இவ்வளவு அழிவு ஏற்பட்டிருக்காது. பொலிஸாரும் அவர்களுக்குப் பொறுப்பாக இருந்த தலைமை அமைச்சருமே இதற்குப் பொறுப்புக் கூறவேண்டும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். ஜனநாயக இடதுசாரி முன்னணி கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கண்டி திகன மற்றும் தெல்தெனியப் பிரதேசங்களில் சில தினங்களுக்கு முன்னர் தலைதூக்கிய வன்முறைச் சம்பவமானது மிகவும் திட்டமிட்டமுறையில் மேற்கொள்ளப்பட்டதாகவே தெரிகின்றது. இந்த அசம்பாவிதம் வேறு பிரதேசங்களுக்கும் பரவுவதற்குப் பொலிஸாரின் நடவடிக்கையே காரணமாகும். அந்தப் பிரதேசத்தில் அசம்பாவிதம் இடம்பெறும் சாத்தியம் இருப்பதை அறிந்துகொண்டும் அதற்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ளப் பொலிஸார் தவறியுள்ளனர். அசம்பாவிதம் இடம்பெறும்போது பொலிஸாருக்கு பொறுப்பான அமைச்சராகத் தலைமை அமைச்சரே செயற்பட்டார். அவரும் தனது கடமையை நிறைவேற்றத் தவறியுள்ளார். தலைமை அமைச்சர் இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டும். அரசுக்குள் தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, மத்திய வங்கிப் பிணைமுறி விவகாரத்தில் அவருக்கு இருக்கும் தொடர்புகள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்குக்கும் குழப்ப நிலை ஆகிய பிரச்சினைகள் இருக்கும் நிலையில் இவ்வாறானதொரு சிக்கல் ஏற்பட்டது தலைமை அமைச்சரைப் பொறுத்தவரை மகிழ்ச்சியளிக்கும் விடயமாகும். ஏனெனில் அனைவரதும் கவனம் தற்போது கண்டிப் பிரச்சினைக்கு மாறியுள்ளது -என்றார். (21,31)

# சமூக ஊடகங்கள் மீதான தடை நீக்கப்படவேண்டும்

## முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சரும் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 15

சமூக ஊடகங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையானது சுற்றுலாத்துறை உள்ளிட்ட பலவற்றில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதன் மீதான தடை விரைவில் நீக்கப்படவேண்டும். இவ்வாறு அமைச்சர் சாகல ரட்னாயக்க தெரிவித்துள்ளார். கண்டிக் கலவரத்தைத் தொடர்ந்து சமூக ஊடகங்கள் மீது தடை விதிக்கப் பட்டது. இந்தத் தடையை நீக்குமாறு அரசிலுள்ள அமைச்சர்களும் குரல் கொடுத்து வருகின்றனர். இவ்வாறானதொரு நிலையிலேயே, முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்னாயக்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தனது கீச்சகத்தில், சமூக ஊடகங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை பல தொழிற்துறைகளில் பாதிப்பை ஏற்படுத்தும். பொருளாதாரத்தில் பல இழப்புகள் ஏற்படக்கூடும். ஆகையினால் பொருளாதாரம் பாதிக்கப்படுவதற்கு முன்னர் அரசு இது குறித்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று குறிப்பிட்டுள்ளார். (5)

# வைபரைப் போன்று முகநூல் மீதான தடையையும் நீக்குக!

## அரசிடம் கோருகின்றது பிரிட்டன்



கொழும்பு, மார்ச் 15

வைபர் மீதான தடை நீக்கத்தை வரவேற்றுள்ள இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டாரீஸ், முகநூல் மீதான தடையையும் நீக்க வலியுறுத்தியுள்ளார்.

"வைபர் மீதான தடை நீக்கப்பட்டமை நல்ல விடயம். அதே போன்று முகநூல் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் முழுமையாகச் செயற்பட விரும்பும் அனைவரது நம்பிக்கைக்கும் இடமளிக்கவேண்டும். சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் நவீன பொருளாதாரத்துக்கு இலவச சமூக ஊடகங்கள் முக்கிய காரணியாகும். அண்மைய வன்முறைகள் மற்றும் வெறுப்புணர்வூட்டும் கருத்துக்களால் ஆயிரக்கணக்கானோர் அச்சமடைந்துள்ளனர். சமூக ஊடகங்கள் ஊடாக இன மற்றும் மத வெறுப்புக்களைத் தூண்டிவிடும் செயற்பாடுகளுக்கு எதிராகச் சட்டத்தை வலுப்படுத்தும் அரசின் செயற்பாடுகள் முக்கியமானது" என்று பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டாரீஸ் தனது கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார். (5)



# மகிந்தவின் எழுச்சியால் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 15

உள்ளூராட்சித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவின் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி வெற்றி பெற்றதையடுத்து, அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு 1.18 ரூபாவினால் (0.76 வீதம்) வீழ்ச்சி கண்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள அரசியல் உறுதிப்பாடின்மையால், பொருளாதாரம் ஆட்டம் கண்டு வருகிறது. கடந்த பெப்ரவரி 9ஆம் திகதி 156.19 ரூபாவாக இருந்த அமெரிக்க டொலர் ஒன்றின் மதிப்பு 157.37 ரூபாவாக வீழ்ச்சி கண்டது. இது முன்னொரு போதும் இல்லாதளவு வீழ்ச்சியாகும்.

கண்டியில் வன்முறைகள் வெடித்த பின்னர், அமெரிக்க டொலரின் மதிப்பு 56 சதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது.

இந்த ஆண்டில் மாத்திரம், அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் ம்திப்பு 2.22 ரூபாவினால் குறைவடைந்துள்ளது. இது 1.43 வீதவீழ்ச்சியாகும். (5)

### அட! அப்படியா சங்கதி!!

## தூக்கப்படும் செயலர்

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் நிகழ்ச்சி நிரல்களை ஒழுங்குசெய்து கொடுக்கும் செயலர் ஒருவரின் செயற்பாடுகள் குறித்து கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்கள் மகிந்தவிடம் கடுந்தொனியில் தெரிவித்துள்ளனராம்.

மகிந்தவைச் சந்திக்க வரும் அரசியல்வாதிகள் மற்றும் முக்கியஸ்தர்களிடம் கடுமையாக நடந்து கொள்வதால் இவரை 'சஜின் வாஸ் நம்பர் 2' என்ற அடைமொழியில் அழைக்கும் கூட்டு எதிர்க்கட்சித் தலைவர்கள், மகிந்தவைச் சந்திப்பதற்குக் கூட இவரின் அனுமதியைப் பெற வேண்டிய நிலைமை இருப்பதாகத் தெரிவித்துக்,கவலைப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலால் ஆடிப்போயுள்ள மகிந்தர், கூட்டு எதிர்க்கட்சியின் அப்புத்தளை பிரதேச அமைப்பாளராக இவரை நியமிக்குமாறும், தனக்கு புதிய ஒருவரை செயலராக நியமிக்குமாறும் ஆலோசனை வழங்கியுள்ளாராம்.

### லசந்த கொலை

# விசாரணை வளையத்திலிருக்கும் மேஜர் ஜெனரல் கருணாசேகர ஓய்வு

இராணுவத் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகர, நேற்றுமுன்தினத்துடன் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். இதனையடுத்து இராணுவத்தின் இரண்டாவது நிலைத் தளபதிப் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இலகு காலாட்படையைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகர, கடந்த 2017ஆம் ஆண்டு ஜூலை 21ஆம் திகதி இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

ஓய்வுபெற்றுச் செல்லும் மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகரவுக்குப் பனாகொடவில் உள்ள இலகு காலாட்படை தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் பிரியாவிடை அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

இவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். 2009ஆம் ஆண்டு இவர் இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளராக இருந்த போதே, சண்டே லீடர் ஆசிரியர் லசந்தவிக்கிரமதுங்கபடுகொலை இடம்பெற்றிருந்தது. இந்தக் கொலை தொடர்பாக, மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகரவிடம் அண்மையிலும் விசாரணை நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (5)



### கண்டிக் கலவரத்தால்

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவுக்குப் படையெடுப்பு

கொழும்பு, மார்ச் 15

கண்டியில் கடந்த வாரம் ஏற்பட்ட இன வன்முறையைத் தொடர்ந்து பெருந்திரளான சுற்றுலாப் பயணிகள் நுவரெலியா மாவட்டத்தை நோக்கி வருகைதந்த வண்ணமுள்ளனர்.

கண்டிக் கலவரத்தால் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தமது சுற்றுலாவுக்காக நுவரெலியா, எல்ல, சிவனொளிபாத மலை, ஹோட்டன் பிலேஸ் உள்ளிட்ட பிரதேசங்களை நோக்கிப் படையெடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பதுளை நோக்கி நேற்றுச் சென்ற உடரட்ட மெனிக்கே மற்றும் பொடி மெனிக்கே ஆகிய தொடருந்துகளில் அதிகமான வெளிநாட்டுச் சுற்றலாப் பயணிகளே காணப்பட்டனர்.

ஹற்றன் தொடருந்து நிலையத்தில் வழமைக்கு மாறாக அதிகமான சுற்றுலாப் பயணிகள் நேற்று வந்து இறங்கினர் என்று அங்கு கடமை புரியும் ஊழியர் ஒருவர் தெரிவித்தார். (5)

# முகநூல் தடையால் நாட்டுக்குப் பாதிப்பு!

### அமெரிக்க த்தூதர் மீண்டும் விசனம்

கொழும்பு, மார்ச் 15

இலங்கையில் சமூக வலைத்தளங்கள் மீதான தடை நீண்ட நாள்களாகத் தொடர்வதால், நாட்டின், சுற்றுலாத் துறை, தகவல் தொடர்பாடற் துறை மற்றும் பொருளாதாரத் துறை என்பவற்றுக்கு அதிக பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கேசப் கவலை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் மதிப்பு மற்றும் வெளிப்படைத் தன்மையிலும் மேற்படி தடை பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் அதுல் கேசப் கீச்சகத்தில் பதிவு செய்துள்ளார்.

முகநூல் தடை தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் முன்னரும் விமர்சனம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# கத்திக் குத்தில் இளைஞர் பலி

மோதரை பொலிஸ்ப் பிரிவுக்குட்பட்ட ஏனமுல்ல ரந்தி உயன பிரதேசத்தில் முச்சக்கர வண்டியில் வந்த ஒருவர் இளைஞன் மீது கத்திக் குத்துத் தாக்குதல் மேற்கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் கொழும்புத் தேசிய வைத்தியசாலைக்கு உடனடியாக எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப் பட்ட போதிலும் உயிரிழந்துள்ளார். கொட்டாஞ்சேனை வாசல வீதியைச் சேர்ந்த 25 வயதுடைய் இளைஞனே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மோதர பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ள கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

சம்பவத்துடன் தொடர்புடையவர் கிரான்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த தற்போது ஏனமுல்லை பகுதியில் வசித்து வந்தவர் என அடையாளம்காணப் பட்டுள்ள நிலையில், அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-14)

### கூட்டமைப்பை உடைத்தால்

# முஸ்லிம்களுக்கு நேர்ந்ததே தமிழ் மக்களுக்கும் நடக்கும்



முல்லைத்தீவு, மார்ச் 15

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைஉடைத்துவிட்டால் முஸ்லிம்களின் நிலையே தமிழருக்கும் ஏற்படும். இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பில் கடந்த திங்கட் கிழமை, பனை தெங்கு வள அபிவிருத்திக் கூட்டுத்தாபனங்களின் சமாசத்தின் மத்திய அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இன்று கண்டி பிரதேசத்தில் முஸ்லிம் மக்கள் மீதான சிங்களக் காடையர்களின் அடாவடித்தனங்களால் நாடு மீண்டும் ஒரு இருண்ட யுகத்தை நோக்கிச் சென்றுள்ளது. தொடர்ந்தும் பேரினவாதிகளால் சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகள் மறுக்கப்படுகிறது என்பது கவலைக்குரிய விடயமாகிறது. ஐ.நாவுக்கும், பன்னாட்டுச் சமூகத்துக்கும் இலங்கை வழங்கிய வாக்குறுதிகள் மீறப்பட்டு வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைப்பதற்கு பன்னாட்டு ஊடுருவல்களால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போதுபெருந்தொகைப் பணத்துடன் சுயேச்சைகள் களமிறக்கப்பட்டன. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைப்பதற்கான இரகசிய நிகழ்ச்சி நிரலின் கீழேயே நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்துவிட்டால் முஸ்லிம் மக்களின் நிலையே தமிழருக்கும் ஏற்படும் - என்றார். (5)



### மூடிய அறைக்குள்

# மகாநாயக்கர்களுடன் ரணில் திடீர் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 15

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கண்டியில் அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களுடன் மூடிய அறைக்குள் நேற்று இரகசிய ஆலோசனை நடத்தியுள்ளார்.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கரான வேரகொட ஞானரத்ன தேரர் மற்றும் மல்வத்த பீடத்தின் மகாநாயக்கரான திப்பொட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கள தேரர் ஆகியோருடனேயே தலைமை அமைச்சர் இரகசிய ஆலோசனை நடத்தியுள்ளார்.

அண்மைய நிலமைகள் தொடர்பாக, இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

தலைமை அமைச்சர் ரணில் தனிப்பட்ட முறையில் நடத்திய இந்தச் சந்திப்பில் தாம் பங்கேற்கவில்லை என்று கண்டியைச் சேர்ந்த அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். (5)

### கண்டி வன்முறை;

# வெள்ளைச் செம்மறி ஆடுகளுடன் கறுப்புச் செம்மறிகளும் உள்ளன

### தகவல் கிடைத்துள்ளது என்கிறார் ரவி கருணாநாயக்க

கொழும்பு, மார்ச் 15

கண்டி தெல்தெனிய வன்முறையின் பின்னணியில் வெள்ளைச் செம்மறி ஆடுகளுடன் கறுப்புச் செம்மறி ஆடுகளும் உள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சமூக வலைத்தளங்கள் ஊடாக நல்லிணக்கத்தைச் சீர்குலைத்து அரச அரச தலைவர், தலைமை அமைச்சர் தலைமையிலான் அரசுக்கு எதிராகப் பொய்ப் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உறுதியான பொறுப்புக் கூறலின் பின்னரே சமூக வலைத்தளங்களை இயங்க அனுமதிக்க வேண்டும்

சமூக ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட்டால் எதற்கும் அச்சப்பட வேண்டியதில்லை. கண்டியில் நடைபெற்ற வன்முறை மேலும் அதிகரிப்பதற்குச் சமூக ஊடகங்களும் பொறுப்பு கூற வேண்டும். சமூக ஊடகங்கள் தடை செய்யப் பட்டமையினால் வன்முறையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிந்தது. வன்முறைக்குக் காரணமானவர்களின் பின்னணியில் அரசில் ஒரு சிலர் இருப்பதாகவும் தகவல் கிடைத்துள்ளது. கொழும்பிலும் இவ்வாறான வன்முறையைத் தூண்டுவதற்கு ஒரு சில அரசியல்வாதிகள் முயற்சித்தனர். எனினும் ஐக்கிய தேசியக் கட்சி அதனைத் தடுத்து நிறுத்தியது - என்றார். (21,61)

# அரசின் தேவைக்கே நாட்டில் வன்முறை

### அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கூறுகின்றது

கொழும்பு, மார்ச் 15

இலங்கை அனைத்து இனங்களும் ஒன்றிணைந்து வாழும் நாடாகும். இன பேதம் என்பது ஒரு சதித் திட்டமாகும். நாட்டில் ஏற்பட்டுள்ள இனங்களுக்கிடையிலான பிரச்சினை அரசின் தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிகொள்வதற்காகவே தவிர சாதாரண மக்களின் உரிமைகளுக்காவல்ல. மக்கள் புரிந்து நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியற்றதன்மையை எதிர்த்து குரல் கொடுக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோட்டைத் தொடருந்து நிலைய முன்றிலில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. அதிலேயே இவ்வாறு வலியுறுத்தியது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் லஹிரு வீரசேகர ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது,

நாட்டில் அமைதியற்ற சூழல் ஏற்பட்டுள்ளது. கடந்த சில நாள்களில் அம்பாறை மற்றும் கண்டி போன்ற பிரதேசங்களில் மோதல்கள் ஏற்பட்டிருந்தன. இந்தப் பிரச்சினைகள் உருவாவதற்குப் பிரதான காரணம் அரசியல் நோக்கங்களே தவிர சாதாரண மக்களின் நலனுக்காக வல்ல.

1983 ஆம் ஆண்டும் இதே போன்ற கலவர நிலை நாட்டில் இடம்பெற்றது. அதில் மக்கள் இழப்புக்களைச் சந்தித்திருந்தனர். ஆனால் அரசு அது தொடர்பில் எந்தக் கருத்துக்களையும் முன்வைக்கவில்லை. அதே நிலைதான் மீண்டும் தோற்றம் பெற்றுள்ளது.

உலக நாடுகளிலும் இனப் பிரச்சினைகள் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. மக்களே அதிகளவில் பாதிப்படைகின்றனர். மக்கள் உண்மை நிலை குறித்து அறிந்து உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கவும் உரிமைகளுக்காகப் போராடவும் முன்வர வேண் டும்;- என்றார். (ற-31)

# அமெரிக்கத் தூதுவர் கெசாப் இலங்கையினது இளவரசரா?

### இப்படிக் கேட்கிறார் தமரா குணநாயகம்

கொழும்பு, மார்ச் 15

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப், நாட்டின் இளவரசரைப் போன்று செயற்பட்டு வருகின்றார் என்று ஐ.நாவுக்கான இலங்கையின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதி தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அமெரிக்கா உலகின் பல நாடுகளைப் பிளவடையச் செய்து வருகின்றது. அந்த வரிசையில் இலங்கையிலும் அவ்வாறான ஓர் செயற்பாட்டை மேற்கொள்ள முயற்சிக்கின்றது. இந்தச் சதி வலையில் நல்லாட்சி ஆட்சியாளர்கள் சிக்கியுள்ளனர்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைப் பதவியிலிருந்து நீக்க வேண்டாம் என்று அமெரிக்கத்தூதுவர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு உத்தரவிட்டுள்ளார். அதனை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு ஆட்சியாளர்கள் பலவீனமடைந்துள்ளனர் - என்றார். (5)

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## அறிவித்தல்
### கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல. J/DS/ BR / 472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2017 ஆம் ஆண்டு 31.08.2017 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி (15.04.2018) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.04.2018 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (2017 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 31 ஆம் திகதி முதல் 2017ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 30 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்)

**உரிமையாளர் :- A.S.Surendran**

இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311

இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046

(IN/6099)(11,17)

---

சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான
### மஹோற்சவ காலத்திற்கான கடைகள் ஏலத்தில் விடுவதற்கான கேள்வி கோரல் அறிவித்தல்

மேற்படி விடயம் தொடர்பாக எமது ஆலய வருடாந்த பெரும் திருவிழா எதிர்வரும் 20.03.2018 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாக உள்ளது. எனவே திருவிழா காலங்களில் வியாபாரத்தை மேற்கொள்ள உள்ள வியாபாரிகளிற்கான கடை போடுவதற்கான இடங்கள் எதிர்வரும் 18.03.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஏலத்தில் விடப்பட இருக்கின்றன. எனவே கடைகள் ஏலத்தில் பெற விரும்பும் வியாபாரிகள் ஆலய பரிபாலன சபையினரின் அறிவுறுத்தலுக்கு அமைய கடைகளை ஏலதில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐயனார் தேவஸ்தானம்,
சுன்னாகம்.

(cs.14749) (13.17)

செயலாளர் - சி.செ.நடராஜா
பரிபாலன சபை.
077 9184664, 077 659 2040

---

### புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவு பழ உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவு பழ உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் புதிய பழ உற்பத்தியாளர்கள் அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்வதற்கான நிகழ்வு நாளை (16.03.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு உடையார்கட்டு கமநல அபிவிருத்தி நிலைய கேட்போர் கூடத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர். விவசாயப் போதனாசிரியர் தலைமையில் இடம்பெறவுள்ளதால் அனைத்து பழ உற்பத்தியாளர்களையும் கலந்து கொண்டு புதிய அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

**தலைவர்**

(akn. 398) (13.17) **021 206 1879**

---

## 05 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வேலன்
**தெய்வேந்திரம்**
(பட்டு)

தோற்றம் 09.02.1959 மறைவு 08.04.2013

திதி: திரயோதசி

எங்கள் குலவிளக்கே
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவரே
வனப்பிழந்து போனதையா
வாழ்வெனும் பொழில் இங்கு
ஆண்டுகள் ஐந்தானதுவோ - உம்
அழகு முகம் கண்டு
அழியாத சித்திரமாய் - எமக்குள்
உம் வாழ்வு ஆயுள்வரை
- நிலைத்திருக்கும்

(cs. 14748) (13.17)

'கந்தன் இல்லம்'
அல்வாய் மேற்கு.

மனைவி - தெ. வரதராணி
பெறாமகன் - ச. சத்தியராஜன்

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 13.02.2018 செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு

**அமரர்**
**செல்லர்**
**நாகராசா**

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15.03.2018) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும். அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.


167, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (cs.14747) (13.17)

**குடும்பத்தினர்.**

---

## நீங்காத நினைவுகளுடன்...

எம் இதயத்தில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும்
ஆசை அப்பா அன்பான அம்மா



**அமரர் சுப்பிரமணியம் இரத்தினசிங்கம்**
(இளைப்பாறிய Architect)
தோற்றம் 09.02.1935 மறைவு 28.09.2016

**திருமதி கனகம்மா இரத்தினசிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியை - மல்லிகா ரீச்சர்)
தோற்றம் 30.07.1942 மறைவு 26.03.2017

திதி:- அபரபக்ஷ திரயோதசி (15.03.2018)

**நிஜங்களின் பாச நினைவுகள்**

சங்கில் இருந்து முத்துக்கள் உதிர்வது
முத்துக்களுக்கு பிடிக்காமல் நிகழும் நிகழ்வு
பூக்களை அழகென்று பொய் பேசும் நாம்
பெற்றோரின் பாசத்தை அன்பை புரிந்து கொள்ள
தவறிவிடுகின்றோம் குணத்தில் அழகுடை பெற்றோர்
அரவணைப்பில் எப்போதும்
அளவில்லா பொருளுடையோராவர்

பிறர் வலிக்கும் குணம் கொண்டோர் வாழும் இவ் உலகினில்
பிறர் வலிக்காது வாழ்ந்து நின்றார்
விதி தந்த விதிக்கணக்கு முடிந்ததாய் போகவைத்து
உரியவன் பசிதீர்க்க பாசமுள்ள உம் உயிரை
பக்குவமாய் பறித்துக் கொண்டான்

புன்னகை பூத்து நின்று புது மலராய் மலர்ந்து நின்றீர்
வாழுகின்ற காலமதில் வாடாது வாழ்ந்து நின்றீர்
நல்லதொரு பெற்றோர் பாசமுள்ள பெற்றோர் நீவிர்
கூடும்வரை வாழாது விட்டு காலகதியில் மறைந்து விட்டீர்

தள்ளாத வயோதிபத்தில் தவறாது காப்போமே
எண்ணியிருந்தேன் பலநாளாய் தண்ணீரில் எழுதியதாய்
மாயம் செய்து மாண்டீரோ மன்னிக்க வேண்டுகின்றேன்
மனமுவந்து ஏற்றுடுவீர்

தினம்தோறும் நினைக்கின்றேன் தினம்தோறும் அழுகின்றேன்
காலம் வாழும்வரை கரையாது வாழ்ந்திடுவீர் எம் நெஞ்சத்தே
கொழுவிருந்து...

உங்கள் ஆத்மாவின் நினைவுகளின் பூபாளம்
நாம் வாழும்வரை எம்மோடு எப்போதும்
எம் உணர்வுகளோடும் வாழும்

(CS/14687)(11,17)

**என்றும் பாசமிகு பிள்ளைகள்**

சாராயம் வாங்கித் தருமாறு

# சாரதியை தாக்கிய பொலிஸுக்கு சிறை

## யாழ்ப்பாண நீதிவான் மன்று விதித்தது

யாழ்ப்பாணம் மார்ச் 15

**சாராயம் வாங்கித் தரவில்லையென வாகனசாரதியைத் தாக்கிய பொலிஸ் புலனாய்வு உத்தியோகத்தருக்கும் அவரது முகவருக்கும் தலா இரண்டு மாதங்கள் சிறைத்தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் நீதிவான் மன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது.**

யாழ்ப்பாணம் பண்ணையிலுள்ள தனியார் பேருந்துத் தரிப்பிடத்தில் சேவைக்காக தரித்துநின்ற பேருந்தின் சாரதியையும் நடத்துனரையும் அச்சுறுத்தி சாராயம் வாங்கித்தருமாறு பொலிஸ் அதிகாரியும் அவரது முகவரும் வற்புறுத்தினர். சாரதி அதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

அதனால் ஆத்திரமடைந்த அந்த நபர்கள் இருவரும் சாரதி மீது தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவம் 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்றது. அது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் புலனாய்வு உத்தியோகத்தர் மற்றும் அவரது முகவர் கொடிகாமம் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

சாரதி மற்றும் நடத்துனரை அச்சுறுத்தியமை மற்றும் சாரதியைத் தாக்கியமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகளை முன்வைத்து சந்தேகநபர்கள் இருவருக்கும் எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் இரண்டு குற்றச்சாட்டுகளிலும் இருவரையும் குற்றவாளிகள் என நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் தீர்ப்பளித்தார்.

'குற்றவாளிகள் இருவரும் முதலாவது குற்றத்துக்காக தலா ஆயிரத்து 500 ரூபா தண்டம் செலுத்தவேண்டும். இரண்டாவது குற்றத்துக்காக குற்றவாளிகள் இருவருக்கும் 2 மாதங்கள் சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது' என நீதிவான் தண்டனைத் தீர்ப்பை வழங்கினார். (எ-103)



## கல்வி சாரா ஊழியர்களின் போராட்டம் முழுமை பெற்ற பின்னரே கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்

### யாழ்ப்பாணப் பலகலைக்கழகத்தின் வவுனியா வளாக முதல்வர் தெரிவிப்பு

வவுனியா மார்ச் 15

கல்வி சாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நிறைவு பெற்ற பின்னரே கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று யாழ்ப்பாணப் பலகலைக்கழகத்தின் வவுனியா வளாக முதல்வர் தி.மங்களேஸ்வரன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 28ஆம் திகதியிலிருந்து நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் வேலைப் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதால் எமது வளாகத்தின் கல்வி சார் கல்வி சாரா செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. இது தொடர்பாக நேற்றுமுன்தினம் எமது பீடாதிபதிகள் துறை தலைவர்கள் அதிகாரிகள் கூடி கலந்துரையாடியதன் பிரகாரம் கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் எப்பொழுது நிறைவு பெறுகிறதோ அதன் பிறகே எமது கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிப்பது என்று முடிவு காணப்பட்டது. வியாபார கற்கை நெறிகள் பீடத்தின் புதிய ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் கடந்த மாதம் 12ஆம் திகதி ஆரம்பமானது. ஆனால் போராட்டம் காரணமாக அதனை சரியாகதொடர முடியவில்லை. பிரயோக விஞ்ஞான பீடத்தின் தகவல் தொழில்நுட்ப கற்கை நெறிக்கு புதிதாக மாணவர்களை தெரிவு செய்வதற்கான நுண்ணறிவு பரீட்சையானது கடந்த 3ஆம் திகதி நடைபெற இருந்தது. தொழில் சங்கப் போராட்டம் காரணமாக அது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் -என்றார்.

'பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் தொழில் சங்கங்களின் சம்மேளனத்தில் எமது வவுனியா வளாக ஊழியர் சங்கத்தினரும் அங்கத்துவம் வகிப்பதால் நாமும் இந்த தொழிற் சங்கப் போராட்டத்தில் இணைந்துள்ளோம். ஏற்கனவே கடந்த வருடம் உறுதியளிக்கப்பட்ட எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமையே எமது தொடர் போராட்டத்துக்கு காரணம். உறுதியளிக்கப்பட்ட இணக்க ஒப்பந்தத்தை அமுல்படுத்த வேண்டியே நாம் போராட்டத்தில் ஈடுபடுகிறோம். எமது வளாகத்தின் செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்து மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றது.

எனவே எமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை வழங்கி மாணவர்களின் கல்வி செயற்பாட்டை முன்னெடுக்க பொறுப்பு வாய்ந்த உயர்கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்' என்று கல்விசாரா ஊழியர் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (எ-110)

வடக்கு மாகாண

## கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் செயற்பாடுகள் யாவும் வலுப்படுத்தப்படும்

### சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 15

வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் செயற்பாடுகள் யாவும் எதிர்காலத்தில் வலுப்படுத்தப்படும் என்று சங்கத்தின் தலைவர் செ.பாலேந்திரன் தெரிவித்தார்.

தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்டு சங்கம் ஊடான பல்வேறு விதமான நடவடிக்கைகள் ஊடாக பணியாளர்களுக்கு தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கூட்டுறவு ஊழியர்களின் நலன்சார்ந்த விடயங்களில் முழுக் கவனம் செலுத்தப்பட்டு சம்பள உயர்ச்சி உட்பட பல நன்மைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

இதனைவிட பணியாளர் சார்ந்த பல திட்ட முன்மொழிவுகளையும் கோரிக்கைகளையும் மாகாண, மத்திய அரசுகளுக்கு வழங்கவும் தொழிற்சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக சங்கங்களின் பொது முகாமையாளர்க ளுடன் சிறப்புக் கலந்துரையாடல்ஒன்றும்நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. கலந்துரையாடலில் சகல கூட்டுற வுச் சங்கங்களின் பொது முகாமையாளர்க ளும் அழைக்கப்பட்டுள்ளனர். (எ-17)



## தொடருந்துடன் மோதுண்டு 4 மாடுகள் இறப்பு

கிளிநொச்சி மார்ச் 15

பளை இத்தாவில் பகுதியில் தொடருந்துடன் மோதுண்டு நான்கு மாடுகள் உயிரிழந்துள்ளன. மேலும் ஒரு மாடு காயமடைந்தது.

நேற்று அதிகாலை பளை இத்தாவில் பகுதியில் புகையிரத வீதியில் மாடுகள் நின்றபோதே இச்சம்பவம் நடைபெற்றது.

# அறநெறிக் கல்வி மூலமே இனநல்லிணக்கம் ஏற்படும்

## யாழ். செயலகத்தில் சிறப்புக் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், மார்ச் 15

பாடசாலைப் பிள்ளைகள், சமய பாடசாலைகள், அரச நிறுவனங்கள் சிவில் சமூகங்களுக்கிடையே சமாதானத்துக்கான தேசிய உறுதி மொழியை விருத்தி செய்வது தொடர்பில் தேசிய சர்வமத தலைவர்களுக்கிடையிலான மாவட்ட நல்லிணக்க குழு கூட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது

மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பகரமான சூழ்நிலைக்கு, பாடசாலைகளில் சிறுவர்களுக்கு ஆன்மீகக் கல்வி போதிக்காமையே இளைஞர்களுக்கிடையிலான மோதலுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

கலந்து கொண்ட அனைத்து மதப்பெரியார்கள், ஆசிரியர்கள், பொலிஸார்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். அதன்போது இது தொடர்பில் அவர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

'தற்போதுதனியார்கல்வி நிறுவனங்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. இதனால் பிள்ளைகளுக்கு ஓய்வு கிடைப்பதில்லை. இதனால் ஆத்மீக வழிகளில் வழிநடத்துவது கடினமாக உள்ளது. தனியார் கல்வி நிறுவனங்களை ஞாயிற்றுக்கிழமைகளில் மூடும்வரை பிள்ளைகளை வழிபாட்டில் ஈடுபடுத்த முடியாது. ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிறுவ னங்கள் தான் இயங்கி வருகின்றன. இதனை சட்டரீதியாகவும் பொலிசாரின் உதவியுடனும் தடை செய்தால் பிள்ளைகளை வழிநடத்த முடியும். வெள்ளிக்கிழமைகளில் மாலையிலும், ஞாயிற்றுக்கிழமைகளில் காலையிலும் இந்த நேரத்தை ஒதுக்கி வழிபாட்டில் ஈடுபட வைக்க வேண்டும். இரு நாள்கள் ஆன்மீக செயற்பாட்டுக்காக ஒதுக்க வேண்டும். இந்த நடைமுறை அமைச்சால் கிழக்கு மாகாணத்தில் வந்துவிட்டது. இங்கும் அந்த நடைமுறை கொண்டுவரப்பட வேண்டும். மும்மொழிப் பாடசாலைகளை உருவாக்கி நல்லிணக்கத்துக்கான கல்வியை புகட்ட வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

'இது சம்பந்தமாக கடந்த வருடம் எல்லா கல்வி நிறுவனங்களையும் அழைத்து கதைத்தோம். ஆனால் பெரும்பாலன நிறுவனங்கள் ஆதரவு தரவில்லை. சில இடங்களில் நடைமுறையில் இன்னமும் உள்ளது. நகரப்புறங்களில் தான் அதிகமாக நடைமுறைக்கு வரவில்லை. நீதிமன்றத்தை அணுகினோம்.

ஆனால் அதற்கான சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு கடினம் என்றார்கள். சட்டம் எடுப்பின் சிறப்பாக இருக்கும். இது பற்றியும் அமைச்சிடம் கூறி அமுல்படுத்த நடவடிக்கை எடுப்போம்' என மாவட்டச்செயலர் பதிலளித்தார். (எ-112)



தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமாரால் வவுனியாவில் வீதியில் அநாதரவாக இருந்த யாழ்ப்பாணம் பொலிகண்டியைச் சேர்ந்த கி.பொன்னையா (வயது 88) என்ற வயோதிபர், வவுனியா சிவன் முதியோர் இல்லத்தில் நேற்று சேர்க்கப்பட்டார். இவரின் இரண்டு பிள்ளைகள் விடுதலை போராட்டத்தில் உயிர் நீத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-110)

# 2013ஆம் ஆண்டு விபச்சார வழக்கில் கைதாகிய பெண்கள் மூவரும் விடுதலை

## யாழ்ப்பாண நீதிமன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 15

**விபச்சாரத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த 2013ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட 3 பெண்களும் 5 வருடங்களின் பின்னர் நிபராதிகள் என்று நீதிமன்றால் தீர்ப்பளித்து விடுவிக்கப்பட்டனர். அவர்களுடன் விபச்சார விடுதியை நடத்திய சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட விடுதி உரிமையாளர் மற்றும் அதன் முகாமையாளருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதித்து நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது.**

யாழ்ப்பாண நகரில் முதன்மை வீதியை அண்மித்த பகுதியில் இயங்கி வந்த விடுதியொன்றில் பாலியல் தொழில் இடம்பெறுவதாகக் குற்றஞ்சாட்டி அதிகாரிகள் விடுதியை சுற்றி வளைத்தனர்.

அந்த விடுதியில் தங்கியிருந்த பெண்கள் 5 பேர் உட்பட அவர்களுடன் விடுதியின் உரிமையாளர் மற்றும் பொறுப்பாளரும் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் 2013ஆம் ஆண்டு மார்ச் 28ஆம் திகதி இடம்பெற்றது. சந்தேகநபர்களில் 3 பெண்கள் சட்டவிரோத பாலியல் தொழிலில் ஈடுபட்டனர் என பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

அத்துடன், விடுதி உரிமையாளர் மற்றும் பொறுப்பாளருக்கு எதிராக அனுமதிப்பத்திரமின்றி விடுதியை நடத்தினர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் இடம்பெற்று வந்தது.

வழக்கின் விளக்கம் நிறைவடைந்த நிலையில் நீதிவான் தீர்ப்பை வழங்கினார்.

3 பெண்கள் மீதும் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை எனத் தீர்ப்பளித்த நீதிவான் சி.சதீஸ்தரன் அவர்கள் மூவரையும் வழக்கிலிருந்து விடுவித்தார்.

வழக்கில் விதிக்கப்பட்ட அபராதத் தொகையை செலுத்த தவறியதால் எதிரிகள் இருவரும் யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (எ-103)

## மட்பாண்ட உற்பத்திக்கான மண்ணைப் பெற்றுத்தருவதில் சிரமம்

தென்மராட்சி மார்ச் 15

தென்மராட்சியில் மட்பாண்ட உற்பத்திகளை மேம்படுத்த உற்பத்தித்திறன் கைத்தொழில் திணைக்களத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் மட்பாண்ட உற்பத்திக்குப் பயன்படுத்தும் மண்ணைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்பாண்ட உற்பத்திக்குத் தேவையான மண்ணைப் பெறமுடியாத நிலைகாணப்படுவதால் வன்னிப் பிரதேசத்திலிருந்து மட்பாண்ட உற்பத்திக்குத் தேவையான மண்ணைப்பெற்றுத் தருமாறு பிரதேச மட்பாண்ட உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

மட்பாண்ட உற்பத்திக்கு வன்னிப் பிரதேச குளங்களிலிருந்து பெறப்படும் மணலே தரமானதாகும். குளத்துநீர் வற்றும்வரை காத்திருந்து மணல் எடுக்கும்நிலையில் மணல் எடுப்பது மற்றும் கொண்டு வருவதற்கான அனுமதி பெறுவதில் எற்படும் காலதாமதத்தால் மீண்டும் மழை காலம் ஆரம்பித்து விடுவதால் உற்பத்திக்குத் தேவையான மணலைப் பெறமுடிவதில்லை. இதனால் வருமானமின்றி சிரமங்களை எதிர்நோக்குகின்றோம். என்று உற்பத்தியாளர்கள் முறையிட்டனர்.

இதற்குப் பதிலளித்த பிரதேச செயலர் "உற்பத்திக்குத் தேவையான மண் பெறுவதற்கான காலத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் பிரதேச செயலகத்துக்கு அறிவித்தால் உரிய மாவட்டச் செயலர்களுடன் தொடர்பு கொண்டு அவற்றினை விரைவாகப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்தார். (எ-9)

## சுகாதார மேம்பாட்டு முன்பள்ளிகளை உருவாக்குவது தொடர்பில் செயலமர்வு

### புங்குடுதீவில் ஆரம்பிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 15

முன்பள்ளிகளைச் சுகாதார மேம்பாட்டு முன்பள்ளிகளாக மாற்றுவதற்கான செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக புங்குடுதீவில் இந்தச் செயற்பாடுகள் தொடர்பில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அறிவூட்டப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.





புங்குடுதீவு, நயினாதீவு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் உள்ள முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு இது தொடர்பான செயலமர்வு ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

புங்குடுதீவிலுள்ள சர்வோதயம் மண்டபத்தில் இது இடம்பெற்றது. ஏனைய பிரிவுகளை விட முன்மாதிரியான செயற்பாடாக இந்தப் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் அபராஜ் இதனை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

அதன்படி புங்குடுதீவு, நயினாதீவு பிரதேசங்களிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் சுமார் 30 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

செயலமர்வின் முதன்மை வளவாளர்களாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றா நோய்களுக்கான மருத்துவ அதிகாரி சிவகணேஸ், சுகாதாரக் கல்வி அதிகாரி ஜெயபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி இந்தச் செயற்றிட்டத்தை ஆரம்பித்துவைத்தார். தாய் சேய் நல மருத்துவ அதிகாரி, முன்பள்ளி வலயக் கல்விப் பணிபாளர் ஆகியோரும் செயலமர்வில் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்கியிருந்தனர்.

எதிர்காலத்தில் ஆரோக்கியமான ஒரு சந்ததியை உருவாக்க சிறுவயதில் இருந்தே நல்ல சுகாதாரப் பழக்க வழக்கங்களை ஏற்படுத்த இந்தச் செயற்றிட்டம் பெரிதும் உதவும் என்பது முதன்மையான கருத்தாக அங்கு முன்வைக்கப்பட்டது. செயலமர்வில் கலந்து கொண்டவர்களுக்கு நிகழ்வின் இறுதியில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (எ-4)

## தவணைப் பரீட்சை நேர அட்டவணை பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பு

முல்லைத்தீவு மார்ச் 15

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் வடக்கு மாகாணப் பாடசாலைகளின் முதலாம் தவணைப் பரீட்சை தொடர்பான கால அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

அட்டவணை வடக்கு மாகாண 12 கல்வி வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக அனைத்துப் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இடைநிலைப் பிரிவுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் எதிர்வரும் 3ஆம் திகதி வரை நடைபெறும். ஆரம்பக் கல்விக்கான பரீட்சைகள் எதிர்வரும் 29ஆம் திகதி முதல் எதிர்வரும் 3ஆம் திகதி வரையும்நடைபெறும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தால் உயர்தர மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சை நேரஅட்டவணையும் உயர்தரப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்த ஆண்டு பரீட்சை எழுதும் உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை 15ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 4ஆம் திகதி நிறைவடையும். 2019ஆம் ஆண்டு பரீட்சை எழுதும் உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை 23ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 4ஆம் திகதி நிறைவடையும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாம் தவணைப் பரீட்சை பாடசாலை மட்டத்தில் நடத்தப்படுகின்றபோதிலும் சில கல்வி வலயங்கள் முக்கியமான தரங்களுக்கு வலயமட்டத்தில் வினாத் தாள்களை தயாரித்து வருகின்றமை குறிப்பி டத்தக்கது. (எ-72)

## துன்னாலை துப்பாக்கி சூட்டுச் சம்பவம் தேடப்பட்டோரில் ஒருவர் கைது:

யாழ்ப்பாணம், மார்ச் 15

துன்னாலையில் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட பின்னர் ஏற்பட்ட குழப்பநிலையுடன் தொடர்புடையவர்களாகத் தேடப்பட்டவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த வருடம் சட்டவிரோதமாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் வாகனத்தில் பயணித்தவர்களைப் பொலிஸார் துரத்திச் சென்றிருந்தனர். அங்கு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் துன்னாலையைச்சேர்ந்த இளைஞன் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டார். அதனையடுத்து துன்னாலையில் குழப்பநிலை ஏற்பட்டது. வீதிகளில் ரயர் போட்டு தீ மூட்டப்பப்பட்டது. பொலிஸாரின் வாகனங்கள் சேதமாக்கப்பட்டன. அதனையடுத்து பொலிஸார் கைது வேட்டையை ஆரம்பித்தனர். நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அதன்போதே எதிர்வரும் 28 ஆம் திகதிவரை மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

ஏற்கனவே கைது செய்யப்பட்டு மறியலில் உள்ளவர்களுக்கு அன்று வரை மறியல் நீடிக்கப்பட்டது. (எ-4)

# ஜப்பானின் நுட்பத்தில் திண்மக் கழிவகற்றல்

## அரச தலைவர் மைத்திரி ஆலோசனை

கொழும்பு.மார்ச்.15
இலங்கையில் திண்மக் கழிவு பிரச்சினையை தீர்ப்பதற்கு ஜப்பான் நாட்டுத் தொழில் நுட்பத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராயவுள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜப்பானுக்கு அரச முறைப் பயணமொன்றை மேற்கொண்டுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று டோக்கியோவில் உள்ள நவீன கழிவு முகாமைத்துவ நிலையத்தை பார்வையிட்டார்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளதாக அரச தலைவர் ஊடகப்பிரிவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஜப்பான் நாட்டுத் தொழில் நுட்பத்தை இலங்கையில் நடைமுறைப் படுத்துவது தொடர்பில், ஜப்பானின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது குறித்துக் கவனம் செலுத்தவுள்ளதாகவும் அரச தலைவர் தெரிவித்தார்.

சுமார் 9.3 மில்லியன் மக்கள் வாழும் டோக்கியோ நகரில் நாளாந்தம் 11 ஆயிரம் மெற்றிக் தொன் திண்மக் கழிவுகள் வெளியேற்றப்படுவதுடன், இவற்றை முகாமைத்துவம் செய்வதற்காக இது போன்ற 23 மத்திய நிலையங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

சினகாவாவில் உள்ள திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தில் சுமார் 60 மெற்றிக் தொன் திண்மக் கழிவுகள் நாளாந்தம் முகாமை த்துவம் செய்யப்படுகின்றன.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சூழல் நட்புடைய வகையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், அந்த நடவடிக்கைகளையும் அரச தலைவர் பார்வையிட்டார். கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு மேலதிக பெறுபேறாக உற்பத்தி செய்யப்படும் அனல்மின் சக்தியாக மாற்றப்படுவதுடன், இந்த மின்சக்தி திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தின் பயன்பாட்டுக்காக பெற்றுக்கொள்ளப் படுவதுடன், எஞ்சிய தொகை தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தின் தலைவரினால் இந்த நிலையத்தின் பணிகள் குறித்து அரச தலைவர் உள்ளிட்ட குழுவினருக்கு விரிவாக விளக்கப்பட்டது. (ற-ரி2)

## இறப்பு வீட்டுக்குச் சென்றவர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

மட்டக்களப்பு, மார்ச் 15
குடும்ப உறவினரது இறப்பு வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் விபத்தில் உயிரிழந்தார்.

இந்த விபத்து மட்டக்களப்பு மாவடிவேம்பு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது.

கிரான் பிரதேச செயலகத்தின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரான மட்டக்களப்பு வந்தாறுமூலையைச் சேர்ந்த 54 வயதுடைய கருணாகரன் வரதன் என்பவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வந்தாறுமூலை பிரதேசத்தி லிருந்து கிரான் பிரதேசத்துக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தவேளை முன்னாள் சென்ற பேருந்தை முந்திச் செல்ல முற்பட்டபோது, எதிரே வந்த பாரவூர்தி மோதியது என்று தெரிவிக்கப்பட்டது. மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

(ற-ரி5)

## கையூட்டல் ஆணைக்குழுவினால் உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல்

கொழும்பு.மார்ச்.15
மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டீ நவாஸ் மற்றும் முன்னாள் நீதியரசர் மொஹான் பீரிஸுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையை தடுக்கும் வகையில் வெளியிடப்பட்ட இடைக்காலத்தடையுத்தரவை மீண்டும் ஆராயுமாறு கோரி கையூட்டல் ஆணைக்குழுவினால் நேற்று உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இலங்கை மின்சார தனியார் நிறுவனம் சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய அதிகாரிகளுக்கு எதிராக குற்றவியல் வழக்கு ஒன்றை தாக்கல் செய்யாமல் இருக்க, சட்ட ரீதியற்ற முறையில் உதவும் விதமாக சட்ட மா அதிபர் அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொடுத்த குற்றச்சாட்டுத் தொடர்பில் இவர்கள் இருவருக்கு எதிராக கையூட்டல் ஆணைக்குழுவால் கொழும்பு நீதிவான் நீதிமன் றில் கடந்த ஜனவரி 18ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட் டது.

இந்த வழக்கு விசாரணைகளைத் தடுக்கும் வகையில் உயர்நீதிமன்றம் கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்திருந்தது.

(ற.ரி2)

## ஒரே குழியில் ஐவரின் சடலங்களும் அடக்கம்

திருகோணமலை, மார்ச் 15
தாமரைப் பூப்பறிக்கச் சென்றபோது தோணி கவிழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்த ஐவரின் சடலங்களும் கடந்த திங்கட்கிழமை ஒரே குழியில் அடக்கம் செய்யப்பட்டன.



திருகோணமலை நிலாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள பெரியகுளத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை தாமரைப் பூப்பறிக்கச் சென்றவர்களின் தோணி கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்த 4 சிறுவர்கள் மற்றும் தோணி வலிப்பவர் உட்பட ஐவர் உயிரிழந்தனர்.

அங்குள்ள குளத்துக்குச் சென்று பொங்கி வழிபட்டு பொழுதைக் கழிக்கச் சென்றவர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

நிலாவெளி 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான சுரேஸ் கேசிக்ராஜ் (வயது 9) சுரேஸ் யுதேஸன் (வயது 7), சுகந்தன் பிரணவி (வயது7), தங்கத்துரை சங்கவி (வயது 9) மற்றும் தோணியை ஓட்டிச் சென்ற தருமலிங்கம் தங்கத்துரை (வயது 32) ஆகியோரே உயிரிழந்திருந்தனர்.

இறுதிச் சடங்கு நிகழ்வில் அஞ்சலி செலுத்துவதற்காக கிராம பொதுமக்கள் அதிக எண்ணிக்கையிலானோர் கலந்து கொண்டனர்.

(ற-ரி5)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 15
மித்தெனிய லபுஹேன்கொடவில் துப்பாக்கி மற்றும் ரவைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. 7 ரவைகளும், 150 கிராம் கேரளக் கஞ்சாவும் சந்தேகநபரிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் நேற்று வலஸ்முல்ல நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-ரி5)



# சிகை அலங்கரிப்பு சிக்கல் தந்திடுமா?



மொஸ்கோ, மார்ச் 15
ரஷ்யாவைச் சேர்ந்த வலன்ரீனா என்கிற பெண் அரசியல் வாதியின் சிகை அலங்காரம் சமீபகாலமாகப் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.

தற்போது இவரது சிகை அலங்காரம் உலக அளவில் பரபரப்பாகிவிட்டது. தொப்பிபோல் எப்படிச் சிகை அலங்காரம் செய்யமுடிகிறது? முடிக்குள் என்ன இருக்கிறது என்றெல்லாம் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. "எனக்குச் சுருள் முடி. அதைக் கொஞ்சம் மேலே தூக்கி, கொண்டை ஊசிகளைச் செருகி வைத்திருக்கிறேன். இதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதில்லை. நான் நீண்டகாலமாக அரசியலில் இருந்து வருகிறேன். என் பணிகள், என் செயல்பாடுகள் குறித்து விமர்சனம் செய்தால் அதை ஆரோக்கியமான விஷயமாகக் கருதுவேன். சிகை அலங்காரத்தை வைத்துப் பேசிக்கொண்டிருப்பதில் ஏதாவது பயன் இருக்கிறதா? நேரம்தான் விரயமாகிறது" என்கிறார் வலன்ரீனா. (ம)

# உளவாளி கொல்லப்பட்டதன் பின்னணியில் ரஷ்யாவா?


## விசாரணைக்கு உத்தரவிட்டார் மே

லண்டன், மார்ச் 15
ரஷ்யாவின் முன்னாள் உளவாளிக்கு விஷம் ஏற்றப்பட்டதன் பின்னணியில் ரஷ்யா உள்ளதா என்ற கோணத்தில் விசாரணை நடத்த பிரிட்டனின் தலைமை அமைச்சர் திரேசா மே உத்தரவிட்டார்.

ரஷ்யாவின் இராணுவ உளவுப்பிரிவில் பணியாற்றியவர் செர்ஜய் ஸ்கிர்போல் (வயது 66). இவர் சில ரஷ்ய உளவாளிகளை இங்கிலாந்து உளவுத்துறையிடம் காட்டிக் கொடுத்தார் என்று 2004ஆம் ஆண்டு ரஷ்யாவால் கைதுசெய்யப்பட்டு 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். அவரை 2010ஆம் ஆண்டு இங்கிலாந்து மீட்டு அடைக்கலம் கொடுத்தது.

தற்போது இங்கிலாந்தில் வசித்து வரும் ஸ்கிர்போல், கடந்த 4ஆம் திகதி சாலிஸ்பரி நகரில் உள்ள ஒரு வணிக வளாகத்துக்கு வெளியே தனது மகள் யூலியாவுடன் (வயது33) மயங்கிய நிலையில் கிடந்தார்.

அவர்களது உடலில் விஷம் ஏறியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது இருவரும் மருத்துவமனையில் கவலைக்கிடமான முறையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த அசம்பாவிதத்தின் பின்னணியில் ரஷ்யா உள்ளதா என்று விசாரணை நடத்த தற்போது உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்துள்ளது. (ம)




# மறைந்தார் ஹாக்கிங்

லண்டன், மார்ச் 15
பிரிட்டனைச் சேர்ந்த பிரபல இயற்பியல் விஞ்ஞானி ஸ்ரீபன் ஹாக்கிங் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 76. லண்டன் கேம்பிரிட்ஜில் உள்ள அவரது இல்லத்தில் ஹாக்கிங் உயிர் பிரிந்தது.

"எங்கள் அன்புத் தந்தை எங்களைவிட்டு பிரிந்தார். அவரது மறைவு எங்களை பெருந்துயரில் ஆழ்த்தியுள்ளது. அவர் ஒரு மிகப் பெரிய விஞ்ஞானி. அசாதாரண மனிதர். அவரது பணிகளும் புகழும் என்றென்றும் நிலைத்திருக்கும். அவரது தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் மதிநுட்பமும் உலகில் பலரை கட்டிவைத்திருக்கிறது.

"இந்த அண்டம் நீங்கள் விரும்பும் மனிதர்களின் வசிப்பிடமாக இல்லாவிட்டால் அர்த்தமற்றதாக இருந்திருக்கும்' என்று ஒரு முறை அவர் கூறியதை நாங்கள் இப்போது நினைவுகூர்கிறோம். அவரது இழப்பு எங்களை என்றென்றும் வாட்டும்" என ஹாக்கிங்கின் பிள்ளைகள் வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தடைகளைத் தகர்த்தவர்**

21வயதில் மிகக்கொடிய நரம்பியல் நோயால் பாதிக்கப்பட்டார் ஸ்ரீபன் ஹாக்கிங். அப்போது மருத்துவர்கள், ஸ்ரீபன் 2 அல்லது 3 வருடங்கள் மட்டுமே வாழ்வார் என்றனர்.

முதலில் நோயால் மன அழுத்தத்துக்கு உள்ளான அவர், பின்னர் அதைஉடைத்தெறிந்தார். முனைவர் பட்டம் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் கணித பேராசிரியர் ஆனார்.

பேச்சு உருவாக்கி மூலம் அவர் உலகம் முழுவதும் ஆற்றிய உரைகள் லட்சோபலட்ச மக்களை அவர்பால் ஈர்த்தன. வேற்றுக் கிரக வாசிகள் பற்றிய தெளிவூட்டலையும், ஏனைய கோள்களில் மனிதர்கள் சென்று விரைவில் குடியேற வேண்டிய அவசியத்தையும் அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

இயற்பியலைப் பொறுத்தவரையில் இந்த உலகின் தூணாக விளங்கிய ஹாக்கிங்கின் மறைவு பேரிழப்பே. (ம)

# ஹாக்கிங் மறைவுக்கு தலைவர்கள் இரங்கல்

லண்டன், மார்ச் 15
பிரபல விஞ்ஞானி ஹாங்கிங் மறைவுக்கு உலகத் தலைவர்கள் பலரும் தமது இரங்கல்களைத் தெரிவித்துள்ளனர்.

"ஸ்ரீபன் ஹாக்கிங் மிகச்சிறந்த விஞ்ஞானி. அவரின் இறப்பு வேதனை அளிக்கிறது. அவர் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கிறேன்" என இந்தியத் தலைமை அமைச்சர் மோடி தனது இரங்கலைத் தெரிவித்தார்.

"இந்த உலகம் அழகிய எண்ணம் கொண்ட அறிவுப்பூர்வமான விஞ்ஞானியை இழந்துவிட்டது. அவரது ஆத்மா சாந்தி அடையட்டும்" என்று கூகுள் தலைமை செயலதிகாரி சுந்தர் பிச்சை தெரிவித்தார்.

"ஆக்கபூர்வமான விஞ்ஞானியை நாம் இழந்துவிட்டோம்" என்று பிரிட்டன் தலைமைஅமைச்சர்திரேசா மே தனது இரங்கலைத் தெரிவித்தார். (ம)



தென்கொரியாவின் பியாங்சங் நகரில் சிறப்புத் தேவையுடையவர்களுக்கான குளிர்கால ஒலிம்பிக் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பனிச்சறுக்குப் போட்டியில் கலந்துகொண்ட சீன வீரரின் ஒளிப்படமே இது. இரண்டுகைகளையும் இழந்த நிலையிலும் அவர் இந்தப் போட்டியில் கலந்துகொண்டார். (ம)

# 40 ஆயிரம் பேர் வாழனும்னா 110 பேர் சாகிறதில தப்பில்ல

## இது புடினின் 'டயலொக்'

மொஸ்கோ, மார்ச் 15
"2014ஆம் ஆண்டு 40ஆயிரம் பேரைக் காப்பாற்றும்பொருட்டு 110 பேருடன் பயணித்த வானூர்தியைச் சுட்டு வீழ்த்த உத்தரவிட்டேன்" என்று தெரிவித்தார் ரஷ்ய அதிபர் புடின்.

ரஷ்யாவில் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அதிபர் தேர்தல் நடைபெறுகிறது. இந்தத் தேர்தலில் முக்கிய வேட்பாளராக தற்போதைய அதிபர் புடின் உள்ளார். தேர்தல் பரப்புரைக்காக எடுக்கப்பட்ட ஆவணப்படத்திலேயே மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார் புடின்.

ஆவணப்படத்தில் புடின் தெரிவித்ததாவது:

"ரஷ்யாவின் சோச்சி நகரில் கடந்த 2014ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. பெப்ரவரி 7ஆம் திகதி குளிர்கால ஒலிம்பிக் தொடரின் ஆரம்ப நிகழ்வில் நான் கலந்து



கொண்டேன். அப்போது பாதுகாப்பு அதிகாரிகளிடம் இருந்து எனக்கு அலைபேசி அழைப்பு வந்தது. "உக்ரைனில் இருந்து துருக்கி சென்ற பயணிகள் வானூர்தியொன்று கடத்தப்பட்டுள்ளது. வானூர்தியில் ஏகப்பட்ட வெடிபொருள்கள் நிரப்பப்பட்டுள்ளன. வானூர்தியைக் கொண்டு ஒலிம்பிக் தொடரின் ஆரம்ப விழாவில் தாக்குதல் நடத்தப்படத் திட்டமிட்டுள்ளது" என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. வானூர்தியில் இருந்த 110 பயணிகளும் அப்பாவிகள்தான். ஆனால், அவர்களைப் பார்த்து ஒலிம்பிக் தொடரின் ஆரம்ப நிகழ்வைக் காணவந்த 40 ஆயிரம் ரசிகர்களின் உயிரைக் காவுகொடுக்க இயலாது. அத்துடன் திட்டமிட்டபடி தாக்குதல் நடத்தப்பட்டால் வானூர்திக்குள் இருந்த பயணிகளும் கொல்லப்படுவார்கள். எனவே வானூர்தியைச் சுட்டு வீழ்த்துமாறு உத்தரவிட்டேன். பின்னர் எமக்குக் கிடைத்த தகவல் பொய்யானது என்று தெரிய வந்தது. பின்னர் எனது உத்தரவைத் திரும்பப் பெற்றேன் - என்றுள்ளார். (ம)

## சீனாவுக்கு எதிராக திபெத்தியர்கள் ஆர்ப்பாட்டம்

சுவிற்சர்லாந்தில் சுமார் 5ஆயிரம் திபெத்தி யர்கள் இணைந்து சீன அரசுக்கு எதிராக நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தினர்.

திபெத் நாடானது சீனாவின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. திபெத் மக்கள் சீனாவைத் தவிர இந்தியா, நேபாளம் மற்றும் சுவிற் சர்லாந்து போன்ற நாடுகளிலும் வசித்து வருகின்றனர். திபெத் மக்கள் தங்களுக்கு தனி நாடு வேண்டும் என போராடி வருகின்றனர்.

ஆனால், சீனா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

சுவிற்சர்லாந்தும் சீனாவும் தற்போது நட்பு நாடுகளாக உள்ளன. இதனால் சுவிற்சர்லாந்திலும் சீனாவின் ஆதிக்கம் அதிகமாகி விட்டது. இதனால் திபெத் மக்களுக்கு எதிராக மனித உரிமைகள் மீறல்கள் சுவிற்சர்லாந்தி லும் நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்தே சீனாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. சுவிற்சர்லாந்துக்கு எதிராகவும் போராட்டத்தில் குரல் கொடுக்கப்பட்டது. (ம)

நீங்கள்
அடகு வைக்கும் நகைக்கான
முழுத் தொகையும்
உங்கள் கைகளுக்கு
கிடைக்கின்றதா?

காப்புறுதிக் கட்டணம், சேவைக் கட்டணம் ஏதுமின்றி முழுத்தொகையையும் உங்களுக்கு பெற்றுத்தருவது சம்பத் வங்கி மட்டுமே.

கெரட் 24 ற்கு ரூ. 40,000/-
கெரட் 22 ற்கு ரூ. 37,000/-

தற்போது அனைத்து சுப்பர் கிளைகளும் அடகு சேவைகளுக்காக வருடத்தின் 365 நாட்களும் மு.ப 8.00 மணி முதல் பி.ப 8.00 மணிவரை திறந்திருக்கும். (கொழும்பு சுப்பர் கிளை தவிர்ந்த)

சம்பத்
அடகுச் சேவை
அவசரத்திற்கு உதவும் அயலவன்

0112 30 30 50 www.sampath.lk

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

சனிக்கிழமை இரவு 9.55 க்கு
ஊடாக

Dialog
Mega அதிஷ்டம்
வெற்றியாளர்கள்


ரூ. 10 இலட்சம் சுப்பர் பரிசு வெற்றியாளர்
மாலனி முனசிங்க - மாதம்பே


D.D.G.S. தேவபர
கம்பஹா


A. பத்மகுமார இராஜகுரு
பிலிமத்தலாவ


A.A.R.R. சிறிவர்தன
களுத்துறை


L. சுரங்கி பிரசாதிகா
மாத்தறை

இந்த வாரத்தின் சுப்பர் பரிசு ரூ.10,576,923/-

இது வரை பரிசுகளை வென்ற வெற்றியாளர்கள்
- இரண்டு கோடி வென்ற வெற்றியாளர் ஒருவர்
- ஒரு கோடி வென்ற 13 வெற்றியாளர்கள்
- 20 இலட்சம் வென்ற 9 வெற்றியாளர்கள்
- 10 இலட்சம் வென்ற 122 வெற்றியாளர்கள்
- ஒரு இலட்சம் வென்ற 750 வெற்றியாளர்கள்

மேலும் பல இலட்சம் வெற்றியாளர்கள்

இலங்கை முழுவதும் அதிக வெற்றியாளர்களை உருவாக்கும் அதி பிரம்மாண்டமான பரிசுத் தொகை
121க்கு அழைத்து உங்கள் வெற்றி இலக்கங்களை தெரிந்துக்கொள்ளுங்கள்.
twitter.com/dialoglk facebook.com/dialog.lk

இலங்கையின் பிரபலமான
தொலைத் தொடர்பு சேவை வழங்குனர்
2018

Dialog
an axiata company
www.dialog.lk
எதிர்காலம் இன்றே.

அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில்
தங்கத் தீர்வுடன் கை நிறைய பரிசுகள்...



- பூரண இரகசியத்தன்மை
- சிறந்த பாதுகாப்பு
- அதிகூடிய முற்பணம்
- சிநேகபூர்வமான உடனடி சேவை

24 கரட் தங்கப் பவுண் ஒன்றுக்கு குறைந்த வட்டியுடன் அதிகூடிய முற்பணம் ரூ 40,000



* நிபந்தனைகளுக்குட்பட்டது.

இக்கொடுப்பனவு கையிருப்பு உள்ளவரை மட்டுமே

செலான் தங்க நகை அடகுச் சேவை

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
011 200 88 88 www.seylan.lk

செலான் வங்கி

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தமிழ், முஸ்லிம் மக்களின் இணைவு இன்றி கூட்டாட்சி சந்தேகம்தான்

அம்பாறை, கண்டிக் கலவரங்களுக்குப் பின்னர் வடக்கு மாகாண சபையில் உரையாற்றி இருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் அப்துல் நியாஸ் சீனி முகமத் காலத்துக்குப் பொருத்தமான கருத்து ஒன்றைத் தெரிவித்திருக்கிறார். சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான வன்முறைகள் நடக்கக்கூடாது என்றால் இலங்கையில் கூட்டாட்சி, சமஷ்டி முறையான தீர்வு ஏற்பட வேண்டும் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

கடந்த 60 வருடங்களுக்கும் மேலாகவே இந்த விடயம்தான் சொல்லப்பட்டு வருகின்றது. குறிப்பாகத் தமிழர்கள் கூட்டாட்சியைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். அது நடக்காமல் போனபோதுதான் வன்முறை வழியில் ஆயுதப் போராட்டத்தில் குதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 30 வருட காலம் ஆயுதப் போராட்டத்தின் விளைவுகளை இலங்கை அனுபவித்திருக்கிறது.

எனினும் போரின் பின்னரும் இனங்களுக்கு இடையிலான உறவுகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை. எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருக்கக்கூடிய இனத்தவர்களைத் தொடர்ந்தும் அடக்குமுறைக்கு உள்ளாக்கும் மனோபாவமும் போக்கும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன என்பதையே அம்பாறை மற்றும் கண்டி வன்செயல்கள் காட்டி நின்றன.

இத்தகைய நிலமையைச் சமாளிப்பதற்கும் பேரினவாதத்தை எதிர்த்து நிற்பதற்கும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதும் ஓரினத்தை மற்றொன்று புரிந்துகொண்டு செயற்படுவதும் அவசியம். ஓர் இனத்தின் வேணவாவை மற்றொரு இனம் புரிந்துகொண்டு விட்டுக்கொடுப்புகளுடன் நடப்பதன் மூலம் மட்டுமே இது சாத்தியப்படும். குறுகிய அரசியல் நலன்களுக்காக, நிலமைகளுக்கு ஏற்ப அவ்வப்போது பேரினவாதத்துடன் சேர்வதும் பிரிவதுமாக இருப்பது ஒரு போதும் தமிழ், முஸ்லிம் இனங்கள் மத்தியிலான உறவைக் கட்டியெழுப்புவதாக இருக்காது.

கிடைக்கும் வாய்ப்புக்களின் போதெல்லாம் தமிழ், முஸ்லிம் உறவுகளைக் கட்டியெழுப்புவதில் இரு தரப்பு அரசியல் தலைவர்களும் உளச்சுத்தியோடு முயன்றால் மட்டுமே அது சாத்தியமாகும். அத்தகைய உறவைச் சாத்தியப்படுத்தாமல் பேரினவாதத்தை எதிர்த்து நிற்பது ஒருபோதும் வெற்றியளிக்கக்கூடிய உத்தியல்ல.

போர் முடிந்ததன் பின்னரான காலத்தில் இந்த விடயம் தமிழர்களின் தரப்பிலிருந்து தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. அதற்கான விட்டுக்கொடுப்புடன் நடப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் தமிழ்த் தலைவர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முஸ்லிம்களுக்கு நிலத் தொடர்பற்ற தனி ஆட்சிப்பகுதி ஒன்றை வழங்குவதற்குக்கூட கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பகிரங்கமாகவே இணக்கம் தெரிவித்திருந்தார். இருந்தும் முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதிகளிடம் இருந்து அதற்குச் சாதகமான சமிக்ஞைகள் எவையும் வரவில்லை என்பதையும் அவர் கவலையோடு கடந்த காலங்களில் கூறியிருந்தார்.

அத்தகைய தனி அலகு மற்றும் அதனடிப்படையிலான கூட்டாட்சித் தீர்வு ஏற்பட்டால், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே இருக்கும் முஸ்லிம்களின் நிலமை குறித்த கரிசனை முஸ்லிம் தலைமைகளுக்கு இருப்பதும் நியாயமானதே. குறிப்பாக தற்போது சிக்கலுக்கு உள்ளாகி இருக்கும் கண்டி போன்ற இடங்களில் வசிக்கும் முஸ்லிம்கள் இத்தகைய சிக்கல்களால் மேலும் துன்பப்பட வேண்டி வரும் என்கிற கரிசனை இருப்பதும் ஏற்கத்தக்கதே.

அந்தச் சிக்கல்களுக்கு முடிவு கிடைக்கக்கூடியதான தீர்வை கலந்தாலோசித்து அடைவதற்கு தமிழ், முஸ்லிம் மக்களின் இணைவு அவசியமானது. முஸ்லிம்கள் மட்டுமல்ல வடக்கு கிழக்குக்கு வெளியே தமிழர்களும் பெரும் எண்ணிக்கையில் வசிக்கிறார்கள். அவர்களின் நலன்களும் தீர்வு வரும்போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இவற்றையெல்லாம் அடைவதற்கும் கூட்டாட்சித் தீர்வு ஒன்றை அடைவதற்கும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைவது அவசியம். அது சாத்தியமாகும் போதுதான் சிறுபான்மை இனங்கள் பாதுகாப்போடு வாழும் சூழலை இலங்கையில் ஏற்படுத்த முடியும். மாகாண சபை உரையோடு நின்றுவிடாமல் சீனி முகமத் போன்றவர்கள் கூட்டாட்சியை உருவாக்கக் கூடிய அரசியல் சூழ்நிலைக்குள் தமிழ், முஸ்லிம் தலைமைகளைக் கொண்டுவருவதற்கும் முன்னின்று உழைக்க வேண்டும்.

# அரசு செயற்படாமல் இருக்கும் வரையில் மகிந்தவுக்கே அதிக வாய்ப்பு



சேரலாதன்

கண்டியில் இடம்பெற்ற கலவரங்களுக்கு அரசே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டுமெனக் கூறியுள்ளார் முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்ச. அமைதியை நிலைநாட்டுவதற்கு அரசு செய்ய வேண்டிய வேலைகளைத் தாமே முன்னின்று செயற்படுத்துவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

**தம்மைப் புனிதராகக் காட்டிக் கொள்ள நாடகமாடும் மகிந்த**

முன்னாள் அரச தலைவர் என்ற வகையில் தமக்கும் சில பொறுப்புக்கள் உள்ளன என்று அவர் வெளிக்காட்டிக்கொண்டதாகவே அவரது மேற்குறித்த கருத்துவெளிப்பாடு கருதவைக்கிறது.

ஆனால் எல்லாமும் நடந்து முடிந்த பின்னர் அறிக்கை வெளியிடுவதால் எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை. அம்பாறையில் ஆரம்பித்த முஸ்லிம்களுக்கு எதிரான கலவரம் கண்டிக்குப் பரவி பெரும் இடரை ஏற்படுத்திவிட்டது. முஸ்லிம் சமூகத்தினரது பல நூற்றுக் கணக்கான வீடுகள், வர்த்தக நிலையங்கள் எரியூட்டி அழிக்கப்பட்டன. 25க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் சேதமாக்கப்பட்டன. முஸ்லிம் மக்கள் கடுமையாக அச்சுறுத்தப்பட்டனர். பள்ளிவாசல்களுக்குச் சென்று தொழுகையில் ஈடுபடுவதற்குக்கூட, அவர்களால் முடியவில்லை. பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. கண்டியின் எல்லைப் புறங்களே அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

**கலவரத்துக்கான பொறுப்பை அரசின் தலையில் சுமத்துகிறார் மகிந்த**

தற்போது தம்மையொரு புனிதராகக் காட்டுவதற்கு முயற்சி செய்கின்ற மகிந்த, கலவரத்துக்கான பழி முழுவதையும் அரசின் மீதே சுமத்துகின்றார்.

அவர் தலைமை தாங்குகின்ற கூட்டு எதிரணியினரின் முக்கிய கொள்கையே இனவாதம்தான். இனவாதம் பேசாதுவிட்டால் இவர்களால் அரசியலில் தம்மை நிலை நிறுத்திக் கொள்ள முடியாது. மகிந்தவுடன் கூட இருப்பவர்களில் பலரும் இனவாதிகளே என்பதையும், நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த நிலையில் கண்டியில் அமைதி ஏற்படுவதற்குத் தாமே காரணமென மகிந்த கூறியுள்ளமை வேடிக்கையானது.

இதேவேளை இடம்பெறவிருக்கும் அரச தலைவருக்கான தேர்தலில் முஸ்லிம் மக்களின் வாக்குகளை ஈட்டிக்கொள்ளும் பொருட்டே மகிந்த ராஜபக்ச நாடகமாடுவதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியிருக்கிறார். அவர் மேலும் கூறுகையில், மகிந்தவின் வாக்குவங்கி 2015 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வீழ்ச்சி கண்டு வருகின்றது. 2015ஆம் ஆண்டில் அது 48 சதவீதமாக இருந்தது. பின்னர் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல், இறுதியாக இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் ஆகியவற்றில் அவருக்குப் பின்னடைவே ஏற்பட்டது. அதைச் சரிசெய்வதற்கான முயற்சிகளிலேயே மகிந்த ஈடுபட்டுள்ளார் என்றார்.

அமைச்சர் சம்பிக்கவும் ஒரு இனவாதிதான் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே. தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான கருத்துக்களையே அவர் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றார்.

**அரசியல் இருப்பை நிலை நிறுத்தும் நோக்கில் செயற்படும் பெரும்பான்மையின அரசியல்வாதிகள்**

பெரும்பான்மையின அரசியல்வாதிகள் தமது தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே சிறுபான்மையினரைப் பயன்படுத்திக்கொள்கின்றனர். வடக்குக்கிழக்குத் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழ்கின்றனர். இவர்களில் அநேகமானவர்கள் நாட்டின் பிரதான கட்சிகள் இரண்டிலும் அங்கம் வகிக்கின்றனர். இந்த நிலையில் இவர்களின் ஆதரவை ஈர்க்க வேண்டிய தேவை பெரும்பான்மையின ஆரசியல்வாதிகளுக்கு உள்ளது.

பெரும்பான்மையின இனவாதிகள், சிறுபான்மையினரான தமிழர்களும், சிங்களவர்களும் ஐக்கியமாக வாழ்வதை ஒருபோதுமே விரும்பியதில்லை. அவர்களின் சூழ்ச்சி காரணமாகவே தமிழர்களின் போராட்டங்களிலிருந்து முஸ்லிம் மக்கள் விலகி நின்றனர். போரின் போது முஸ்லிம் மக்கள் வேவு பார்க்கின்ற கடமையில் வெற்றிகரமாக ஈடுபட்டு சிங்களவர்கள் போரில் வெற்றி பெறுவதற்கு உதவியதாகக் கூட்டுப்படைகளின் பிரதானி கூறியிருப்பது தமிழ், முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்துவதற்கான ஒரு திட்டமே என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். கிழக்கு மாகாணத்தில் இந்த இரண்டு இனத்தவர்களையும் பிரித்துவிடுவதற்கான முயற்சிகள் இடம் பெறுவதை அவதானிக்க முடிகின்றது. இந்த இரண்டு இனங்களையும் சேர்ந்த மக்கள் வாழ்கின்ற கல்முனையில் இந்துக்களுக்கெதிரான சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. தமிழர்களையும், முஸ்லிம்களையும் மோதவிடுவதன் மூலமாக ஏதோவொரு தீயசக்தி இலாபமடைய முயற்சிப்பது இதிலிருந்து தெரிகின்றது. ஆகவே தமிழ், முஸ்லிம் மக்கள் விழிப்புடன் இருந்து இதை முறியடிக்க வேண்டும். இவர்கள் விழிப்புடனும், உறுதியாகவும் இருந்தால் எந்தப் பிரச்சினையையும் சமாளிக்க முடியும். இதேவேளை பாதிக்கப்பட்ட பள்ளிவாசல்கள் சிலவற்றில் பௌத்த துறவிகள் சிலர் பாதுகாப்புக்காக நின்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. சில பௌத்த துறவிகளே முன்னின்று கலவரங்களைத் தூண்டியதாகச் செய்திகள் வெளிவந்துள்ள நிலையில், வேறொரு சாரார் இவ்வாறு நடந்துள்ளனர். ஆகவே கலவரங்களுக்கான உண்மைகள் கண்டறியப்பட்டு, அதில் சம்பந்தமான இறுக்கமான நடவடிக்கை எடுப்பது அரசின் பிரதான கடமையாகும். அதுவரைக்கும் ஒருவரையொருவர் மாறிமாறிக் குற்றம் சாட்டுகின்ற செயற்பாடுகள் தொடரத்தான் செய்யும். அரசு தனது பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ளுமானால், நாட்டில் மீண்டும் மீண்டும் கலவரங்கள் இடம்பெறுவதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. அதுமட்டுமல்லாது அது மகிந்த தரப்புக்கு வாய்ப்பாகவும் அமைந்துவிடும்.

# கண்டி வன்செயல் சூத்திரதாரிகள் தண்டிக்கப்படல் அவசியம்

ஆங்கிலமொழிமூலம்: டெய்லிநியூஸ்
தமிழில்: ஆனந்த்

கடந்த வாரம் நாட்டில் இடம் பெற்ற அசாதாரணசம்பவங்களால், கண்டியிலும், அம்பாறையிலும்அவசர காலச்சட்டமும், பொலிஸ்ஊரடங்கும்நடைமுறைப்படுத்தப்பட நேர்ந்தமை சகலரும் அறிந்ததொன்றே. இதற்குக்காரணம், இந்த இரண்டுஇடங்களிலும், தனிப்பட்ட இரண்டு நபர்கள் சம்பந்தப்பட்ட இரு சம்பவங்களின் எதிரொலியாக, காட்டுத்தீ போன்று, பரவிய, முஸ்லிம்களுக்கெதிரானசிங்களகாடையர்களின் வன்செயல்களே. சட்டத்தினூடாக செயற்படுத்தப்படவேண்டியவிடயங்களை, தமது கைகளில் எடுத்து செயற்பட்ட காடையர்களின் போக்கே இந்த வன்செயல்களுக்குவழிவகுத்தது. இதனூடாக நாங்கள் ஒன்றைப்புரிந்துகொள்ளவேண்டியுள்ளது. ஒரு சிறிய அசம்பாவிதம் கூட, ஒரு சிறு பொறி, பெரும் தீச்சுவாலையாக மாறி விட முடியும்என்பதேஅது. இதைப்போன்ற வன்முறைச்சம்பவங்கள், காலிப்பகுதியிலுள்ள, 'ஜின் தோட்டை'யிலும், 'அழுத்கம'விலும் முன்னர்இடம்பெற்றமையைநாம்நினைவுபடுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. அவை முஸ்லிம்களுக்கெதிராக திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்ப்பட்ட தாக்குதல்களாகும். இதன்போதுமுஸ்லிம்களின்வர்த்தகநிலையங்கள், வணக்கஸ்தலங்களுடன், கிறிஸ்தவர்களின் இடங்களும் கூடப் பாதிக்கப்பட்டன. அண்மையவன்செயல்கள்நடந்துள்ள முறைகளைப் பார்க்கும்போது, இவை யாவும்சிலவிஷமிகளினால்நாட்டில் இனப்பிரச்சினையை உருவாக்குவதற்காக திட்டமிட்டுமேற்கொள்ளப்பட்ட செயல்களாகவே கருத முடிகிறது. காவல்துறையினர் இந்தச் சந்தர்ப்பங்களில் தங்கள் கடமைகளை சரிவரச்செய்யாமல்இருந்ததுடன்,முஸ்லிம்கள் தாக்கப்படுவதற்கு உடந்தையாகவும்இருந்துள்ளனர்.

அரசு இந்த உண்மையை மறைத்து விட முயலக்கூடாது. இதுபற்றியவிசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, குற்றவாளிகள் இனங்காணப்பட்டு,தண்டிக்கப்படவும்வேண்டும். இந்தஅரசுஇதற்கானகடும்நடவடிக்கைகளை எடுத்தால்தான் எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாது என மக்கள் நம்புவார்கள்.

### இனவாத மோதல்கள்

1983 ஆம் ஆண்டின் ஜீலை மாதத்துக்கு முன்னரும்கூடஇதுபோன்றஇனவாதவன்செயல்கள், இடைக்கிடை தலைதூக்கிய சம்பவங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. அதைப் போன்ற நிலமை எந்த நேரமும் மீண்டும்உருவாகலாம். இதில் அவதானிக்கத்தக்க ஒரேயொரு வேறுபாடு, முன்னர் தமிழர்களுக்குப் பதிலாக, அந்த இடத்தில் இப்போது முஸ்லிம்கள்இருப்பார்கள். அப்படி நடக்குமானால், அது தேசியத்துக்குப்பெரிய ஆபத்தானநிகழ்வாக அமைந்துவிடும். அத்துடன் அதன் விளைவுகளும் பெரிய அளவிலேயே இருக்கும். நாங்கள் பன்னாட்டுச் சமூகத்தின் முன்பாக, நாகரிகமடையாத காட்டுமிராண்டிகள் என அடையாளப்படுத்தப்பட்டுவிடுவோம். அத்துடன் வெளிநாடுகளின் முதலீடுகள், வெளிநாட்டவரால் மேற்கொள்ளப்படும் இலங்கைக்காக சுற்றுலாக்கள், அபிவிருத்தி போன்ற எல்லாமுமே பெரிய அளவில் பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும். அத்துடன்நாட்டில்நடந்த30வருடகால கொடிய உள்நாட்டு போருக்கு வழிவகுத்தது, 1983ஆம் ஆண்டு ஜுலை மாதம் நடந்தவன்செயல்கள்தான். இதன்பலனாக பல்லாயிரக்கணக்கான சாவுகளும், சொத்துக்களுக்கு அழிவும் நேர்ந்ததுடன், இன்றைக்கும் கூட அதன் விளைவுகள் தொடர்கின்றன. சிறு பொறி கூட பெரிய தீயாக மாறி வெடித்து விடக்கூடியதான சூழ்நிலை இருக்கும் இன்றைய நிலையில், இன்னொரு இனவாதப் போருக்கு இடம் கொடுத்தால் நிச்சயம் இலங்கைக்கு அது ஒரு சாபக்கேடாகஅமைந்துவிடும். ஆகவேஇந்தநிலமை தொடருவதை அனுமதிக்கவே கூடாது. மதவாத அல்லது இனவாத வன்செயல்கள் தடுத்துநிறுத்தப்படவேண்டும். இதற்குமுன்னர் நடந்த வன்செயல்களைப் புரிந்த வர்களுக்கெதிராகசரியானநடவடிக்கைஎடுக்காமையிலேயே தான், மீண்டும் இப்படியாக இனக்கலவரம்வெடித்துள்ளது. முன்னைய அரசும், ஏன் தற்போதைய அரசும் கூட நிலமையைஉரியமுறையில்கையாளத்தவறிவிட்டன. அதனால் தான் நாட்டில் குற்றவாளிகளும், இனவாத, மதவாதத்தரப்பினர்களும் அச்சமில்லாமல் தாங்கள் தான் தாய்நாட்டைநேசிப்பவர்கள்என்றுபறைசாற்றிக் கொண்டு வன்முறைச் சம்பவங்களை மேற்கொள்கின்றனர்.

### பொலிஸாருக்கு எதிரான குற்றச்சாட்டுகள்

அநேகமானசந்தர்ப்பங்களில்வன்செயல்களில் ஈடுபடுவோர் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களல்ல. அவர்கள்வெளியிடங்களிலிருந்து வந்தவர்களாகவே இருக்கின்றனர். இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைநேரில்பார்த்தசாட்சிகளும்இவற்றை உறுதிபடுத்துகின்றனர். காவல்துறையினர் வன்முறையாளர்களை கண்டுமிருப்பார்கள், ஆனால்என்னகாரணத்தாலோஅவர்கள்அதில்குறுக்கிடாமல்இருந்துள்ளமையே அவர்களுக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படக்காரணமாகஅமைந்துள்ளது. ஒரு கேள்வியை முன் வைத்து அதற்கான பதிலையும் ஆராய்ந்து பார்ப்போம். இந்தஇனவாதம்பரவுவதால்நன்மையடையப்போவது யார்? நிச்சயமாக அவர்கள் சந்தர்ப்பவாதிகளான அரசியல்வாதிகளாகத்தான்இருப்பார்கள், தங்கள்இருப்பைத்தக்கவைத்துக்கொள்ள அல்லது கை நழுவி போன அதிகாரத்தை மீண்டும்கைப்பற்றிக் கொள்ள, தங்கள் தங்களது தொகுதிகளிலே இனவாதத்தைத்தூண்டிவிட்டவர்கள்இவர்களேதான். வேறு சிலரும் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர்.

அந்தந்தப்பகுதிகளிலிருக்கும் வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றின், ஏகபோக உரிமைகளை கைப்பற்றும் முனைப்புடன் ஒருசாரரும் செயற்பட்டு இருக்கின்றனர். அதுமட்டுமல்லாது, புவிசார்காரணங்களுக்காக வெளி நாட்டுச்சக்திகளும் இந்த வன்முறையாளர்களுக்கு உந்து சக்தியாகவும் செயல்படக்கூடும்.

முஸ்லிம்கள்தமிழர்களுடனும், சிங்களவர்களுடனும் சமாதானமாகவே கடந்த பல ஆண்டுளாக வாழ்ந்து வருகின்றனர். இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக அவர்கள் போராடியுள்ளதுடன் நாட்டின் அபிவிருத்திநடவடிக்கைகளிலும் அவர்கள் பங்களிப்பு செய்துள்ளனர். அவர்கள் பிரிவினைவாத போராளிகளுடன் இணையாமல், இந்த நாட்டின் இறைமையைக்காப்பதற்காகஅரசுக்களுக்குத்துணையாகநின்றனர். அவர்களில்ஒரு சிலர்தான் மோசமானவர்களே தவிர, மற்றைய எல்லோருமே தேசப்பற்றுள்ளவர்களாகவே வாழ்கிறார்கள். இப்போதுள்ள சூழ்நிலையில் மதத்தின் பெயரால் இனமோதல்கள் இடம் பெறுவது தூரதிஷ்டவசமானதே.

மகாநாயக்கதேரர்களும், மற்றைய மதத்தலைவர்களும்இப்போதுபகிரங்கமாகஇந்த வன்செயல்களைகண்டிப்பதுடன்,எல்லாஇன மக்களையும்அமைதிகாக்கும்படிவேண்டிக் கொண்டிருப்பதுபாராட்டதக்கதேஎன்றாலும், இதனை அவர்கள்இதற்கு முன்னரேகாலம் தாழ்த்தாமல்செய்திருந்தால்இன்னும் கூடுதலான பாராட்டைப் பெற்றிருப்பார்கள்.



### சமாதானமும் சமரசமும்

இனவாதமென்பது புற்று நோய்போன்றது. அதுஒருவரின்உடலில்உட்புகுந்துவிட்டால் மெதுமெதுவாக உடம்பின் சகல பாகங்களையும்அரிக்கத்தொடங்கிவிடும். அதனை ஆரம்பகட்டத்திலேயேகண்டுபிடித்து, தீவிர சத்திரசிகிச்சையைநடத்தி முற்றாக அழித்துவிடவேண்டும். இப்போதுஆரம்பக்கட்டத்தில் மென்மையாக இருக்கும் இந்தவியாதியை முற்றாகஇல்லாமல்செய்யவேண்டும். நாங்கள் சகல அரசியல் கட்சிகளிடம் கேட்டுக் கொள்வதுஎன்னவென்றால், நாம்எல்லோரும் சேர்ந்து இன, மத பேதங்களைமறந்து, எங்களுடைய மக்களுக்கு ஒரு சமாதானமான, நிம்மதியானவாழ்க்கையை அமைத்துக்கொடுப்போம். அரசியல்இலாபம்கருதாமல், ஒருவருக்கொருவர் குரோதம் பாராட்டாமல் சகல அரசியல் வாதிகளும் மக்களுடைய நலனுக்காக சேவையாற்ற வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும். குடிசார் சமூகமும், ஏனைய குழுக்களும், ஊடகங்களும் கூட இதில் கணிசமான அளவுக்குப் பங்களிப்பு வகிக்கவேண்டியது அவசியமாகியுள்ளது. நாட்டில்இனவாதமும், மதவாதமும் தலை தூக்கி எங்கள் சமூகத்தைச் சீர்குலைக்காமல் இருக்க வேண்டும். குடிசார் சமூகம்தான் எங்களுடைய இறுதியான மத்தியஸ்தர்களாவர்.

## ஆசிரியருக்கான கடிதம்

### விவசாய முயற்சிகளுக்கு இடையூறு விளைவிக்காதீர்!

தென்மராட்சிப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை அறுவடை முடிவடைந்த நிலையில்பலவிவசாயிகளால்தத்தமதுவயல்நிலங்களில்சிறுதானிய ப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், கட்டாக்காலி கால்நடைகள் அவற்றை அழித்து வருவதாக ஊடகங்களின் ஊடாக அறியக் கூடியதாக உள்ளது. இந்தக் கட் டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த விவசாய சம்மேளனங்கள் கடுமையான சட்ட நடவடிக்கைஎடுக்கவேண்டும். அதற்குஅமைவாககால்நடைவளர்ப்போரும்சிந்தித்து தமதுகால்நடைகளைகட்டிவளர்த்துவிவசாயிகளுக்குஒத்துழைப்பு வழங்கமுன்வர வேண்டும். 'திருடனாய்ப்பார்த்துத்திருந்தாவிட்டால்திருட்டைஒழிக்கமுடியாது' என்ற பாடல் வரிகளுக்கு ஒப்ப கால்நடை வளர்ப்போரும் சுயமாகச் சிந்தித்து தமது கால்நடைகளை குறிப்பிட்ட காலத்துக்குக் கட்டி வளர்த்து உழவப் பெருமக்களுக்கு ஆதரவாகச்செயற்பட வேண்டும். அதைவிடுத்து தான்தோன்றித்தனமாக கால்நடை வளர்ப்போர் செயற்பட்டால், நாட்டில் பஞ்சம், பட்டினிதான் ஏற்படும். எனவே சிந்தித்து செயற்பட்டு உழவுத் தொழிலுக்கு ஊக்கமளித்து நாட்டில் பசி, பட்டினி இல்லாது ஒழிக்க முயல்வோம்.

தென்மராட்சி மைந்தன்.

### பிரச்சினைகளுக்குப் பேசித் தீர்வு காண்பதே சிறப்பு

பன்னாட்டு ரீதியிலும், உள்நாட்டு ரீதியிலும் நிராகரிப்பும், புறக்கணிப்பும் பல சங்கடங்கள், சிரமங்களை பொதுமக்களுக்கு அளித்து வருவது தெளிவு. சனநாயக நீரோட்டத்தில் இவை சர்வசாதாரணமானவையே.


பல்லின மக்கள் வாழும் எந்தவொரு நாட்டிலும் இனங்கள் மத்தியில் சிக்கல்கள் ஏற்படுவது வழமையே. காணிகள் கையகப்படுத்தல், கைதிகள் விடுவிக்கப்படாமை, கல்வி விடயங்கள், வேலைவாய்ப்புக்கள், பாதுகாப்பு போன்றவிடயங்கள்பொதுமக்களதுசிரமங்களுள் அடக்கம். தேவைக்கேற்ப தனிப்பட்டோ நிறுவனமாகவோ இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டி கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

திடீர் அறிவித்தல் மூலம் கவனவீர்ப்புக்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படுவதால், பொதுமக்களது அன்றாடக் கருமங்களில் தடைகளும் தாமதங்களும் ஏற்படுகின்றன. எந்தவிடயம்தொடர்பாகவும்பரஸ்பரபுரிந்துணர்வும்விட்டக்கொடுப்பும்நிலவ வேண்டியதுஅவசியம். விடயங்களைத்தீர்க்கமாகஆராய்ந்துஅரசியல், சமூகம்பொருளாதார கட்டமைப்பு ரீதியில் தீர்வு பெறல் நன்று. மக்கள் எதிர்பார்ப்புக்கும் நியாயம், நேர்மை என்பவற்றுக்கும் அரசியல்வாதிகளின் நடைமுறைச் செயல்களுக்கும் இடையே ஏமாற்றம் அளிக்கும் அளவில் பெரிய இடைவெளி நிலவுகிறது. எல்லோரும் நல்லவற்றையே செய்து எம்மிடையே வெற்றி, அமைதி, இன்பம் நிலவிடப் பங்களிப்போம்.

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா, பருத்தித்துறை.

# பாடசாலைகள் என்பவை சமூகத்தின் கண்ணாடிகள்

அன்ரனி பீற்றர்



ஒரு சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவது அந்தப் பிரதேசத்தின் பாடசாலையே. பாடசாலைகளின் எழுச்சியும் வளர்ச்சியும் அந்தந்தப் பாடசாலையை முகாமை செய்யும் தலைமை முகாமையாளரான அதிபரிலும் அவரின் குழுமத்திலும் பெரிதும் தங்கியுள்ளது.

அறிவையும், ஆளுமையையும், வீரதீரச் செயல்களையும் கலை, பண்பாடு கலாசார விழுமியங்களையும் பாடசாலைகளிலிருந்துதான் மாணவர்கள் கற்றுக்கொள்ள வாய்ப்பும் வழியும் ஏற்படுகின்றன. அனைத்தையும் சீராகக் கற்கின்ற அல்லது அறிந்து கொள்கின்ற மாணவர்கள், தம்மியல்புக்கு ஏற்ப அறிந்து கொள்கின்ற மாணவர்கள், எவற்றையுமே அறிந்து கொள்ள விரும்பாத மாணவர்கள் என்று மூன்று வகைப்பட்ட மாணவர்கள் பாடசாலைகளிலே பயில்வார்கள். 30-35 வீதத்துக்கு உட்பட்ட மாணவர்களே அறிவு, ஆளுமை நிறைந்தவர்களாக சமூகத்தை அடைகின்றார்கள். ஏனையவர்கள் இடை விலகுகின்றவர்களாகவும் வெறுமனே பாடசாலைக் காலம் முடியும் போது காலத்தை நிறைவு செய்து வெளியேறுகின்றவர்களாகவும் இருப்பதைக் காணமுடிகின்றது.

**ஆசிரியர்களின் பணி அளப்பெரும் பணியே**

தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களை ஒவ்வொரு ஆசிரியரும் கடமை உணர்வோடு அவர்களின் திறன்களை இனங்கண்டு, சிறப்பாக அவற்றிலே அவர்களை ஊக்குவிப்பதுடன் பாடசாலை நிர்வாகத்துக்கு தெரியப்படுத்தி அந்தத்துறை சார்ந்து அவர்களுக்கு பயிற்சியும் வழிமுறைகளும் செய்து கொடுக்கும் போது, அவர்கள் அறிவு ஆளுமையுடன் பல திறன்களை வெளிப்படுத்தக் கூடிய ஆற்றலைப்பெற்றுக் கொள்வார்கள். முறை சார்ந்த கற்றலுடன் முறைசாராக் கல்வியையும் பெறும்போதும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கு மாணவர்கள் ஊக்குவிக்கப்படும் போதும் அவற்றிலே திறமைகளை வெளிப்படுத்தும் மாணவர்கள் பலர், வருங்கால வாழ்வில் தத்தம் துறைகளையே வாழ்க்கைத் தொழிலாக முன்னெடுப்பதையும், வளர்ந்து வருமானமீட்டி, வளமாக வாழ்வதையும் காண முடிகின்றது. இவற்றுக்கு காரணமாக இருப்பவர்கள், திறமையை இனங்கண்டு ஊக்குவித்து வழிப்படுத்தும் ஆசிரியர்களே என்பதை, அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். இதற்கு இலக்கணமான மாணவர்களும் உள்ளனர். அதேநேரம் விதிவிலக்கான வர்களும் உள்ளனர் என்பதை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

> சமூகத்தின் முன்னேற்றம் பாடசாலை களிலும், அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளின் ஒத்துழைப்புடனே முன்கொண்டு செல்லப்பட வேண்டும். எல்லோரும் தியாக மனப்பாங்குடன் செயற்பட்டால், எத்தனை பிரச்சினைகள், துன்பங்கள், எதிர்ப்புக்கள் வந்தாலும் தமிழர் என்ற உணர்வுடன் நாமெல்லோரும் ஒன்றிணைந்து பிரிவினை களுக்கு இடம்கொடுக்காது, இனத்தின் விடிவுக்காக உழைப்போமாக இருந்தால், கல்வியால் காலம் கைவசமாகும். ஒற்றுமையால் உயர்வே.

**உயர்வுக்குக் காரணம்**

பாடசாலையின் உயர்வுக்கு, கல்விப் புலமையையும், ஆளுமையையும், நிர்வாகத்திறனும் நிறைந்த சிறந்த முகாமையாளரான அதிபரே முதற்காரணமாக இருக்கின்றார். ஆசிரியர்குழாம், மாணவர்கள் ஆகியோர் அடுத்தடுத்த படிகளிலே உள்ளனர். இதற்கு வாண்மைத்துவம் நிறைந்த அதிபர்களை நிர்வாகிகளாகப் பெற்ற, பல பெரிய பாடசாலைகளும், சிறிய பாடசாலைகளும் உதாரணங்களாக விளங்குகின்றன. அண்மைக்காலமாக இணைப்பாடவிதான செயற்பாடுகளிலே பல வசதியற்ற மைதானமில்லாத, கட்டிட வசதியில்லாத, பொருளாதார வசதி இல்லாத, உபகரண வசதியில்லாத சிறிய, பெயரே அறிந்திராத பாடசாலைகளின் மாணவர்கள் தேசிய மட்டம்வரை சென்று பதக்கங்களை வென்றமை இத்தகைய முகாமைத்துவத்தாலேயே.

ஊதியத்துக்காக நேரத்தை கணக்கிட்டு, எமக்கு முடியாது, நாம் நோயாளர் அது எம்முடைய துறையல்ல என்று வாண்மையுடைய பல ஆசிரியர் முன்வராது ஒதுங்கி இருக்கும் நிலையும் பாடசாலைகள், அப்பாடசாலை மாணவர்கள் திறன் விருத்தியிலே குறைவுள்ளவர்களாக இருப்பதற்கு காரணிகளாக இருக்கின்றன. குதிரைக்கு நீரை வைக்கலாமே தவிர, குடிக்கப்பண்ணமுடியாது. கல்வியும் விரும்பிக் கற்பிக்கும் போதும், கற்கும் போதும்தான் பயனைத் தரும். வைத்தியர் பிழை விட்டால் நோயாளிதான் சாவடைவான். ஆசிரியர் பிழைவிட்டால் சமுதாயமே நலிவடையும். ஆசிரியரின் பணி மகத்துவம் நிறைந்தது ஆசிரியர்களே சமுதாயத்தை உருவாக்கும் சிற்பிகள் என்பதற்கு இருவேறு கருத்தில்லை.

**எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணங்கள்**

முற்காலத்திலே கல்வி எழுச்சிக்கும் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் உணர்ச்சிக்கும் பல காரணங்கள் இருந்த போதும், ஆசிரியர்களிடத்தில் மாணவர்கள் கீழ்ப்படிவுடன் நடந்து கொண்டதும், ஆசிரியர்கள் தம்மை நம்பி வந்த மாணவர்களை, கல்வியிலும் ஒழுக்கத்திலும், ஆன்மிகத்திலும் கலை பண்பாடுகளிலும் சிறந்தவர்களாக, தியாக மனப்பான்மையுடன் உருவாக்கியதும் எழுச்சிக்கும் உயர்ச்சிக்கும் காரணமாக அமைந்தன என்பது மிகையாகாது. போர்ச் சூழல், கால மாற்றத்தினால், தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாட்டினால், குருவில்லா வித்தைகளைப் பணம் கொடுத்து வாங்கமுடிவதினால், கல்வியின் மகத்துவத்தை விட, பணத்தின் முக்கியத்துவம் முன்னிலைப்படுவதால், கல்வியை விட, உழைப்பே பணத்தைப் பெற வழிப்படுத்துவதால், பாடசாலை ஆசிரியர், கல்வி என்பன உதாசீனப்படுத்தும் நிலைகள் பெருக ஆரம்பித்துள்ளன. பணம் போதைக்கும் தீயவழிகளுக்கும் இட்டுச் செல்வதை அறியாத சமுதாயம் இன்று ஏற்பட்டுள்ளது. இது வருந்தத்தக்கதாகும். ஏராளமான மாணவர்கள் கல்வி உயர்வில் சமுதாய முன்னேற்றத்தில் அக்கறை அற்றவர்களாக மாறிக் கொண்டிருப்பது. ஆதங்கத்தை ஏற்படுத்துகின்றது.

ஆக, சமூகத்தின் முன்னேற்றம் பாடசாலைகளிலும், அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளின் ஒத்துழைப்புடனே முன்கொண்டு செல்லப்பட வேண்டும். எல்லோரும் தியாக மனப்பாங்குடன் செயற்பட்டால், எத்தனை பிரச்சினைகள், துன்பங்கள், எதிர்ப்புக்கள் வந்தாலும் தமிழர் என்ற உணர்வுடன் நாமெல்லோரும் ஒன்றிணைந்து பிரிவினைகளுக்கு இடம்கொடுக்காது, இனத்தின் விடிவுக்காக உழைப்போமாக இருந்தால், கல்வியால் காலம் கைவசமாகும். ஒற்றுமையால் உயர்வே ஓங்கும்.

## வரலாற்றில் இன்றைய தினம் 15.03.2018

1493 - அமெரிக்காவுக்கான தனது முதலாவது பயணத்தை நிறைவுசெய்து கொண்டு ஸ்பெய்னுக்குத் திரும்பினார் கிறிஸ்தோபர் கொலம்பஸ்.

1888 - ஆங்கிலேய - திபெத்திய போர் தொடங்கியது.


1922 - பெயரளவிலான சுதந்திரத்தை பிரிட்டனிடம் இருந்து எகிப்து பெற்றுக் கொண்டதையடுத்து முதலாம் பாட் எகிப்திய அரசரானார்.

1961 - பொது நலவாய நாடுகள் அமைப்பில் இருந்து தென்னாபிரிக்கா விலகியது.

1986 - சிங்கப்பூரில் நியூவேர்ல்ட் விடுதியில் ஏற்பட்ட இடிபாட்டில் சிக்கி 33 பேர் சாவடைந்தனர்.

2011 - சிரியாவில் சிவில் போர் தொடங்கியது.

**1877 - முதன் முதலாக உத்தியோக பூர்வ டெஸ்ட் கிரிக்கெட் விளையாடப்பட்டது. ஆஸ்திரேலிய மெல்போர்ண் எம்.சி.ஜி.அரங்கில் ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையே இந்த ஆட்டம் நடைபெற்றது.**



**நாளை**

**16.03.2018**


வெள்ளிக்கிழமை

**பங்குனி 02**

திதி: சதுர்த்தசி மாலை 06.39 வரை
நட்சத்திரம்: சதயம் மு.இ. 07.00 வரை
சுபநேரம்: 06.20–07.50 வரை
ராகுகாலம்: 10.50–12.20 வரை

# MODERN City Inn

WiFi Available



Comfortable Air Conditioned Rooms with Attached Toilets and Hot & Cold Water

**Very Moderate Room Charges**

Single or Double Occupancy
and Family Apartment
Wedding / Small Group Conferance
All Kind of Parties

**10 minutes drive from Air Port.**
**You can contact in all Three language**

- Adequate Parking
- Satalite TV
- Beach Tour-Taxi
- Internet Facility
- Round Tour
- Airport Drops/Picks

426, Main Street, Negombo.
(Opposite Cargills Food City - Behind Glitz)
moderncityinn@yahoo.com
moderncityinn1@gmail.com
moderncityinn.com

For inquiries and Rescrvationes
Contact No:- 031-2233967
031-2231961
moderncityinn@yahoo.com

# அன்னை முத்துமாரி பஸ் சேவை

வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்

## கொழும்பு ⇄ யாழ்ப்பாணம்

காலை நேர பஸ் சேவையை ஆரம்பித்துள்ளோம்

Online Booking : www.annaimuthumari.com

கொழும்பில் இருந்து
காலை - 9.00 மணிக்கும்
பருத்தித்துறையில் இருந்து
காலை - 7.00 மணிக்கு புறப்பட்டு
யாழ்ப்பாணம் ஊடாக
காலை - 8.00 மணிக்கும்




தொண்டமனாறு, பருத்தித்துறை, கோப்பாய், சுன்னாகம், கொக்குவில், நல்லூர், யாழ்ப்பாணம்.

இதேபாதை ஊடாக பருத்தித்துறையில் இருந்து இரவு 9.00 மணிக்குப் புறப்பட்டு யாழ்ப்பாணம் ஊடாக 10.00 மணிக்கு இருவழி சேவை நடைமுறையில் உள்ளது.

**தொடர்புக்கு : 0775448503**

தமிழ் புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாட
குடும்பத்தில் உள்ள அனைவரும் விரும்பும்
ஆடைகள் ஒரே இடத்தில்

# ABI Fashion World அபி பஷன் வேல்ட்



தாராளமான இடம்!
ஏராளமான டிசைன்ஸ்!
உங்களுக்காகவே

யாழ். மாநகரில்
புடைவைகளுக்கு
ஓர் அடையாளம்

SPECIAL OFFER

**SALE 05% 70%**

இச்சலுகை நாளை முதல்
ஏப்ரல் 13 வரை மட்டுமே

வருடத்தில் குறைந்த விலை
வருடம் முழுவதும் நிறைவான சேவை
(விலைக்கழிவுகள் நிபந்தனைகளுக்கு உட்பட்ட)

- ஆடவருக்கான கோட் & சூட் ரூபா 5000/= முதல்
- டெனிம் ஜீன்ஸ் ரூபா 1000/=, ரீசேட் ரூபா 250/=
- ஒரு சேலை வாங்கினால் இன்னும் ஒன்று இலவசம்.
- சல்வார் வகைகள் 50% வரை விலைக்கழிவு
- சிறுவர்களுக்கான ஆடைகள் 50% வரை விலைக்கழிவு
- றொப் வகைகள் 50 % தள்ளுபடி விலையில்



என்ன வேண்டும்
உங்களுக்கு எல்லா
ஆடைகளும் இங்கு இருக்கு
கையிருப்பு உள்ளவரை மட்டுமே

112, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கும் பிரதம தபாலகத்திற்கும் இடையில்)

021 222 3738 | 0773246503 | 0770185471 | abifashionworld

# யாழ். திருநெல்வேலியில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட யாழ் வைத்தியசாலை

**24 மணிநேர சேவை**


## தற்போது அதிநவீன வசதிகளுடன் கூடிய சத்திர சிகிச்சைக் கூடம்



- ✓ **Laproscopy Surgery** (வீடியோ மூலம் சத்திரசிகிச்சை)
  - -Hernia (கேணியா)
  - -Appendectomy (அப்பன்டிஸ் அகற்றல்)
  - -Hysterectomy (கருப்பை அகற்றல்)
  - -Cholecystectomy (பித்தப்பை அகற்றல்)
  - -Dye Examination




- ✓ **General Surgeries**
  - -Vericosevein (வெறிகோஸ் சத்திரசிகிச்சை)
  - -Hernina (கேணியா சிகிச்சை)
  - -Appendection (அப்பண்டிஸ் அகற்றல்)
- ✓ **E.N.T சத்திர சிகிச்சை**
  - -Nasal (மூக்கு)
  - -Septoplasfy (மூக்கு சீராக்கள்)
  - -Ear (காது)
  - -Myringoplasy (காது சௌவு துவாரம் அடைத்தல்)
  - -Mastoidectomy
  - -Thyroidectomy (தைரொட்டு சுரபி அகற்றல்)
  - -Parotidectomy (உமிழ் நீர் சுரப்பி அகற்றல்)
- ✓ **Endocopy** (அதிநவீன என்டர்ஸ்கொப்பி )




அக்ரகாரா, அரச/ ETF தனியார் நிறுவனங்களின் காப்புறுதி அங்கீகாரம் பெற்றது.

- வெளிநோயாளர் பிரிவு O.P.D
- மருந்தகம் Pharmacy
- ஆய்வுக்கூட சேவை Laboratory



315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 3533, 021 222 1011, 0777 781 005

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு 021 493 1111


DLB தசலக்ஷபதி CAR PLUS



உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 49
சீட்டிழுப்பு திகதி 14.03.2018

வெற்றி இலக்கங்கள் 24 27 54 I திங்கள்

14 | 32, 14, 860/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 14.03.2018 | 2264 | பச்சை |

இடபம்

வெற்றி இலக்கங்கள் 30 32 50 59

வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 14, 657, 496/=

2018.03.16 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919


## தற்காலிக வியாபார நிலையங்களை அமைப்பதற்கான நிலங்களை பகிரங்க ஏலத்தில் வழங்குதல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் 2018 ஆம் ஆண்டு மஹோற்சவ காலப்பகுதியில் (22.03.2018 தொடக்கம் 15.04.2018 வரை) தற்காலிக வியாபாரம் மேற் கொள்வதற்கான நிலங்கள் பகிரங்க ஏலத்தில் வழங்கப் படவுள்ளன.

**காலம் : 18.03.2018 , காலை 9.00 மணி**

**இடம் : மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றல்**

ஏலத்தில் பங்குகொள்ள விரும்புவோர் ரூபா 500.00 இனை மீளளிக் கப்படாத கேள்வி வைப்புப் பணமாக செலுத்தி 18.03.2018 ஆம் திகதிக்கு முன்னர் ஆலய முகாமையாளரிடம் பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

ஏலத்தில் தேர்வு செய்யப்படுவோர் 21.03.2018 ஆம் திகதிக்கு முன்னர் முழுத்தொகையையும் செலுத்தி தமது தேர்வினை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

**பெறுநர் குழு,**
**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்**

**குறிப்பு:** பெறுநர்குழுவின் முன்னனுமதி பெறப்படாத நிறுவனங்கள் எவையும் இவ் ஆலய சுற்றாடலில் வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப் படமாட்டாது.

(ம. 6148) (13.17)

## கண்ணீர் அஞ்சலி

எமது வலயக்கல்வி அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் **திருமதி ம.சத்தியப்பிரியா** அவர்களின் அன்புத் தந்தையார்

**செல்லையா குணரத்தினம்**



அவர்கள் 01.03.2018 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரிக் கழகம், வலயக்கல்வி அலுவலகம், தீவகம், வேலணை.**

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் கதிரிப்பிள்ளை



அன்னை மடியில் 02.01.1937 ஆண்டவன் திருவடியில் 14.03.2018

இளவாலை காடிவளையில் வாழ்ந்திருந்த, கொழும்பை வசிப்பிடமாகவும், வவுனியா வை தற்போதைய வசிப்பிட மாகவும் கொண்டு வாழ்ந்து வந்த திருமதி பாக்கியம் கதிரிப் பிள்ளை நேற்று (14.03.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கதிரிப்பிள்ளையின் அன்புமனைவியும் அருந்தவ ராஜா காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்த ராஜா, ஜெயராணி (கொழும்பு), கலாராணி (ஜேர்மனி), மோகன ராசா (லண்டன்), லதாராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் திருமதி அ.இந்திராணி, திருமதி சி. இலங்கைநாயகி (கனடா), பாலசிங்கம் (இங்கிலாந்து), அருணகிரி நாதன் (ஜேர்மனி), திருமதி மோ.வசந்தாதேவி (இங்கிலாந்து), தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புமாமியும் விஜிதா, அனிதா, தார்மீகன் (கனடா), திருமதி கி.பிரியதர்சினி (இங்கிலாந்து), திருமதி இ.பிரபாயினி (ஆஸ்திரேலியா), செல்வி பிரதீபா, செல்வன் சிந்துஜன், செல்வன் செந்துஜன் (கொழும்பு), விதூஷன், சாதுஷா (ஜேர்மனி), விஷ்ணுஜன், அனந்துஜன், லக்சிகா (இங்கிலாந்து), நிஷாந்தன், லக் ஷன், சாருகி (சுவிஸ்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் தானவி, சைந்தவி, ஹாசினி, றூபேஸ், அஸ்விதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: அருந்தவராஜா (மேழிக்குமரன், வவுனியா)**
**0094 077 424 8267**


# MAJOR II

**GLUCOMETER WITH LIFETIME WARRANTY**
Low in Price - High in efficacy




ரூபா 2500 க்கு வாழ்நாள் உத்தரவாதத்துடனான குளுக்கோ மீட்டர். குறைந்த விலை நிறைந்த வினைத்திறன். இது மட்டுமல்ல ஒவ்வொரு மீட்டருடனும் ரூபா. 1010.07 பெறுமதியான **25 Strips** மற்றும் **25 Lancets** இனாம்.


உங்கள் தேவைகளுக்கு எமது முகவர்களை நாடுங்கள் :-

| அம்பிகா பார்மசி<br>கண்டி வீதி,<br>சாவகச்சேரி.<br>T.P: 0779133757 | சூரியா பார்மசி<br>பஸ் தரிப்பிடம்(முன்னால்),<br>அச்சுவேலி<br>T.P: 0714547221 | ஜீவன் பார்மசி<br>சுப்பிரமணியம் வீதி,<br>சுன்னாகம்.<br>T.P: 0212242626 |
|---|---|---|
| ஸ்ரீமுருகன் மெடிக்கல்ஸ்<br>பிரதான வீதி,<br>பருத்துறை.<br>T.P:0775581531 | **VANIKAA SURGICALS**<br>203 Hospital Road, Jaffna.<br>Tel: 021 222 0077<br>Mob: 077 44 22 367<br>E-mail- vanisurgi@sltnet.lk | இரட்ணம் பார்மசி<br>பஸ் தரிப்பிடம்(முன்னால்),<br>யாழ்ப்பாணம்<br>T.P: 021 222 2667 |

நாங்கள் என்றும் உங்களுடன்


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 11 . 02 . 1955



ஆண்டவன் அடியில் 13 . 02 . 2018

**அமரர் பாலகிருஷ்ணர் சந்திரசேகரன்**

**ஓய்வுநிலை அதிபர் : SLPS - 1, BA, Dip. in Edu., M.Ed**

**"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவல் துணிவு"**

கடந்த (13.02.2018) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் பாலகிருஷ்ணர் சந்திரசேகரன் அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (15.03.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்திலும் தொடர்ந்து 18.03.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

ஒருநாள் உம்மை மறந்திருப்போம் - அன்று நாங்கள் இறந்திருப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

**குடும்பத்தினர்.**

அரசடி, கொக்குவில் மேற்கு. **021 492 8638**

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா செபமாலை



இறப்பு 2018. 14.03 பிறப்பு 1927. 01.05

கிளிநொச்சி உருத்திபுரத்தைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை யைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா செபமாலை நேற்று (14.03.2018) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை யடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொ ன்னாந்து றோசலின் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற செப மாலையின் அன்புமனைவியும் தவ மணி, மனோன்மணி, தேவதாஸ், தேவமலர், பற்றிமா, யோகேஸ்வரி, ஜெயதாஸ், விமலதாஸ், அமலதாஸ் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஜோசேப், நடராசா, இராசராணி, தனபால ரத்தினம், சண்முகராசா, சிறிரஞ்சினி, சுகந்தினி, கலைவாணி ஆகியோரின் அன்புமாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (15.03.2018) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

உயரப்புலம், ஆனைக்கோட்டை. **0771801614**

RajasekarChem®@RajasekarASho7



சாவுக்குப் பின் சொர்க்கமோ நரகமோ கிடையாது - ஸ்டீபன் ஹாக்கிங்.
**ஆனால் உங்களுக்கு வரலாற்றில் என்றும் நிச்சயம் இடம் உண்டு.**





# அஜித்துடன் முதன்முறையாக இணைகிறார் ரோபோ சங்கர்

அஜித் – சிவா நான்காவது முறையாக இணையும் 'விஸ்வாசம்' படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்க இருக்கிறது. வடசென்னை பின்னணியில் உருவாகும் இந்தப் படத்தில் அஜித்துக்கு ஜோடியாக நயன்தாரா நடிக்கிறார். மேலும் யோகி பாபு, தம்பி ராமையா முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க இருக்கின்றனர்.

இந்த நிலையில், நகைச்சுவை நடிகர் ரோபோ சங்கரும் முதன்மைக் கதாபாத்திரத்தில் நடிக்க இருப்பதாக தகவல் வெளியானது. தற்போது அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. இந்தப் படத்துக்காக ரோபோ சங்கர் 50 நாள்கள் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் பலநாள் இருந்த கவலை நீங்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் பணி மேற்கொள்வீர்கள். பணவரவில் திருப்திகரமான நிலை உருவாகும்.

**இடபம்:** மாறுபட்ட சூழ்நிலையை சந்திக்க நேரிடலாம். நிதானமாக செயல்படுவது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேற தாமதம் ஆகலாம்.சிறிய பணி கூட அதிக சுமை போல தோன்றும்.தொழில், வியாபாரம் சிறக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும்.

**கடகம்:** மனதில் நல்லெண்ணம் அதிகரிக்கும். நற்செயல் புரிந்து சமூகத்தில் வரவேற்பு பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான அனுகூலம் உண்டாகும்.

**சிங்கம்:** பேச்சு, செயல்களில் திறமை வெளிப்படும். அலைச்சல் தந்த வேலை ஆதாயம் தருவதாக மாறும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**கன்னி:** சிலர் உங்களிடம் எதிர்பார்ப்புடன் அணுகுவர். முன்யோசனையுடன் அவர்களிடம் விலகுவது நல்லது . தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம் .சுயதேவைஓரளவுபூர்த்தியாகும்.தொழில்,வியாபாரத்தில்உள்ள சிரமங்களை உடனடியாகச் சரி செய்வது நல்லது.

**விருச்சிகம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை உருவாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி வியப்பூட்டும் வகையில் அதிகரிக்கும். நிலுவை பணம் வசூலாகும்.

**தனுசு:** வேண்டாத நபர் ஒருவரை பொது இடத்தில் சந்திக்க நேரிடலாம். எண்ணத்திலும், பேச்சிலும் கட்டுப்பாடு அவசியம். தொழிலில் உற்பத்தி விற்பனை சுமாராக இருக்கும்.

**மகரம்:**உங்களின்செயல்களில்நேர்த்திநிறைந்திருக்கும்.அரசு தொடர்பான உதவி பெற அனுகூலம் உண்டு. தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி நிறைவேறும்.

**கும்பம்:** சிலரது பேச்சு சங்கடம் ஏற்படுத்தலாம். கூடுதல் வேலை பளு ஏற்படலாம்.தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் பாதுகாப்பது நல்லது.

**மீனம்:** துவங்குகிற பணி முழு அளவில் வெற்றி பெறும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பணவரவு அதிகரிக்கும் .





**ஏதாவது தப்புப் பண்ணிட்டு ஆங்கிலத்தில் 'சொறி' சொல்வதற்கு மனது தயங்குவதில்லை. அதேவேளையில் தமிழில் 'மன்னிப்பு' என்பதற்கு சற்றே தயங்குகிறது**



**காரணம் ஆங்கிலம் மேலோட்டமானது**
**தமிழ் உயிரோட்டமானது**



**அதிகம் படிக்கவில்லையே என கவலை கொள்ளாதே. இறப்பு வரை தினமும் பல பாடங்களை எமது வாழ்க்கை எமக்குக் கற்றுத்தரும்**




# உலக அதிசயங்கள் 7

வகுப்பு ஆரம்பிப்பதற்கான மணி ஒலித்தது. ஆசிரியை உள்ளே வந்தார். வகுப்பறை அமைதியிலாழ்ந்தது.

"ஆன்னா யாரு?"

ஆன்னா எழுந்து நின்றாள். அவளை மற்ற மாணவ, மாணவிகளுக்கு அறிமுகப்படுத்தினார் ஆசிரியை. வகுப்புத் தொடங்கியது.

"சரி... உங்களுக்கெல்லாம் இப்போ டெஸ்ட். முந்தநாள் 'உலகின் ஏழு அதிசயங்கள்' பாடம் எடுத்தேனே... ஞாபகம் இருக்கா?"

"யெஸ் மிஸ்..." கோரஸாகக் குரல்கள் எழுந்தன.

"எங்கே... எல்லாரும் அதையெல்லாம் வரிசையா எழுதுங்கோ பார்ப்போம்"

அத்தனை பேரும் கடதாசியில் கடகடவென எழுத ஆரம்பித்தார்கள்.

ஆன்னா, தயக்கத்தோடு ஆசிரியரைப் பார்த்தாள். "என்ன ஆன்னா... நான் கிளாஸ் எடுத்தப்போ நீ இல்லைனுதானே பார்க்கிறாய்... உனக்கு மனசில என்ன தோணுதோ அதை எழுது..."

"இல்லை மிஸ்... எனக்கு எத்தனையோ அதிசயம் தெரியும்... அதுல ஏழே ஏழு மட்டும் எழுதினா போதுமா?"

ஆசிரியர் சிரித்தார். ஆன்னாவைத் தட்டிக் கொடுத்து, "போதும்" என்று சொன்னார்.

ஆன்னாவும் எழுத ஆரம்பித்தாள். ஏனையவர்கள் பதிலை எழுதிக் கொடுத்த பிறகும்கூட, அவள் எழுதிக்கொண்டிருந்தாள். கடைசியாகத்தான் தன் விடைத்தாளை ஆசிரியையிடம் கொடுத்தாள்.

ஆசிரியை எல்லோரின் விடைத்தாள்களையும் படிக்க ஆரம்பித்தார். தாஜ்மகால், எகிப்தின் பிரமிட், சீனப் பெருஞ்சுவர், பாபிலோன் தொங்கும் தோட்டம், உரோமின் கொலேசியம், இங்கிலாந்தின் ஸ்டோன் ஹெஞ்ச், பைசா நகரத்து கோபுரம்... என அந்த ஆசிரியை சொல்லிக் கொடுத்ததை பெரும்பாலானவர்கள் எழுதியிருந்தார்கள். சிலர், சிலவற்றை எழுதாமல் விட்டிருந்தார்கள். கடைசியாக அந்த ஆசிரியை, ஆன்னா எழுதிய விடைத்தாளைப் பார்த்தார். அதில் இப்படி எழுதியிருந்தது...

"உலகின் ஏழு அதிசயங்கள் என்னவென்றால்... எம்மால் பார்க்க முடிவது; கேட்க முடிவது; உணர முடிவது; சிரிக்க முடிவது; சிந்திக்க முடிவது; இரக்கப்பட முடிவது; அன்பு செலுத்த முடிவது..."

# கழுகும் நரியும்

காட்டில் நரி ஒன்று வாழ்ந்து வந்தது. அதன் வளையின் அருகில் இருந்த மரத்தில் கழுகு ஒன்று வசித்தது. நரி ஒரு நாள் இரை தேடச் சென்றிருந்த வேளை அதன் குட்டி வளையை விட்டு வெளியே வந்து விளையாடிக்கொண்டிருந்தது. அதனைக் கழுகு பார்த்து. கீழே பாய்ந்து வந்து நரிக்குட்டியைத் தூக்கிக் கொண்டு தன் கூட்டுக்கு பறந்தது. "இன்று என் குஞ்சுகளுக்கும் எனக்கும் நல்ல விருந்துதான்" என்று கழுகு மகிழ்ந்தது.

அப்போது நரி இரையுடன் திரும்பி வந்தது. சுற்றும் முற்றும் பார்த்தது. அதற்கு ஒன்றும் பிடிபடவில்லை. தற்செயலாக மரத்தை நிமிர்ந்து பார்த்தது. அங்கே கழுகைக் கண்ட பின்புதான் நரிக்கு என்ன நடந்திருக்குமென விளங்கியது. "கழுகே! என் குட்டியை நீ தான் தூக்கிச் சென்றாயா?"என்று கேட்டது. கழுகு பயப்படவில்லை.

"ஆமாம்...நான்தான் தூக்கிச் சென்றேன் இப்ப அதுக்கு என்ன?" என்று கேட்டது. "கழுகே! என் குட்டியைத் தயவு செய்து விட்டுவிடு" என்று கெஞ்சியது நரி. கழுகு சிரித்தது.

"முட்டாள் நரியே! இன்று உன் குட்டிதான் எனக்கும் என் குஞ்சுகளுக்கும் விருந்து அதைப் போய் விடச் சொல்கிறாயே என்றது. நரியோ விடாமல் கெஞ்சியது. "கழுகே! உனக்கு குஞ்சுகள் உள்ளன. உன் குஞ்சுகள் போன்று தானே என் குட்டியும். அதனால் இரக்கப்பட்டு அதனை விட்டுவிடு"என்றது. "நரியே! நீ எத்தனை தடவைகள் கெஞ்சினாலும் நான் உன் குட்டியைத் தர மாட்டேன்" இறுமாப்புடன் கூறியது கழுகு. நரி கோபமானது.

"கழுகே! என் குட்டியை விடவில்லையென்றால் நான் உன்னைச் சும்மா விடமாட்டேன்" என்றது. கழுகு பரிகாசம் செய்தது.



"நரியே! உன்னால் என்ன செய்ய முடியும்? உன்னால் ஆனதைப் பார்" என்றது.

இப்பொழுது நரி ஊருக்குள் ஓடியது. ஒரு வீட்டில் எரியும் கொள்ளிக் கட்டையைத் தூக்கிக் கொண்டு மீண்டும் காட்டுக்குள் வந்தது. கழுகு தங்கியிருந்த மரத்தைச் சுற்றிலும் சருகுகளையும், விறகுகளையும் பொறுக்கிப் போட்டது.

கழுகு மேலே இருந்து கத்தியது. "நரியே! உனக்கு புத்தி பிசகி விட்டதா? இப்போது என்ன செய்யப் போகிறாய்? என்று கேட்டது.

நரி அதற்கு எந்தப் பதிலும் கூறாமல் தன் கருமமே கண்ணாக இருந்தது. கொள்ளிக் கட்டையைக் கொண்டு தீப்பற்ற வைத்த நரியின் தந்திரம் கழுகுக்கு புரிந்து போயிற்று. நரியே! உன் குட்டியைத் தந்து விடுகிறேன். எங்களைக் குடும்பத்தோடு அழிந்து விடாதே!"என்று கதறியபடி நரிக்குட்டியைக் கௌவிக் கொண்டு வந்து வளையின் அருகில் போட்டது. "நரியே! தீயை அணைத்து விடு"என்று கெஞ்சியது. நரியும் பரிதாபப்பட்டு தீயை அணைத்தது.

**மெலியாரை வலியோர் வருத்தினால் அதன் பலனை வலியோர் அனுபவித்தேயாக வேண்டும்.**

## ஓவியங்கள் தந்த பெருமை



துனிசியாவின் ஜெர்பாதீவில் உள்ள மிகச் சிறிய கிராமம் எரியாட். ஒரு காலத்தில் கனவுத் தீவாகக் கருதப்பட்ட இந்தத் தீவு தற்போது துனிசியாவின் சுற்றுலா மையங்களில் ஒன்றாக இடம்பெற்றுள்ளது. கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக யாத்திரிகர்கள் வந்து செல்லும் இடமாக இருந்து வந்தாலும் மிகக் குறைவான வெளிநாட்டினரே சுற்றிப் பார்க்க வந்துகொண்டிருந்தனர். பெரிதாக உலகத்தின் பார்வைக்கு வராத இந்தக் கிராமம் சமீப காலமாகச் சுற்றுலாப் பயணிகள் படையெடுக்கும் இடமாக மாறிவிட்டது. இதற்குக் காரணம் அந்தக்கிராமத்து வீட்டுச் சுவர்களில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள்தான். 2014ஆம் ஆண்டு மெகடி பென்சீயக் என்ற பாரசீக ஓவியர் 30 நாடுகளிலிருந்து நூறு ஓவியர்களை ஜெர்பாவுக்கு வரவழைத்தார். கிராமங்களில் உள்ள வீட்டுச் சுவர்களின் மீது நிரந்தரமான ஓவியங்களைத் தீட்ட வைத்தார். 300ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. சாதாரண ஒரு கிராமம் இன்று மிகப்பெரிய திறந்த வெளி ஓவிய அருங்காட்சியமாக மாறிவிட்டது. இந்த ஓவியங்களைப் பார்ப்பதற்காகவே சுற்றுலாப்பயணிகள் வந்துபோகிறார்கள்.

உணவு விடுதிகளும் உணவகங்களும் பெருகிவிட்டன. வேலை வாய்ப்புக்களும் அதிகரித்துள்ளன என்கின்றார் மெகடி பென் சீய்க்

## பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுங்கள்





.................... ....................





.................... ....................


## சொல்லாக்கி எழுதுவோம்






1. --------------------
2. --------------------
3. --------------------
4. --------------------
5. --------------------
6. --------------------
7. --------------------
8. --------------------

## வழிகாட்டுவோம்



## தேனீ உலகம்



தேனீக்களின் இருப்பிடம் தேன் கூடு. இதனைத் தேனடை என்றும் மெழுகு மாளிகை என்றும் அழைப்பார்கள். இந்த மெழுகு மாளிகைக்கு ஒரே ஒரு தலைவாசல்தான் இருக்கும். இந்த மெழுகு மாளிகை பத்தாயிரம் அறைகளைக் கொண்டது. தேனீக்களில் ராஜாத்தேனீ, ராணித்தேனீ, வேலைக்காரத் தேனீக்கள் என மூன்று வகையினங்கள் உள்ளன.

ஒரு தேனடையில் சுமார் ஐம்பதினாயிரம் தேனீக்கள் இருக்கும். ஒவ்வொரு தேனீக்கும் தனித்தனியான வேலை உண்டு.தேனீக்களின் உலகில் சோம்பலுக்கு இடம் கிடையாது. ஒவ்வொரு தேனியும் தன் வேலையை எவருடைய ஆணையுமின்றி தானே செய்யும். தேனீக்களின் உலகில் ஒரு சோம்பேறித் தேனீ உண்டு. அதுதான் ராஜாத்தேனீ. இது ஒவ்வொரு வேலைக்காரத் தேனியிடமும் சென்று உணவு கேட்டு தன் வயிற்றை நிரப்பிக் கொள்ளும் ஆனால். இந்தத் தேனீக்கும் ஒரு வேலை உண்டு. ராஜாத் தேனீ ராணித் தேனீக்கு கோடிக் கணக்கான ஜீவ அணுக்களைக் கொடுக்கும். அவற்றை ராணித் தேனி தன் உடலிலுள்ள ஒரு விசேடமான பைக்குள் சேமித்து வைக்கும். ராஜாத்தேனீயின் கடமை இத்துடன் முடிவடைந்து விடுகிறது. இதன் பின் ராஜாத்தேனீ கூட்டிலிருந்து துரத்தப்படுகிறது. தேன் கூட்டில் உள்ள ஒவ்வொரு அறையும் அரை அங்குல நீளம், கால் அங்குல அகலம் கொண்டவைகளாக இருக்கும். வேலைக்காரத் தேனீ தான் குடித்த தேனை தன் வயிற்றினுள் இருக்கும் ஒரு பைக்குள் சேர்த்து வைக்கிறது. அதற்கு தேன் வயிறு என்று பெயர்.

## வட்ஸ்அப்...

தொலைத் தொடர்பு ஆணைக்குழுவின் தலைவருமான ஒஸ்ரின் பெர்னாண்டோ நேற்றுத் தெரிவித்தார்.
இந்த நிலையில், இன்று அதிகாலை தொடக்கம் வட்ஸ்அப் செயலி செயற்படத் தொடங்கியது.
கண்டியில் வன்முறைகள் வெடித்ததை அடுத்து கடந்த 7ஆம் திகதி முகநூல், வைபர் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களுடன், வட்ஸ்அப் மூலம் தகவல்களையும் படங்கள், காணொலிகளைப் பரிமாறிக் கொள்ளவும், பகிர்ந்து கொள்வதற்கும் தடைவிதிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் நள்ளிரவு வைபர் மீதான தடை நீக்கப்பட்ட நிலையில் வட்ஸ்அப் மீதான தடையும் நீக்கப்பட்டுள்ளது. (5)

## சமூக...

மொன்றைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போது சமூக வலைத்தளங்கள் தொடர்பில் பிரச்சினையொன்று ஏற்பட்டுள்ளது. இலங்கைக்கு இணையத்தளத்தை முதலில் நானே அறிமுகப்படுத்தினேன். 1993 ஆம் ஆண்டு தலைமை அமைச்சராக இருந்தபோது அமெரிக்காவுக்குச் சென்று அந்த நாட்டின் அப்போதைய உப அரச தலைவர் அல்கோருடன் இது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டேன்.
சமூக வலைத்தளங்கள் பொருளாதாரத்திலும் உட்புகுந்துள்ளன. அதனை வேறுப்படுத்த முடியாது. அது வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறியுள்ளது. முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களின் ஊடாக இனவாத, மதவாத பரப்புரைகள் வைரலாகப் பரவி வருகின்றது. ஒரு தரப்பில் இருந்து குரோத தகவல் பரிமாறும்போது அடுத்த தரப்பு அதற்குப் பதிலடி வழங்குகின்றது.

**கண்டியில் நடந்தது என்ன ?**

கடந்த வாரம் கண்டி, தெல்தெனிய பகுதியில் கலவரமொன்று ஏற்பட்டது. பொதுவாகக் கலவரமொன்று ஏற்படும் போது உடனே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். தெல்தெனிய, திகன பகுதிகளில் காலைப் பொழுதில் கலவரத்தை கட்டுப்பாடுக்குள் கொண்டு வந்தாலும் மாலை வேளையில் மென்மேலும் அதிகரித்தது. இந்த வன்முறை தொடர்பாக அமைச்சரவையில் கலந்துரையாடிய போது புதிய சவாலொன்றுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதாக பாதுகாப்புத் தரப்பு குறிப்பிட்டது. முகநூலின் ஊடாக குரோதமான தகவல்கள் பரிமாறி சமூகம் பிரச்சினைக்குள் தள்ளப்பட்டு வருவதாகவும் பாதுகாப்பு பிரிவினர் குறிப்பிட்டனர். அம்பாறையில் இவ்வாறான நிலமையை நாம் கண்டறிந்தோம். விகாரைகள் தாக்கப்படுவதாகவும் பிக்கு ஒருவர் தாக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகின. இந்தச் செய்திகளை பார்த்து மக்கள் குழப்பத்துக்குள் தள்ளப்பட்டனர். இதனை அடிப்படையாகக் கொண்டு சமூக வலைத்தளங்களைக் கட்டுப்படுத்துவது குறித்த யோசனையை பாதுகாப்பு பிரிவினர் முன்வைத்தனர்.
கடந்த வாரம் சமூக வலைத்தளங்களுக்குள் பிரவேசிப்பதை கட்டுப்படுத்தினோம். இதன் பின்னர் வன்முறையை எம்மால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிந்தது. இவ்வாறு வன்முறையை எம்மால் கட்டுப்படுத்தியிருக்க முடியாவிடின் கலவரம் மேலும் அதிகரித்திருக்கும்.
சமூகவலைத் தளங்களைக் கட்டுப்படுத்துவதற்கு சட்டங்களைத் தயாரிப்பது குறித்து அரசும் சட்டம் ஒழுங்கு அமைச்சும் சட்டமா அதிபர் திணைக்களமும் பேச்சு நடத்தி வருகின்றது. வெறுப்புப் பேச்சுகள் தொடர்பாக இங்கிலாந்து போன்ற நாடுகளில் சட்டங்கள் பல உள்ளன. இன, மதங்களுக்கிடையில் குரோதத்தை வளர்க்க முடியாது. ஒருவரை கொல்லுமாறு குரோதத்தை வளர்க்க முடியாது. கொள்கைகளை விமர்சிக்க முடியும். எனினும் குரோதத்தை வளர்க்க முடியாது. சமூக வலைத்தளங்களின் கட்டுப்பாடுகள் தொடர்பில் ஜேர்மனில் சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சட்ட ஏற்பாடுகள் 24 மணிநேரத்தில் நடவடிக்கை எடுக்க முடியுமான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. அதுபோன்று பிலிப்பைன்ஸ் நாட்டிலும் சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
தற்போது அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு மாத்திரமே சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும் சமூக வலைத்தளங்கள் விடயத்தில் எந்தவொரு சட்டவொரு சட்ட ஏற்பாடுகளும் உலகில் இல்லை. இலங்கையில் எதிர்காலத்தில் சமூகவலைத் தளங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டம் கொண்டு வரப்படும்.
கடந்த காலங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளை மறக்கும் அளவுக்கு சமூக வலைத்தளங்கள் மீதான தணிக்கை பாதிப்பு செலுத்தியுள்ளது என்றார். (5,61)

## இலங்கையை...

முறை பயணம் மேற்கொண்டுள்ள அரச தலைவர் மைத்திரிபாலவுக்கும், ஜப்பானிய தலைமை அமைச்சர் சிங்சோ அபேவுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றபோதே ஜப்பானிய தலைமை அமைச்சர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.
அத்துடன் ஜப்பான் இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்குப் பெற்றுத்தரும் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக எதிர்காலத்திலும் வழங்கப்படும் என்று ஜப்பானிய தலைமை அமைச்சர் உறுதியளித்தார்.
துறைமுக அபிவிருத்திக்கு முன்னுரிமையளிப்பதுடன், ஏற்கனவே கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களின் அபிவிருத்திக்காக ஜப்பானிய அரசால் வழங்கப்படும் ஒத்துழைப்பு தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.
இலங்கையின் மின்சக்தி உற்பத்திக்கு தேவையான உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளதாகத் தெரிவித்த ஜப்பானிய தலைமை அமைச்சர், அதிவேக வீதிக்கட்டமைப்புக்களின் நிர்மாணத்துக்கும் உதவி வழங்குவதாக இதன்போது குறிப்பிட்டார்.
அதேபோன்று இலங்கையின் சுகாதார துறையின் அபிவிருத்திக்கு அவசியமான தொழில்நுட்ப உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு அரச தலைவர் மைத்திரி விடுத்த கோரிக்கைக்கு ஜப்பானிய தலைமை அமைச்சர் இணக்கம் தெரிவித்தார். (5)

## விசர் நாய்...

லர் (வயது - 42) என்பவரே உயிரிழந்தார். இவர் கணவனை இழந்து 4 பிள்ளைகளுடன் வசித்து வந்த நிலையில் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
கடந்த 22ஆம் திகதி அவர் உயிரிழந்துள்ளார். அதற்கு முன்னரே அவர் நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளார். அதற்கு அவர் சிகிச்சை பெறவில்லை. சில வாரங்களின் பின்னர் நாய்க்குட்டி கடித்த இடத்தில் சொறிவு ஏற்பட்டுள்ளது. அதனைத் தாங்க முடியாததால் கிளிநொச்சி மருத்துவமனையில் அவர் சிகிச்சைக்குச் சேர்ந்தார். அவருக்கு ஏற்பட்டது விசர்நாய்க் கடி நோய் என்பது பரிசோதனையில் தெரிய வந்தது. அவருக்கு அது தொடர்பில் சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் அது பயனளிக்கவில்லை. மறுநாள் அவர் உயிரிழந்துவிட்டார்.
அவரது மூளை பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டது. விசர்நாய்க் கடியால் ஏற்பட்ட இறப்பு என்பதனை பரிசோதனை உறுதிப்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (4)

## முல்லைத்தீவில்...

இது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இரு பொலிஸாரை காவல் கடமையில் ஈடுபடுத்தியுள்ளனர். எறிகணையை நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி3)

**மணமகள் தேவை**
40 வயதுடைய அரசாங்க உத்தியோகம் பார்க்கும் டிவோஸ் மணமகனுக்கு உத்தியோகம் பார்க்கும் மணமகள் தேவை. விவாகரத்துடைய மணமகள் விரும்பத்தக்கது
077 911 3006

**நாஹா மருத்துவ நிலையம்**
◆ எலும்புகள் செயலிழக்கும் வாதம், கை,கால் எரிவு, ஆஸ்மா மூட்டுக்கள் அழற்சி, தேய்வு - குணமாதல்
◆ குழந்தையின்மை, கெற்பநோய் - சிறப்புசிகிச்சை
வாங்கி முன் லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி,
(ஜெகபதிவீடு) மானிப்பாய்.
077 321 2740

## கண்ணீர் அஞ்சலி



**வித்துவான் அருள்மொழியரசி**
**திருமதி வசந்தா வைத்தியநாதன்**

காரைநகர் மணிவாசக சபையுடன் நீண்டகால தொடர்புடையவரும் வருடந்தோறும் நடைபெற்று வரும் மணிவாசகர் விழா நிகழ்வுகளில் பங்குபற்றிச் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றி வந்தவருமாகிய அருள்மொழியரசி எதிர்பாராத விதமாக எம்மையும் எம் சபையையும் விட்டுப்பிரிந்தமையையிட்டு பெரிதும் வருந்துகின்றோம்.
சமயப் பிரசாரகராக சமூக நலப் பணியாளராக ஆன்மீகப் படைப்பாளராகத் திகழ்ந்து ஈழத்திலும் தமிழகத்திலும் குறிப்பிடத்தக்க ஒருவராக மதித்துப் போற்றப்பட்ட அம்மையார் அவர்களின் மறைவு சைவத்தமிழ் உலகுக்கு பேரிழப்பாகும்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பரக்கூத்தனை இறைஞ்சுகின்றோம்.

காரைநகர் மணிவாசக சபையினர், காரைநகர்.



## கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் - 2018

## கடை ஏலம் விடுதல்

கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 30.03.2018 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.
இப் பொங்கல் உற்சவத்தின்போது வாணிபம் செய்ய விரும்புகின்றவர்களுக்கான கடை ஏலம் விடும் நிகழ்வு எதிர்வரும் 18.03.2018 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.
ஏலத்தின்போது முழுத்தொகையும் உடனடியாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**தலைவர்**
**வீ.இராமநாதன்**

**செயலாளர்**
**பிரபாகரன்**

(CS 9224/15/17)

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**
வெற்றி வாரம்:3007 திகதி:14.03.2018 புதன்கிழமை
ஊதா
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 32 51 55 65 H
போனஸ் இலக்கம்: 54
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்: 34,428,515/-
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**அத கோடிபதி**
சீட்டிழுப்பு வாரம்: 196
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.03.14
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 58,248,395/-
வெற்றி இலக்கங்கள்: 28 30 73 74 U
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**வீரவாகு முருகையா**


அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (16.03.2018) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது.
அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை மத்தி,
ஏழாலை.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

## நடராசா ஆனந்தராசா (ஆனந்தன்)



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் ஐந்து வீட்டுத்திட்ட வீதி, நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தன் என அழைக்கப்படும் நடராசா ஆனந்தராசா நேற்று (14.03.2018) புதன்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் நடராசா - சிவப்பி தம்பதிகளின் அன்பு மகனும் மயிலணி வடக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த தங்கராசா - பூமணி தம்பதிகளின் மருமகனும் சுபாவின் அன்புக் கணவரும் அதிசயாவின் அருமைமிகு தந்தையும் காலஞ்சென்ற அன்னக்கிளி மற்றும் உதயச்சந்திரன், அற்புதராசா ஆகியோரின் சகோதரனும் சுஜி, ஜெயசீபன், கௌசீகன் ஆகியோரின் மைத்துனரும் வனதீபன், யனுஜன் ஆகியோரின் மாமனும் ஜெசிந்தன் காலஞ்சென்ற உயந்தா மற்றும் நிஜந்தா ஆகியோரின் சித்தப்பாவும் அபித்தாவின் பெரியப்பாவும் கந்தர்வனின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணிக்கு ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5 வீட்டுத்திட்ட வீதி, நாவற்குழி. தகவல்: குடும்பத்தினர்.

## உத்தியோகபூர்வ...

யாழ்ப்பாணம், மார்ச் 15
எமது கட்சிப் பத்திரிகையின் வெளியீட்டை ஏனைய ஊடகங்கள் எமக்கு உணர்த்தியுள் ளன. இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உத்தி யோகபூர்வ நிலைப்பாடு என்ன என்பதை புதிய சுதந்திரன் பத்திரிகையின் ஊடாகத் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.



தமிழ் அரசுக் கட்சியின் புதிய சுதந்திரன் பத்தி ரிகை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நிகழ் வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது கட்சியினுடைய உத்தியோகபூர்வமான நிலைப்பாடு என்ன என்பதை பல ஆண்டுக ளாக அறிவிக்கத் தவறியிருக்கின்றோம். 1983ஆம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகை முடக் கப்பட்ட பின்னர் கட்சியினுடைய உத்தியோக பூர்வ நிலைப்பாடு என்ன என்பதை அறிவிப்ப தில் பின்னிற்கின்றோம்.

இந்தப் பத்திரிகை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ வெளியீடாகத்தான் இருக்கும். உத்தியோகபூர்வ அறிவிப்பு என்ன வென்று அறிவிக்கத் தவறிய காரணத்தினால் பலவிதமான குழப்பங்கள் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

ஜெனிவாக் கூட்டத் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னதாக பிரிட்டன் ஒழுங்குபடுத்திய உறுப்பு நாடுகளுக்கான கூட்டத்தில் 26 நாடுகள் பங்கு பற்றின. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உத்தி யோகபூர்வ நிலைப்பாடு என்ன என்பதை கேட்டு அவர்கள் அறிந்துள்ளார்கள். எத்தகைய அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று நாங்கள் உத்தியோகபூர்வமாகக் கூறியுள் ளோம்.

தற்போது கூட்டத்தொடர் நடைபெற்றுவரும் நிலையில் பக்க நிகழ்வுகள் நடைபெற்று வரு கின்றன. இலங்கை தொடர்பாக 32 நிகழ்வுகள் நடைபெறுகின்றது. இவற்றை யார் நடத்துகிறார் கள் ஏன் நடத்துகிறார்கள் என்று தெளிவில்லை. சிலர் ஜெனிவா சென்று தீர்மானங்களை எரிக் கின்றார்கள். நாங்கள் தீர்மானம் வேண்டும் என்கின்றோம். ஐக்கிய நாடுகள் சபையில் எவற் றைச் செய்யமுடியும்? அங்கு சென்றால் எல் லாம் கிடைத்து விடும் என்று எமது மக்களுக்கு ஊக்குவித்துள்ளார்கள்.

ஜெனிவாவில் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் 36 விடயங் கள் இருக்கின்றன. இதில் மூன்று விடயங்கள் பொறுப்புக்கூறல் சம்பந்தமானது. இறுதியாக போர்க்குற்றம் சம்பந்தப்பட்டது.

இந்தத் தீர்மானத்தினால் பயனில்லை என்பது தான் தற்போது முன்னெடுக்கப்படும் பரப்புரை. இதைக் கைவிட்டுவிட்டு அரசை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண் டும் என்று கூறி வருகின்றார்கள். இலங் கையை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த முடியுமா ?

எமது விவகாரங்களை நடத்துகின்ற அமெரிக் காவே இதனைச் செய்யாது. 2012ஆம் ஆண் டிலிருந்து தீர்மானங்களைக் கொண்டு வரும் அமெரிக்காவே செய்யவில்லை. இதைப்பற்றி எல்லாம் தெரிந்து கொண்டு மக்களுக்கு பொய்ப் பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர். இதற்கு மாற்றுப் பரப்புரையும் இல்லை.

இதனை நான் சொன்னால், இலங்கையை பன்னாட்டு நீதிமன்றுக்கு கொண்டு செல்ல முடி யாது என்று சுமந்திரன் சொல்கிறார், சுமந்திரன் இலங்கை அரசைப் பாதுகாக்கின்றார் என்று ஊடகங்கள் எழுதும். அவ்வாறு ஊடகங்கள் கூறும்போது எங்களுடைய உத்தியோபூர்வ நிலைப்பாடு என்ன என்பதை தெரியப்படுத் தவே எங்களுடைய பத்திரிகையை வெளியீடு செய்கின்றோம்.

நாங்கள் பொறுப்பான பயணத்திலே எங்களுக் கான ஆதரவை திரட்டியுள்ளோம். பன்னாட்டுச் சமூகத்திடம் இருக்கின்ற ஆதரவை நாங்கள் இழந்து விட்டு வெற்றி பெறலாம் என்று வீரப் பேச்சு பேசக் கூடாது.

மக்களுக்கு உண்மை தெரியும் என்று நினைத் தோம். ஆனால் அப்படியில்லை என்பது தேர் தல் முடிவின் ஊடாக அறிய முடிந்தது என் றார். (5)

## நாடு...

தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களை நாடு கடத்துவதை தடுக்கக் கோரி ஆஸ்திரேலியாவில் போராட்டங்கள் முன்னெ டுக்கப்பட்டு வந்ததுடன், சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு இவர் கள் நால்வரும் நாடு கடத்தப்படுவதற்காக பேர்த் வானூர்தி நிலையத்துக்கு கொண்டு செல்லப் பட்டு, வேறு பல இலங்கையர்களுடன் சிறப்பு வானூர்தியில் ஏற்றப்பட்டனர்.

பின்னர் சிறிது நேரத்தில் ஆஸ்திரேலிய அதிகா ரிகள் அவர்களை வானூர்தியில் இருந்து இறக் கிக் கொண்டு சென்றனர்.

கடைசி நேரத்தில் முன்னெடுக்கப்பட்ட சட்ட நட வடிக்கைகளை அடுத்தே அவர்களை நாடு கடத்தும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (5)

## கல்- மண்...

இவ்வாறு வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் சுதாக ரன் தெரிவித்தார்.

தொண்டமனாறு அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

யாழ்ப்பாணத்தில் மண், சுண்ணாம்புக் கல் அகழ்வினை முழுமையாக கட்டுப்படுத்த நடவ டிக்கை எடுக்கப்படவேண்டும். இதனை கட்டுப் படுத்துவன் ஊடாகவே நிலத்தடி நீரைப் பாது காக்க முடியும். விவசாயிகள் இரசாயன உரங் களை பாவிப்பதன் ஊடாக நிலத்தடி நீர் மட்டத் தில் துளைகள் ஏற்பட்டு நீர் மாசடைகின்றது. நிலத்தடி நீர் மட்டத்தில் இரசாயன வாயுக்களின் தாக்கம் உருவாகின்றது. இது நீரின் மாசுபடு தலை அதிகரிக்கின்றது.

இவ்வாறான நிலையை போக்க விவசாய முறை யில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும். இர சாயன உரங்களை பாவிப்பதற்குப் பதிலாக இயற்கை உரங்களை பாவித்தல், சொட்டு நீர் பாசனமுறை, தூவல் நீர் பாசன முறைகளை பயன்படுத்தலாம்.

வடக்கில் குழாய்க் கிணறுகள் அமைப்பதை முழுமையாக கட்டுப்படுத்துவதுடன் அதனை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக் கவேண்டும்.

முன்னைய காலங்களில் பொதுமக்கள் காணி களை மரங்களை பயன்படுத்தி அடைத்தனர். இன்றைய நவீன காலத்தில் சிமெந்து மதில்க ளைக் கட்டுகின்றனர். இதனால் மழை நீரின் ஓட்டம் தடுக்கப்படுகின்றது. மழைநீர் வீடுகளுக்குள்ளேயே தேங்கி எவ்வித பயனும் இல்லாமல் போகின்றது என்றார். (5,8)

## அவசரகால...

காக இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட் டது.

நாட்டில் இயல்பு நிலை ஏற்பட்டுள்ள சூழ லில் அவசரகால நிலமையை நீக்குமாறு பல தரப்புக்களும் அழுத்தம் கொடுத்து வருகின்றன. இன்று வியாழக் கிழமை நள்ளிரவுடன் நீக்கப்படும் என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண் டார தெரிவித்திருந்தார்.

இருப்பினும், அரச தலைவர் நாட்டில் இல்லாமையினால், அவர் நாடு திரும்பி அரசிதழில் கையெழுத்திட்ட பின்னரே அவசரகால நிலமை நீக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. சனிக் கிழ மையே நீக்கப்படுவதற்கான சாத்தியங் கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. (5,71)

## ஒரே...

26 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட் டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் இருந்து 15 இலங் கையர்களை ஏற்றிக் கொண்டு சிறப்பு வானூர்தி நேற்றுக் காலை 6.20 மணியளவில் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வந்திறங் கியது. அதேவேளை, சுவிற்சர்லாந்தில் இருந்து 11 இலங்கையர்களை ஏற்றிக் கொண்டு, காலை 9 மணியளவில் மற்றொரு சிறப்பு வானூர்தி கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தை வந்த டைந்தது.

நாடு கடத்தப்பட்ட இலங்கையர்களுடன், இந்த வானூர்திகளில் பெரும் எண்ணிக்கையான ஆஸ்திரேலிய மற்றும் சுவிஸ் பாதுகாப்பு அதி காரிகளும், வந்திருந்ததாக வானூர்தி நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடு கடத்தப்பட்டவர்களில் தமிழர்களும், சிங் களவர்களும் அடங்கியுள்ளனர். இவர்கள், குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் வாக்குமூலங்கள் பெறப்பட்ட பின்னர், விடுவிக் கப்பட்டதாக கூறப்படுகிறது. (5)

## புதுக்குடியிருப்பு...

தவிசாளர் தலைமையில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெற்ற முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கில் ஊர்காவற்றுறை, பூநகரி பிரதேச சபைகளில் மாத்திரம் தொங்கு நிலை ஆட்சி ஏற்படவில்லை. ஏனைய சபைகளில் தொங்கு நிலையே காணப்பட்டது. இருப்பினும், அந்தச் சபைகளின் மொத்த ஆசனங்களில் 50 சதவீ தத்தைப் பெற்றுக் கொண்ட கட்சி ஆட்சி அமைக்க முடியும் என்று தேர்தல்கள் திணைக் களம் தெரிவித்துள்ளது.

அதற்கு அமைவாக வடக்கு மாகாணத்தில், புதுக்குடியிருப்புப் பிரதேச சபையிலும், வவு னியா தெற்கு சிங்களப் பிரதேச சபையிலும், 50 சதவீத ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட கட்சிகள் ஆட்சி அமைக்கவுள்ளன.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையில் மொத்த முள்ள 22 ஆசனங்களில் 11 ஆசனங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள் ளது. அந்தக் கட்சியின் செயலர், தவிசாளராக யாரை அறிவிக்கின்றாரோ அவரது பெயரை தவிசாளராகக் குறிப்பிட்டே அரசிதழ் வெளியா கும். இதனால் அந்தச் சபைகளின் முதலாவது அமர்வு தவிசாளர் தலைமையில் இடம்பெறும். வடக்கில் உள்ள ஏனைய 30 சபைகளின் முத லாவது அமர்வு, உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையிலேயே இடம்பெறும் என்பது குறிப் பிடத்தக்கது. (5,105)

## ரணில்...

இதேவேளை சமூக ஊடகங்கள் மீதான தடை தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு நேற்று மாலை சிறப்பு ஊடக அறிக்கையை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது.

கடந்த சில நாள்களாக சமூக ஊடகங்களை பிழையாகப் பயன்படுத்தி தேசிய ஐக்கியத்துக்கு பாதகமான வகையில் நாடளாவிய ரீதியில் இன வாதத்தையும் வன்முறையையும் தூண்டி வன் முறை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதை தவிர்க்கும் நடவடிக்கையாக சில சமூக ஊடகங் களுக்குள் பிரவேசிப்பதை தற்காலிகமாக மட் டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருந் தது.

இனவாதம், மதவாதம் அல்லது பல்வேறு அடிப் படை வாதங்களை அடிப்படையாகக்கொண்டு வன்முறை நடத்தைகள் வேகமாகப் பரவுவ தற்கு சமூக ஊடகங்களின் தாக்கம் பன்னாட்டு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் நாட்டினதும் மக்களினதும் பாது காப்பை உறுதிப்படுத்தும் செயற்பாடாக தற்கா லிகமாக விதிக்கப்பட்டிருந்த சமூக ஊடகங்க ளின் மீதான தடை காரணமாக கலவரம் மற்றும் வன்முறைகள் வேகமாக பரவுவதைக் கட்டுப்ப டுத்தக் கூடியதாக இருந்தது.

தற்போது ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண் டுள்ள அரச தலைவர் மைத்திரி நாட்டின் பாது காப்பு நிலமைகளை ஆராய்ந்ததன் பின்னர் அரச தலைவரின் செயலருக்கு வழங்கிய அறி வுறுத்தலுக்கு ஏற்ப தேவையான ஒழுங்குபடுத் தல், பாதுகாப்பு மற்றும் சரிபார்த்தல் ஏற்பாடு களை மேற்கொண்டதன் பின்னர் தற்காலிக மாக மட்டுப்படுத்தப்பட்டிருந்த வைபர் ஊடகம் நடைமுறைக்கு வரும் வகையில் மீண்டும் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தற்போது மட்டுப்படுத்தப்பட்டு இருக்கும் சமூக வலைத்தளங்கள் மற்றும் சேவைகள் குறித்து ஆராய்ந்து, வட்ஸ் அப் சேவைக்கு விதிக்கப்பட் டிருக்கும் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு அறிவு றுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களை பிழையாகப் பயன்படுத்தி இனவாதத்தைத் தூண்டி மக்களின் வாழ்க் கையைக் குழப்புவதற்கும், தனிப்பட்டவர்க ளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதை தவிர்ப்பதற் கான ஒழுங்குகளை ஏற்படுத்துதல் போன்றவற் றின் தேவையை மைத்திரி சுட்டிக்காட்டியுள்ளார் என்றுள்ளது. (5,31)

## இலங்கைக்கு...

ஏற்கனவே ஐ.நாவுக்கும், பன்னாட்டுச் சமூகத் தும் வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்றவில்லை. இழுத்தடித்து வருகின் றது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கை தொடர்பில் தனது அதிருப்தியை ஏற்கனவே வெளியிட்டுள்ளார்.

இதற்குமேலாக, இலங்கையில் சிறுபான்மையி னங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை உணர்த்தும் வகையில் அம்பாறை, கண்டிக் கலவரங்கள் நடந்தேறியுள்ளன. இதனால் நாளை இடம்பெறும் பூகோள மீளாய்வுக் கூட் டத் தொடரில் இலங்கை மீதான பன்னாட்டுச் சமூகத்தின் அதிருப்தி வெளிப்படும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. (5)

## வடக்கில்...

வடக்குமாகாணநீர்ப்பாசனத்திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் சுதாகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தின் நீர்வளம் தொடர்பாக, தொண்டமனாறிலுள்ள நீர்ப்பாசனத் திணைக் களத்தில், அணைக்கட்டின் பாதுகாப்பு மற்றும் நீர் வடிகால்கள் உத்தேச திட்டமிடல் பிரிவின் ஏற்பாட்டில் செய்தியாளர்களுக்கு விளக்கம ளிக்கும் கலந்துரையாடல் நேற்று இடம்பெற் றது.


இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரி வித்ததாவது,

வடக்கு மாகாணத்தில் குடிதண்ணீர்ப் பாவனை தொடர்பாக இறுக்கமான சட்ட ஏற்பாடுகள் எவையும் இல்லை. குடிதண்ணீர் பாவனையா ளர்களை எம்மால் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

பொதுமக்கள் நாளாந்தம் எவ்வளவு குடி தண் ணீர் பாவிக்க வேண்டும் என்பது தொடர்பிலோ, குடிதண்ணீர் தொடர்பாக பொதுமக்கள் இழைக் கின்ற குற்றங்களுக்கோ எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. உரிய சட்ட ஏற்பாடுகள் இவற் றுக்கு உருவாக்கப்படவில்லை.

வடக்கில் குடிதண்ணீரின் பெறுமதியை அறியாத பலர் விடுகின்ற பிழைகளுக்கு எம்மால் எதுவும் செய்ய முடியாதுள்ளது. குடிதண்ணீரின் வளத்தை பாதுகாக்க இறுக்கமான சட்டம் உரு வாக்கப்பட வேண்டும். இதனூடாகவே எம்மால் குடிதண்ணீரைப் பாதுகாக்க முடியும் -என்றார். (5,8)

# நோயற்ற வாழ்வு சாத்தியமே



சுத்தமும், சுகாதாரமும் பற்றி எள்ளளவும் கவலைப்படாமல் இருப்பது தான் பல்வேறு விதமான நோய்களுக்கு அடிப்படையான காரணம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். சுத்தம் சோறு போடும் என்றெல்லாம் எமது முன்னோர்கள் அருமையான கருத்துகளை சொல்லியுள்ளார்கள்.

தன் சுத்தம், சுற்றுப்புற தூய்மை பற்றிய புரிதலையும், அவசியத்தையும் குழந்தைப் பருவத்திலிருந்தே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்து வளர்க்க வேண்டும். கண்ட கண்ட இடங்களில் எச்சில் துப்பும் பழக்கம் மிகவும் கெடுதலான செயல். எச்சலில் உள்ள நுண்கிருமிகள் வாயிலாக பல்வேறு தொற்றுநோய்கள் அதனை மிதிப்பவர் களுக்கு உண்டாகின்றன.

இங்கே யாருக்கும் யாரைப் பற்றியும் கவலையும், அக்கறையும் இருப்பதாகத் தெரியவில்லை. தான் மட்டும் வாழவேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி வருவதாகத் தெரிகிறது. புகைப்பிடிப்பவர்களைப் பற்றியும் அவர்களின் அட்டகாசங்களை பற்றியும் நேரில் காண்பவர்களுக்கு நன்கு புரியும்.

அடுத்தவரைப் பற்றியும் பொதுச் சுகாதாரத்தைப் பற்றியும் அக்கறையின்றி செயற்படுவதால் நோய்கள் அதிகமாக உண்டாகின்றன.

குறிப்பாக பொதுக் கழிப்பறைகளின் நிலையும் அதை பயன்படுத்துவோரின் பக்குவமின்மையும் மிகவும் மோசமான உணர்வை உண்டாக்குகிறது. பேருந்து நிலையம் போன்ற இடங்களில் திறந்த வெளியில் செய்யப்படும் அசுத்தம் அனைவரையும் முகம் சுளிக்க வைத்து விடுகிறது. சுத்தம் சுகம் தரும் என்பதை அனைவரும் உணர்ந்து செயற்பட்டால் நோயற்ற வாழ்வு அனைவருக்கும் சாத்தியமே

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 1000 | 900 | 900 |
| நண்டு | 400 | 500 | 500 | 300 |
| கணவாய் | 600 | 800 | 800 | 1000 |
| பாரை | 500 | 650 | 600 | 900 |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 300 | 450 | 500 | 500 |
| விளை | 400 | 450 | 500 | 800 |
| முரல் | 300 | 400 | 400 | 500 |
| கும்பிளா | 300 | 350 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | 400 | 500 | – |
| ஒரா | 300 | 300 | 600 | 400 |
| திரளி | 200 | 200 | 300 | 200 |
| நகரை | 200 | 300 | 400 | – |
| சூடை | 100 | 180 | 160 | 150 |
| ஒட்டி | 100 | 250 | 300 | – |
| திருக்கை | 300 | 300 | 400 | 300 |
| மதனம் | 150 | 250 | 300 | – |
| கொய் | 100 | 100 | 80 | 100 |
| பாலை | 200 | 300 | 500 | 500 |
| வாளை | 150 | 350 | 400 | – |



## குழந்தைகளுக்கு சத்தான

# பாதாம் பால்

**தேவையான பொருள்கள்**

பால் - ஒரு கோப்பை
பாதம் - 10
முந்திரி - 5
ஏலக்காய் - ஒன்று
பனங்கற்கண்டுத்தூள் - தேவையான அளவு

**செய்முறை**

பாதாம், முந்திரியை சிறிது பாலில் அரை மணி நேரம் ஊற வைக்கவும்.

நன்றாக ஊறியதும் மிக்சியில் விழுதாக அரைத்து எடுக்கவும்.

அடி கனமான பாத்திரத்தில் பாலை ஊற்றி காய்ச்ச வும். பால் நன்றாக கொதிக்க ஆரம்பித்தவுடன் அதில் அரைத்த விழுது, பனங்கற்கண்டு, ஏலக்காய் சேர்த்து கொதிக்க வைத்து இறக்கி சூடாகப் பருகலாம்.

இரவில் தூங்குவதற்கு முன்பு பருகினால் நல்ல தூக்கம் வரும்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| கத்தரி | 40 | 80 | 60 | 50 | 60 |
| முள்ளங்கி | 50 | 50 | 30 | 60 | 40 |
| மரவள்ளி | 50 | 40 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 40 | 120 | 80 | 80 | 80 |
| பாகல் | 100 | 200 | 100 | 120 | 120 |
| க.கிழங்கு | – | 60 | 50 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 90 | 140 | 120 | 90 | 80 |
| சி.வெங்காயம் | 140 | 150 | 80 | 120 | 120 |
| பூசணி | 40 | 50 | 50 | 40 | 40 |
| தக்காளி | 30 | 60 | 20 | 30 | 40 |
| வாழைக்காய் | 60 | 70 | 70 | 40 | 60 |
| கீரை | 40 | 30 | 30 | 10 | 20 |
| பொன்னாங்காணி | 50 | 30 | 30 | 35 | 20 |
| ப.மிளகாய் | 60 | 100 | 60 | 50 | 60 |
| புடோல் | 80 | 70 | 70 | 80 | 50 |
| கோவா | 40 | 70 | 80 | 40 | 40 |
| வெண்டி | 60 | 100 | 80 | 80 | 80 |
| போஞ்சி | 120 | 150 | 120 | 120 | 80 |
| லீக்ஸ் | 160 | 160 | 140 | 140 | 120 |
| தேங்காய் | 70 | 80 | 90 | 100 | 60 |
| உ.கிழங்கு | 60 | 70 | 70 | 70 | 80 |
| தேசிக்காய் | 80 | 40 | 50 | 40 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 35 | 20 | 15 |
| கறிமிளகாய் | 80 | 120 | 150 | 150 | 100 |
| கரட் | 100 | 130 | 80 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 600 | – | 500 | 300 | 300 |

## மரண அறிவித்தல்



**தம்பிஐயா பத்மநாதன்**

நீர்வேலி தெற்கு நீர் வேலியை வசிப்பிட மாகக் கொண்ட தம்பி ஐயா பத்மநாதன் நேற்று (14.03.2018) புதன் கிழமை காலமானார்.

அன்னார் தயாவதியின் அன்புக்கணவரும் தனஞ்செயன் (LOLC- வவுனியா கணக்காளர்), அனோஜா ஆகியோரின் அன்புத்தந்தையும் மனோகரன், திருநாவுக்கரசு சரஸ்வதி (கனடா), மகேந்திரன் மல்லிகைபுஸ்பம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் Dr. காயத்திரி, தர்மலிங்கம் குபேந்திரன் (பிராந்திய முகாமையாளர், Union Assurance) ஆகியோரின் அன்பு மாமனும் சி.லோகிதன், சி.திலகவதி, ம.மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் கு. மோகலயா, கு. குக்சாயினி, த. அபிஜித் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2018) வியாழக்கிழமை பி.ப. 1.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி தெற்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தனஞ்செயன் 077 342 3678,
குபேந்திரன் 077 342 2722

தகவல்:
குடும்பத்தினர்.




இது புதுசு

பெண்களுக்கான கைப்பை வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகி யுள்ளன. இவை இரண்டாயிரத்து 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.




## தெ.ஆபிரிக்காவை தோற்கடிப்பதற்கு சதங்கள் தேவை

### சொல்கிறார் சிமித்

"தென்னாபிரிக்க அணியை வீழ்த்துவதற்கு ஆஸ்திரேலிய அணிக்கு சதங்கள் தேவைப்படுகின்றன" என்று தெரிவித்தார் அந்த அணியின் தலைவரான சிமித். தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி, இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் படுதோல்வியடைந்தது. இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த நிலையில் இந்த ஆட்டம் தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே சிமித் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்தத் தொடரில் இதுவரை ஆஸ்திரேலிய வீரர்கள் எவரும் சதம் பெறவில்லை. இது சரியானது இல்லை. அடுத்தடுத்த . ஆட்டங்களில் நாங்கள் சதங்களைப் பெற வேண்டும். அதற்கு முயற்சிக்க வேண்டும்" என்று சிமித் மேலும் தெரிவித்தார். (ம)

# 900 புள்ளிகளுடன் ரபாடா முதலிடத்தில்



பன்னாட்டு கிரிக்கெட் சபையின் டெஸ்ட் ஆட்டங்களுக்கான பந்துவீச்சுத் தரப்படுத்தலில் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரபாடா முதலிடம் பிடித்தார். 900 புள்ளிகளைக் கடந்துள்ளார் அவர். இந்த இமாலய அடைவை எட்டிய தென்னாபிரிக்காவின் நான்காவது வேகப்பந்து வீச்சாளராகவும் ரபாடா உள்ளார்.

902 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார் ரபாடா. இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் 887 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். இந்திய அணியின் சகலதுறை வீரர் ஜடேயா 844 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார். இந்திய அணியின் பிறிதொரு வீரரான அஸ்வின் 804 புள்ளிகளைப் பெற்று நான்காவது இடத்திலும், ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஹசில்வூட் 796 புள்ளிகளைப் பெற்று ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே வாக்நெர், கேரத், பிளன்டர், ஸ்ராக், லையன் ஆகியோர் உள்ளனர்.

டெஸ்ட் தரப்படுத்தலில் 900ஆயிரம் புள்ளிகளைப் பெறுவதென்பது அரிதிலும் அரிது. இந்த மைல்கல்லை எட்டிய 23ஆவது பந்துவீச்சாளராக தன்னைப் பதிவுசெய்தார் ரபாடா. அதேநேரம் 900 புள்ளிகள் என்ற மைல்கல்லை எட்டிய தென்னாபிரிக்காவின் நான்காவது வேகப்பந்து வீச்சாளராகவும் ரபாடா மாறியுள்ளார். பிளன்டர் (912 புள்ளிகள்), பொலக் (909 புள்ளிகள்), ஸ்ரெய்ன் (909 புள்ளிகள்) ஆகியோர் இந்த அடைவை எட்டிய ஏனைய பந்துவீச்சாளர்களாக உள்ளனர். (ம)

# சமிக்கு டோனி ஆதரவு

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சமி, சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்று குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ள நிலையில், இந்தக் குற்றச்சாட்டை ஏற்க மறுத்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் டோனி.


சமி மீது அண்மைக்காலமாக தொடர்ந்து பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வந்தார் அவரது மனைவி ஹசின். டுபாய் சென்று அங்கு பாகிஸ்தான் பெண் ஒருவரைத் தொடர்புகொண்டு சமி ஆட்ட நிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்று அவர் தெரிவித்திருந்தார். ஹசினின் முறைப்பாடு தொடர்பில் ஊழல் தடுப்புக் குழு விசாரணை நடத்தி வருகிறது. இதையடுத்து சமிக்கு தனது ஆதரவைத் தெரிவித்தார் டோனி.

"எனக்கு தெரிந்தவரை சமி ஒரு நல்ல மனிதர். அவரால் தனது நாட்டையும், மனைவியையும் ஏமாற்ற முடியாது. இது அவரது தனிப்பட்ட வாழ்க்கை. இதற்கு மேல் நாம் தலையிட முடியாது" என்று டோனி மேலும் தெரிவித்தார். (ம)



# ஐ.பி.எல். என்பது துடுப்பாட்டத்துக்கு மட்டுமானதல்லவே

### நெக்ரா அழுத்தம் திருத்தம்




"ஐ.பி.எல். தொடர் என்பது துடுப்பாட்ட வீரர்களுக்கு மட்டுமான தொடர் இல்லை. அது பந்துவீச்சாளர்களுக்கும் உரித்தானது" என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் நெக்ரா.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் மூன்று வாரகாலம் உள்ளது. அது தொடர்பான கருத்துப் பரிமாற்றங்கள் தற்போதிருந்தே இடம்பெற்றுவருகின்றன. இந்த நிலையில்; தொடர் தொடர்பாக இந்திய ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே நெக்ரா இவ்வாறு தெரிவித்தார்.

"ஐ.பி.எல். தொடரைப் பொறுத்த வரையில். அது துடுப்பாட்ட வீரர்களுக்கான ஆட்டம் என்ற எண்ணவோட்டமே காணப்படுகிறது. அது தவறு. பந்துவீச்சாளர்களுக்கும் உரிய அங்கீகாரமாக இந்தத் தொடர் பார்க்கப்பட வேண்டும். ஒரு பந்துவீச்சாளர் 4 பந்துப்பரிமாற்றங்களை வீசி 30 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து மூன்று அல்லது நான்கு இலக்குகளைக் கைப்பற்றினால் அது மிகச் சிறந்த பெறுபேறே" என நெக்ரா மேலும் தெரிவித்தார். (ம)

# செரீனா வில்லியம்ஸை வெளியேற்றினார் வீனஸ்



அமெரிக்க ரென்னிஸ் தொடருக்கான தயார்ப்படுத்தல் தொடராகக் கருதப்படும் இந்தியன் வேல்ஸ் தொடரில், தனது தங்கையான செரீனா வில்லியம்ஸை வெளியேற்றினார் வீனஸ் வில்லியம்ஸ்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் செரீனா வில்லியம்ஸை எதிர்த்து வீனஸ் வில்லியம்ஸ் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது.

முதலாவது செற்றை 3:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் வீனஸ் வில்லியம்ஸ். அவர் தொடர்ந்தும் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்தி இரண்டாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். இதையடுத்து 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று செரீனா வில்லியம்ஸை வெளியேற்றினார் வீனஸ் வில்லியம்ஸ். இவர்கள் இருவரும் இதுவரை 30 ஆட்டங்களில் மோதியுள்ளனர். அவற்றில் வீனஸ் 13 ஆட்டங்களிலும், செரீனா 17 ஆட்டங்களிலும் வெற்றிபெற்றுள்ளனர். (ம)

# கூடைப்பந்தாட்டக் கழகங்களை பதிவுசெய்யுமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாணம் மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் விரைவில் தொடரொன்றை நடத்தவுள்ளது. எனவே ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டுள்ள கழகங்கள் தத்தம்து பதிவுகளை புதுப்பிக்குமாறும், புதிதாக இணைய விரும்பும் கழகங்கள் தத்தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-422)

# அன்ரனிஸ், றோயல் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், மார்ச் 15
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சென். அன்ரனிஸ், றோயல் அணிகள் வெற்றிபெற்றன.
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி திருமகள் விளையாட்டுக் கழக அணி மோதியது. 5:2 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாச்சிமார் கோவிலடி சிறி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



# கிளிநொச்சி ம.வித்தி. இறுதிக்குச் சென்றது

யாழ்ப்பாணம், மார்ச் 15
கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்திவரும் துடுப்பாட்டத் தொடரில், கிளிநொச்சி மகா வித்தியாலய அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.
கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 46.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சங்கீதன் 46 ஓட்டங்களையும், டிலக்சன் 39 ஓட்டங்களையும், சாத்வீகன் 36 ஓட்டங்களையும், தமிழ்விழியன்21 ஓட்டங்களையும் சாரணியன் 20 ஓட்டங்களையும், பிரகாஸ் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் நிவேதன் 4 இலக்குகளையும், விஜசீலன், றொபின்சன் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தர்மபுரம் மத்திய கல்லூரி அணி 43.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 172 ஓட்டங்களை மட்டும் பெற்றது. 87 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது கிளிநொச்சி மகா வித்தியாலய அணி. அதிகபட்சமாக நிவேந்திரன் 44 ஓட்டங்களையம், டினோராஜ் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் பிரகாஸ் 3 இலக்குகளையும், சங்கீதன். சாத்வீகன் 2 இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 15
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குப்பிளான் ஸைஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரணவாய் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளாது. (ம-23)

# மன்னார் கல்வி வலய தடகள ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 15
மன்னார் கல்வி வலயத்தின் நடப்பு வருடத்துக்கான தடகளத் தொடரின் ஆரம்ப நிகழ்வு மன்னார் கல்விவலயப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்ரியன் தலைமையில் முருங்கன் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. ஆரம்பநாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், மதிப்புறு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் விஸ்வநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

# முல்லை பளுதூக்கலில் துணுக்காய் முதலிடம்

முல்லைத்தீவு மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவால் நடத்தப்பட்ட பளுதூக்கல் தொடரில் ஆண்கள் பிரிவில் துணுக்காய் பிரதேச செயலக அணி முதலிடம் பிடித்தது. முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. இரண்டாமிடத்தை மாந்தை கிழக்குப் பிரதேச செயலக அணி பெற்றது. (ம-422)

# பளுதூக்கலில் துணுக்காய் முதலிடம்

யாழ்., மார்ச் 15
முல்லைத்தீவு மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவால் நடத்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பளுதூக்கலில் துணுக்காய் பிரதேச செயலக அணி முதலிடத்தைப் பிடித்தது. முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டி நடைபெற்றது. பெண்களுக்கான பளுதூக்கலில் துணுக்காய் பிரதேச செயலக அணி முதலாமிடத்தையும் மாந்தை கிழக்குப் பிரதேச செய லக அணி இரண்டாமிடத்தையும் பெற்றன. (ம-422)






தேசிய மட்ட புட்சல் தொடரில், 14 வயதுப் பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது. கொழும்பு உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் பன்னாட்டு பிரிட்டிஷ் கல்லூரி அணியை எதிர்த்து 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது சென். பற்றிக்ஸ். (ம)

# கொமர்சல் கிரெடிற் வென்றது

யாழ்ப்பாணம், மார்ச் 15
செவன் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய வங்கிகள், நிதி நிறுவனங்களுக்கு இடையிலான மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் நெல்லியடி கொமர்சல் கிரெடிற் அணி கிண்ணம் வென்றது.
மானிப்பாய், அட்டகிரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் நெல்லியடி கொமர்சல் கிரெடிற் அணியை எதிர்த்து ஏசியா அசெட் கிளைகள் அணி மோதியது.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொமர்சல் கிரெடிற் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 2 இலக்குகளை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக றஜீவன் 43 ஓட்டங்களைப் பெற்றார்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஏசியா அசெட் கிளை அணி சகலஇலக்குகளையும் இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரதீபன் 41 ஓட்டங்களைப் பெற்றார். இதையடுத்து கொமர்சல் கிரெடிற் அணி 18 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (ம-23)

# கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் கபடியில் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 15
வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கபடித் தொடரில், 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலய அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி 37:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி பெற்றது. (ம-422)



## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கரப்பந்தாட்டத்தில் சம்பியனானது



யாழ்ப்பாணம், மார்ச் 15
யாழ்ப்பாணக் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில், 20 வயது பெண்கள் பிரிவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியை எதிர்த்து அத்தியார் இந்துக் கல்லூரி அணி மோதியது. முதலாவது செற்றை 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது அத்தியார் இந்து கல்லூரி அணி. ஆனால் அடுத்த இரண்டு செற்களிலும் ஆதிக்கம் செலுத்திய கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணி 25:16, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது. மூன்றாமிடத்தை புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி பெற்றது. (ம-422)

## அத்லெட்ரிகோ மட்ரிட் அபாரம்

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அத்லெட்ரிகோ மட்ரிட் வெற்றிபெற்றது.
அத்லெட்ரிக்கோ மட்ரிட்டை எதிர்த்து செல்டா விகோ மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் அத்லெட்ரிகோ மட்ரிட் வெற்றிபெற்றது. கிறிஸ்மன், விட்டொலோ, கொரேரா ஆகியோர் அத்லெட்ரிகோ மட்ரிட்டின் சார்பாகக் கோல்களைப் பதிவு செய்தனர். (ம)

# முத்தரப்பு ரி-20யில் இறுதிக்கு இந்தியா



முத்தரப்பு ரி-20 தொடரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பங்களாதேஷ் வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது இந்திய அணி.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக ரோகித் சர்மா மற்றும் தவான். 6.1 பந்துப்பரிமாற்றங்களில் இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எடுத்தது இந்திய அணி. அணி 70 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் தவான். இந்த 35 ஓட்டங்களுக்காக அவர் 27 பந்துகளை எடுத்துக் கொண்டார். 10 பந்துகள் குறைவாக இந்த ஓட்டத்தை அவர் பெற்றிருக்க வேண்டும். ரெய்னா, ரோகித் இருவரும் இணைந்து சிறந்த ஆட்டத்தை வழங்கினர். அரைச்சதம் கடந்தார் ரோகித். இருவரும் அடித்தாடினர். இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டன. 47 ஓட்டங்களுடன் ரெய்னாவும், 89 ஓட்டங்களுடன் ரோகித்தும் ஆட்டமிழக்க இந்திய அணி 3 இலக்குகளை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ரூபல் ஹொசைன் இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்ப வீரர் டாஸ் 7 ஓட்டங்களுடனும், முன்னணி வீரர் சர்க்கர் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். தமீம் இக்பால் ஓரிரு பவுண்டரிகளைப் பதிவுசெய்தார். அவர் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்தியாவின் பக்கம் வெற்றிக்காற்று வீசத் தொடங்கியது. எனினும் ரகிம், ரகுமான் இருவரும் நிலைத்து நின்றனர். ஆனால் இலங்கைக்கு எதிராக வெளிப்படுத்திய அதிரடியை இந்தியாவுக்கு எதிராக அவர்களால் வெளிப்படுத்த இயலவில்லை. ரகுமான் தான்பெற்ற 27 ஓட்டங்களுக்காக 23 பந்துகளை எதிர்கொண்டார். ரகிம், தான்பெற்ற 72 ஓட்டங்களுக்காக 68 பந்துகளை எதிர்கொண்டார். இவ்வாறான அளவுக்கு அதிகமான நிதானமும் பின்னடைவாக அமைய 159 ஓட்டங்களை மட்டுமே பங்களாதேஷால் பெற முடிந்தது. 17 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது இந்தியா. (ம)

## சான்ட்நெர் விலகினார்

### சென்னைக்கு பின்னடைவு

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகினார் சென்னை சுப்பர் கிங்ஸுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தவரான மிச்செல் சான்ட்நெர்.
இங்கிலாந்துக்கு எதிராக அண்மையில் முடிவடைந்த தொடரில், சான்ட்நெர் காயமடைந்தார். மருத்துவப் பரிசோதனையில் அவருக்கு முழங்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தமை தெரிய வந்தது. அவர் 9 மாதங்கள் கட்டாய ஓய்வில் இருக்க வேண்டும் என்று நியூசிலாந்து மருத்துவக் குழு அறிவுறுத்தியுள்ளது. இதனால் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. சான்ட்நெர் மிகவும் சிக்கனமான இடதுகை பந்துவீச்சாளர். அவர் நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் டோனியின் வலது கரமாகச் செயற்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. டோனிக்கும் வேகப்பந்து வீச்சை விடவும் சுழல்பந்து வீச்சின் மட்டில்தான் நம்பிக்கை அதிகம். ஆக, சான்ட்நெர் டோனிக்கு இன்றியமையாதவராக இருப்பார் என்று கருதப்பட்ட நிலையில் அவரின் விலகல் பின்னடைவே. (ம)



## மன்செஸ்டர் சிற்றி. இலகுவான வெற்றி



இங்கிலாந்துக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்செஸ்டர் சிற்றி வென்றது.
ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் மன்செஸ்டரின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் சில்வா. வேறெந்த கோலும் முதல் பாதியில் பதிவாகவில்லை. ஆட்டத்தின் 54ஆவது நிமிடத்தில் சில்வா மற்றொரு கோலைப் பதிவு செய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது மன்செஸ்டர் சிற்றி. (ம)

கார் விற்பனைக்கு
MARUTI --- MAKE
ALTO --- MODEL
SILKY SILVER --- COLOUR
Registration No. - NPKT XXXX
தொடர்பு - 077 316 4549

பதவி வெற்றிடம்
புதியதோர் எதிர்காலத்தை நோக்கி!...
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தினருக்கான பயிற்சியுடன்கூடிய பதவி வெற்றிடங்கள் 16 பேர் மட்டும்.
ஆரம்பம் 17,500/= - 55,000/=
வயதெல்லை 18 - 30.
இன்றே அழைக்க, 076 666 8385
தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.